இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 32

சுடர் 32 | கதிர் 186 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 17 புதன்கிழமை 31.05.2017

## யாழ்ப்பாண அவிருத்திக்கு பெரும் சவால்

*நிதி இருந்தும் கனியவளம் இன்மையால் தடை என மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், மே 31
நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளபோதும் அபிவிருத்திப் பணிகளுக்கான கனிய வளங்கள் இல்லாமையால் மாவட்டத்தின் அபிவிருத்தியில் பெரும் சவாலை எதிர் >> 29

## மணல் தட்டுப்பாட்டை நீக்க விரைவான தீர்வு வேண்டும்

*யாழ். ஒருங்கிணைப்புக் குழுவால் அவசர தீர்மானம் நிறைவேற்றம்*

யாழ்ப்பாணம் மே 31
'யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான மணலைப் பெற்றுக்கொள்வதற்குக் கொழும்பு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்' >> 29

## புகைக்க 33 கோடி ரூபா குடிக்க 30 கோடி ரூபா

*இலங்கையரின் நாளாந்தச் செலவு இது; புகையால் 72 பேரும் குடியால் 65 பேரும் தினமும் உயிரிழப்பு*

கொழும்பு, மே 31
இலங்கையர்கள் நாளொன்றுக்குச் சிகரட் புகைப்பதற்காக 33 கோடி ரூபாவையும் மது அருந்துவதற்காகச் சுமார் 30 கோடி ரூபாவையும் செலவிடுகின்றனர் என்ற அதிர்ச்சித் தகவல் அறிக்கைகள் மூலம் வெளியாகியுள்ளது.
அத்துடன் புகைத்தலால் நாளொன்றுக்கு 72 பேரும், மதுவினால் 65 பேரும் கொல்லப்படுகின்றனர் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
பொதுமக்களிடமிருந்து புகைத்தல் மூல >> 29

## இயற்கை இடர் உயிரிழப்பு 194

யாழ்ப்பாணம், மே 31
இயற்கை இடரினால் உயிரிழந்த 194 பேரின் உடலங்கள் நேற்று மாலை வரையில் மீட்கப்பட்டுள்ளன. 63 பேர் காயமடைந்துள்ளதுடன், 99 பேர் காணாமற் போயுள்ளனர் என, இடர் முகாமைத்துவ மைய நிலையம் குறிப்பிட்டுள்ளது. (த-5)
(முன்னர் வந்த செய்தி 11 ஆம் பக்கம்)

## புகைத்தலுக்கு எதிரான செயற்றிட்டம் இன்று நாடு முழுக்க ஆரம்பம்

கொழும்பு, மே 31
புகைத்தலுக்கு எதிரான பன்னாட்டு தினத்தை முன்னிட்டு கொடிச் செயற்றிட்டம் இன்று தொடக்கம் எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் கடைப்பிடிக்கப்படவுள்ளது.
சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் கொடிச் செயற்றிட்டத்தின் முதலாவது கொடி, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்று முற்பகல் அரச தலைவர் செயலகத்தில் வைத்து அணிவிக்கப்பட்டது.
(விரிவு பக்கம் - 09)

## முதலாம் தர மாணவர் அனுமதி விண்ணப்பம் நாளை வெளிவரும்

யாழ்ப்பாணம், மே 31
அரச பாடசாலைகளுக்கு அடுத்த ஆண்டு, முதலாம் தரத்திற்குப் புதிய மாணவர்களை இணைத்துக் கொள் >> 29

## சிறுப்பிட்டி மயான விவகாரம்: மதிலை உடைத்த அனைவரையும் அதிரடிப் படையினரின் உதவியுடன் கைது செய்ய நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், மே 31
சிறுப்பிட்டியில் அமைந்துள்ள கிந்துப்பிட்டி மயான விவகாரத்தில், அங்கு மயானம் இருக்கக்கூடாது என்று கூறுபவர்க >> 27

## புதுக்குடியிருப்பு விபத்தில் ஒருவர் சாவு

முல்லை, மே 31
புதுக்குடியிருப்பு- ஒட்டுசுட்டான் வீதியில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டு ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் >> 27



காணாமற்போனோரின் உறவினர்கள்

# ரணிலைச் சந்திக்க மறுப்பு மைத்திரியுடன் பேச முடிவு

*ஏ9 நெடுஞ்சாலைப் போக்குவரத்தை 6மணி நேரம் துண்டித்து கிளிநொச்சியில் நேற்றுப் பெரும் போராட்டம்*

யாழ்ப்பாணம், மே 31
காணாமற்போனவர்கள் உயிருடன் இல்லை என்று கூறிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்கமாட்டோம் என்று கூறிய காணாமற்போனோரைத் தேடும் உறவுகள், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சந்தித்துப் பேச்சு நடத்துவதற்காக விடுத்த அழைப்பை ஏற்றுத் தமது ஏ9 தேசிய நெடுஞ்சாலை மறியல் போராட்டத்தை நேற்று முடி >> 29

## இந்துக் கோவிலுக்கு ஒரு சட்டம் விகாரைக்கு வேறொரு சட்டமா?

*வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி*

யாழ்ப்பாணம் மே 31
"பிள்ளையார் ஆலயத்துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யும் பிரதேச சபை சட்டவிரோதமாக அமைக்கப்படும் விகாரைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யத் தயங்குவது ஏன்? பிள்ளையார் கோவிலுக்கு ஒரு சட்டம் பௌத்த விகாரைக்கு ஒரு சட்டமா? "
இவ்வாறு வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா கேள்வி எழுப்பினார்.
யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் யாழ். >> 26

## துயிலும் இல்லங்களை பிரதேச செயலகங்கள் பராமரித்தல் அவசியம்

*ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சிறிதரன் எம்.பி. கோரிக்கை*

யாழ்ப்பாணம் மே 31
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் தியாகி திலீபனின் நினைவுத் தூபி போன்றவற்றை மீளப் புனரமைத்துப் பிரதேச செயலகங்கள் பராமரிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கோரிக்கை விடுத்தார்.
யாழ்ப்பாண மாவட்ட >> 29

## மூதூர் பாலியல் வதை: சிறப்புப் பொலிஸ் குழு அமைத்து விசாரியுங்கள்

*பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு கிழக்கு முதலமைச்சர் பணிப்புரை*

திருகோணமலை, மே 31
திருகோணமலையில் 3 சிறுமிகள் பாலியல் வதை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சிறப்புப் பொலிஸ் குழுவொன்றை நியமித்து >> 26

## பிரபாகரனோ இல்லை காணாமற்போனோரை யாரிடம் போய் கேட்பது?

*கேள்வி எழுப்புகிறார் வடக்கு ஆளுநர்*

யாழ்ப்பாணம், மே 31
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இப்போது இல்லை. அப்படியானால் காணாமற்போனவர்களை யாரிடம் போய் கேட்பது?
இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் >> 29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார்கள் பாலியல் வதை ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 31
வீட்டுக்கு அடுத்ததாக சிறார்களின் பாதுகாப்பு இடமாகக் கொள்ளப்படும் பாடசாலையில் வைத்து மாணவிகள் பாலியல் வதைக்கு உட்படுத்தியமைக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மூதூர் கல்வி வலயத்துக்குட்பட்ட தெருவெளி அ.த.க பாடசாலையில் கல்வி கற்கும் மூன்று மாணவிகள் மீது பாலியல் துர்நடத்தை மேற்கொள்ளப்பட்டமையை இலங்கை ஆசிரியர் சங்கம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது. அதில் ஈடுபட்ட குற்றவாளிகள் சட்டத்தின் முன் எவ்வித பாரபட்சமுமின்றி தண்டிக்கப்படவேண்டும்.

பெற்றோருக்கு அடுத்தபடியாக பாதுகாப்பான இடமாகக் கருதப்படும் பாடசாலைகளில் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வது பாடசாலைகளின் பாதுகாப்பு தொடர்பான நம்பிக்கைத் தன்மையைச் சிதைவடையச் செய்கின்றன. எனவே பாடசாலைகளின் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு எந்தவித பாரபட்சமுமின்றி அதி உச்சத் தண்டனைகள் வழங்கப்படவேண்டும் என்றுள்ளது. (வ-4)

*3 சிறுமிகள் மீது பாலியல் வதை;*

# குற்றவாளிகளை தண்டிக்கும்வரை பாடசாலைகளுக்கு செல்லமாட்டோம்

## மூதூர்ப் பாடசாலைகளின் மாணவர்கள் திட்டவட்டம்

திருகோணமலை, மே 31
மூதூரில் மூன்று பெண் குழந்தைகளைப் பாலியல் ரீதியில் வதைத்த குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும்வரை பாடசாலைகளுக்குச் செல்லமாட்டோம் என மூதூர்ப் பகுதி பாடசாலைகளின் மாணவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

மூதூரில் உள்ள 10 பாடசாலைகள் நேற்று இயங்கவில்லை. தமது கோரிக்கை நிறைவேறும் வரை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாது போராடி வருகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெரியவெளி மல்லிகைத்தீவில் அறநெறி வகுப்புக்குச் சென்ற மூன்று பாடசாலை மாணவிகள் பாலியல் ரீதியில் வதைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் முஸ்லிம் இளைஞர்கள் நால்வர் கைது செய்யப்பட்டனர். இவர்களை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பாலியல் ரீதியில் வதை புரிந்தவர்களுக்கு உரிய தண்டனை கிடைக்கக் கோரி நேற்று முன்தினம் திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியைச் சுமார் 5 மணித்தியாலங்களுக்கு மேல் இடைமறித்து மல்லிகைத் தீவுச் சந்தியில் பாடசாலை மாணவர்கள், கிராம மக்கள் இணைந்து கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கண்டனப் போராட்டத்தின்போது, 3 தினங்களுக்குள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கைது செய்து உரிய தண்டனை வழங்காவிட்டால் எமது பிள்ளைகளைப் பாதுகாப்பாகப் பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாது எனப் பெற்றோர் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேற்று மூதூர் தெற்கு பட்டித்திடல் மகா வித்தியாலயம், மல்லிகைத் தீவு மகா வித்தியாலயம், பெரியவெளி அ.த.க. வித்தியாலயம், மணற்சேனை விவேகானந்தா வித்தியாலயம் மற்றும் மூதூர் கிழக்கு .சேனையூர் மத்தியகல்லூரி, கட்டைப்பறிச்சான், சம்பூர், சூடைக்குடா உள்ளிட்ட 10 பாடசாலைகள் இயங்கவில்லை. மாணவர்கள் சமூகம் தராத காரணத்தால் பாடசாலைகள் இயங்கவில்லை என ஆசிரியர்கள் தெரிவித்தனர். (த-10-40)



# காலநிலை சீரானதும் அரசைக் கவிழ்ப்போம்

*கூறுகிறார் கம்மன்பில*

யாழ்ப்பாணம், மே 31
துரதிர்ஷ்டவசமாக நாட்டில் ஏற்பட்டுள்ள அவல நிலை சீரானதும் கூட்டு அரசைக் கவிழ்ப்பதற்கான தங்களது நடவடிக்கை ஆரம்பமாகுமென தூய ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்திருக்கிறார்.

பத்தரமுல்லயிலுள்ள கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசு பதவிக்கு வந்தது முதல் இதுவரை உருப்படியாக எதுவும் நடக்கவில்லை. நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. சட்டமும் ஒழுங்கும் காணாமல்போய்விட்டன. ஊழலும் அராஜகமும் தலைவிரித்தாடுகின்றன.

மக்கள் நாளுக்குநாள் விரக்தியில் தள்ளப்படுகிறார்கள். இந்த அரசு பதவியில் இருக்கும்வரை நாட்டுக்கு விமோசனம் கிடைக்காது. எனவே, அந்த அரசைக் கவிழ்த்தேயாகவேண்டும் என்றார். (த-5)

# தேர்தல்கள் ஒத்திவைப்பு பெரும் ஜனநாயக அநீதி

*ஆணையகத்திடம் பவ்ரல் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், மே 31
பல்வேறு காரணங்களைக் காட்டி உள்ளூராட்சித் தேர்தல்களை அரசு ஒத்திவைத்துக் கொண்டிருப்பது ஜனநாயகத்துக்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதி என்று பவ்ரல் அமைப்பு தேர்தல்கள் ஆணையகத்துக்குக் கடிதம் மூலம் கண்டனம் தெரிவித்துள்ளது.

பலமுறை ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்லை மீண்டும் ஒத்திவைக்க ஏற்பாடுகள் நடந்துவருவதை ஊகிக்க முடிகின்றது. இவ்வாறு செய்வதால் மக்களின் ஜனநாயக உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டு வருவதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்லை நிர்ணயத்தைக் காரணங்காட்டி இந்தத் தேர்தல் பலமுறை ஒத்திவைக்கப்பட்டது. அந்தப் பிரச்சினை முடிந்த பின் அது தொடர்பான வர்த்தமானிப் பிரசுரம் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலமை மேலும் தொடராமல் உடனடியாகத் தேர்தல் நடத்தப்படவேண்டுமென அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள தாக பவ்ரல் அமைப்பின் பேச்சாளரொருவர் தெரிவித்தார். (த-5)

# ஏ-9 வீதியில் இரவு நடந்து சென்றவரே விபத்தில் சாவு

*இரண்டு சாரதிகள் கைது*

யாழ்ப்பாணம், மே 31
கனகராயன்குளம் ஏ9 வீதியில் நேற்று முன்தினம் இரவு நடந்து சென்ற ஒருவர் விபத்தில் உயிரிழந்த சம்பவத்தில் இரு வாகனங்களின் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கனகராயன்குளம் நகரப் பகுதியில் ஏ9 வீதி ஊடாகக் குறித்த நபர் நடந்து சென்றுகொண்டிருந்தபோது வாகனங்களால் மோதப்பட்டு உயிரிழந்தார் எனக் கூறப்பட்டது.

முள்ளியவளை 03 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிங்கமுத்து கருணேஸ்வரன் (வயது 59) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். குறித்த விபத்து நடந்த இடத்துக்குச் சென்ற கனகராயன்குளம் பொலிஸார், விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிள் மற்றும் ஹைஏஸ் வாகனங்களின் சாரதிகளைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-101)



# விநாயகமூர்த்தியின் உடல் நேற்றுத் தீயுடன் சங்கமம்

யாழ்ப்பாணம், மே 31
யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த சட்டத்தரணியுமான அ.விநாயகமூர்த்தியின் உடலம் நேற்றுச் சாவகச்சேரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியை நிகழ்வுகள் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனம் செய்யப்பட்டது.

சுகவீனமடைந்திருந்த விநாயகமூர்த்தி கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

அவரது உடலம் கொழும்பில் ஜெயரட்ண மலர்ச்சாலையில் முதலில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டிருந்தது. நேற்றுச் சாவகச்சேரி நகரப் பகுதியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது அரசியல் பிரமுகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து உடலம் கொக்குவிலில் உள்ள அவரது வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அங்கு நாடாளுமன்ற உறுப்பினரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் அஞ்சலியுரைகள் இடம்பெற்றன.

குறித்த அஞ்சலி உரைகளில் வடக்கு மாகாண ஆளுநர் , இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா , தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி , தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் த.சித்தார்த்தன், மாத்தனை ஆலயத் தர்மகத்தா, தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் ந.சிறிக்காந்தா, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச் சந்திரன், வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா உள்ளிட்ட பலரும் அஞ்சலி உரையாற்றினர்.

இறுதி ஊர்வல நிகழ்வுகளில் விநாயகமூர்த்தியின் உறவுகள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (த-4-9-101)

# மண் சரிவு எச்சரிக்கையை உதாசீனப்படுத்திய மக்கள்

*இதனாலேயே அதிக உயிரிழப்பு என்கிறார் அமைச்சர் ராஜித*

யாழ்ப்பாணம், மே 31
மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகள் தொடர்பில் அரசு முன்னரே எச்சரித்திருந்ததாகவும், அதை அலட்சியம் செய்ததனாலேயே பல உயிரிழப்பு ஏற்பட்டதாகவும் இணை அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இடர் முகாமைத்துவ மைய நிலையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மண்சரிவு ஏற்படும் அபாயம் இருப்பதாகக் கூறியும் சமையலை முடித்துவிட்டு வெளியேற நினைத்த ஒரு குடும்பமும், தங்களுக்குச் சொந்தமான பொருள்களை மூட்டை கட்டுவதிலேயே முனைப்பாக இருந்த மற்றொரு குடும்பமும் இந்த இடரில் உயிரிழந்துள்ளன. எச்சரிக்கை விடுக்கப்பட்டபோதே உடனடியாக அவர்கள் வெளியேறியிருந்தால் காப்பாற்றப்பட்டிருப்பார்கள்.

இந்த இயற்கை இடருக்கு முகம் கொடுக்க அரசு தயாராகவே இருந்தது. பெரிய மழை வீழ்ச்சியையோ, அடுத்தடுத்துநிகழ்ந்த மண்சரிவுகளையோ எதிர்பார்த்திருக்கவில்லைஎன்றார்.

இதேவேளை, மிக முக்கியமான இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் இடர்முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா கலந்து கொள்ளவில்லை. அவர் வெளிநாடு சென்றுள்ளதன் காரணமாகவே பங்குபற்றவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் கறுப்புப் பணம் டுபாயிலிருந்து மீட்கப்படும்

## ஐக்கிய தேசியக் கட்சி கூளுரை

கொழும்பு, மே 31
டுபாய் வங்கியில் இருப்பதாகக் கூறப்படும் மகிந்தவின் கறுப்புப் பணம் மிக விரைவில் மீட்டெடுக்கப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்படும் என்றும் ஐக்கிய தேசிய கட்சி கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும தெரிவித்தார்.

டுபாய் வங்கியில் மகிந்தவின் திருட்டுப் பணம் இருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை ஆதாரத்துடன் நிரூபித்து அந்தப் பணத்தை இலங்கைக்குக் கொண்டு வந்தால் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கத் தயாராக உள்ளார் என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா கூறிய கருத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல் மோசடி காரணமாகவே அவரது ஆட்சி கவிழ்ந்தது என்பதில் சந்தேகமில்லை. அந்தத் திருடர்களைக் கைது செய்வதற்கான சட்ட நடவடிக்கைகள் தொடர்கின்றன. தாமதம் ஆவதால் திருடர்களை நாம் விட்டுவிட்டோம் என்று அர்த்தமில்லை.

உரிய நேரத்தில் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள். மல்வானையில் உள்ள பசில் ராஜபக்சவுக்குச் சொந்தமான மாளிகை ஒன்று இப்போது அரசுடமையாக்கப்பட்டுள்ளது. அதுபோல் டுபாய் வங்கியில் உள்ள மகிந்தவின் 18.5 பில்லியன் அமெரிக்க டொலர் கறுப்புப் பணமும் மீட்கப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்படும்.

இதை மிக இலகுவில் செய்துவிட முடியாது. அந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே இதைச் செய்ய வேண்டும். அதற்கு ஏற்பவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மிக விரைவில் எமது முயற்சி வெற்றிபெறும். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறப்பதற்கு ரஞ்சித் சொய்சா தயாராகட்டும் - என்றார். (த-3)

## கருவாட்டுக் கடையில் கேரளக் கஞ்சா விற்பனை

### திருமலையில் ஒருவர் கைது

திருமலை, மே 31
திருகோணமலை நகர்ப் பகுதியில் 1 கிலோ 450 கிராம் கேரளக் கஞ்சாவைத் தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 52 வயதுடைய சந்தேக நபரை எதிர்வரும் ஜீன் மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோண மலை நீதிமன்ற மேலதிக நீதிவான் சமிலா குமாரி ரத்னாயக்க நேற்று உத்தரவிட்டார்.

திருகோணமலை சமுத்ராகம பகுதியைச் சேர்ந்த தொன் பிரேம சந்திரவிக்ரம நாயக்க காமினி (வயது52) என்பவரே இவ்வாறு விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ளார்.

கருவாட்டுக் கடையில் கஞ்சா போதைப் பொருளும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் திருகோணமலை மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கும் தலைமையகப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்கும் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சுற்றிவளைப்பை மேற்கொண்டபோதே இந்தச் சந்தேக நபரிடமிருந்து 1கிலோ 450 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இந்தச் சந்தேக நபருக்கு எதிராகக் கஞ்சா போதைப்பொருள் தொடர்பில் ஏற்கனவே 7 வழக்குகள் உள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றத்தில் கூறினர். (த)

## வடக்கில் அரச தனியார் பேருந்துப் போட்டியை தவிர்க்க கட்டுப்பாடுகள்

### வெளியாகியது புதிய வர்த்தமானி

யாழ்ப்பாணம், மே 31
வடக்கில் அரச தனியார் பேருந்துகளுக்கு இடையில் ஏற்படும் போட்டி நிலையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கான இணைந்த நேர அட்டவணை ஒழுங்கு கடந்த 15 ஆம் திகதி வர்த்தானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

குறிக்கப்பட்ட விதிமுறைகளை மீறி நடக்கும் அரச மற்றும் தனியார் பேருந்துகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் 9 ஆவது அமர்வு போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;
கடந்த வருடம் மட்டும் வீதி விபத்துக்களால் ஏறக்குறைய 2 ஆயிரத்து 900 பேர் சாவடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டவர்கள் உடல் அவயவங்களை இழந்துள்ளனர். 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் அதிகமான வீதி விபத்துக்கள் எமது மாகாணத்திலேயே இடம்பெற்றுள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதனைக் கட்டுப்படுத்தாமலும் ஒழுங்குபடுத்தாமலும் விடுவோமெனில் கடந்த காலத்தைவிட எதிர்காலத்தில் விபத்துகள் பன்மடங்கு அதிகரிப்பதற்கான அபாயம் உள்ளது.

இவற்றைக் குறைக்கும் வகையில் தற்போது இறுக்கமான சட்டங்களுடன் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்துக்குள் சேவை வழங்கும் இலங்கைப் போக்குவரத்து சபையினருக்கு 40 வீதமும் தனியார் பேருந்துகளுக்கு 60வீதமும் என்ற வகையில் பேருந்துச் சேவைகளை ஒழுங்கு செய்ய வேண்டும். இதனடிப்படையில் இணைந்த நேர அட்டவணையைத் தயார் செய்து நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சிறப்பு ஏற்பாடுகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவற்றை மீறும் தரப்பினருக்கு எதிராக 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அல்லது இரண்டு வருடச் சிறைத் தண்டனை அல்லது இரண்டு தண்டனைகளையும் அனுபவிக்க நேரிடும். அந்த வகையில் இரு தரப்பினரும் மிக அவதானத்துடன் செயற்படவேண்டும்.

வவுனியா மாவட்டத்தில் ஏறக்குறைய 195 மில்லியன் ரூபாவில் கட்டப்பட்டுப் பயன்படுத்தப்படாமல் உள்ள புதிய பேருந்து நிலையத்தை மீள இயங்கவைப்பது தொடர்பிலும், அதனை ஒழுங்குபடுத்துவது தொடர்பிலும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்றுள்ளது. (த-10)

## மகிந்தவின் திருட்டை நிரூபித்தால் உடனே பதவி துறக்கத் தயார்

### அரசுக்கு ரஞ்சித் சொய்சா எம்.பி. சவால்

கொழும்பு, மே 31
மகிந்தவோ அல்லது அவரது குடும்பத்தாரோ திருடிய பணம் டுபாய் வங்கியில் உள்ளதை ஆதாரத்துடன் நிரூபித்தால் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி உள்ளிட்ட அனைத்துப் பதவிகளில் இருந்தும் விலகத் தயார்.

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்த ஆட்சி ஊழல்மிக்க ஆட்சி என்று கூறியே எமது ஆட்சியை இவர்கள் கவிழ்த்தனர். அனால்,இவர்கள் ஆட்சிக்கு வந்து ஒரு மாதத்திலேயே திருட்டில் இறங்கிவிட்டனர். மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி காரணமாக இந்த நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து கொண்டு செல்கின்றது.

இந்த மோசடியை மேற்கொண்ட அர்ஜூன மகேந்திரன் மற்றும் அர்ஜூன அலோசியஸுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்தப் பணம் தான் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் செலவுக்குப் பயன்படுத்தப்பட்டது. மகிந்த திருடர் என்று சொல்லிக்கொண்டு இவர்கள் திருடிக்கொண்டு இருக்கின்றனர். மகிந்த திருடினார் என்று கூறும் இவர்கள் ஒரு திருட்டையும் ஆதாரத்துடன் நிரூபிக்கவில்லை. கற்பனையில் கூறி வருகின்றனர். டுபாய் வங்கியில் மகிந்த திருடிய 18.5 பில்லியன் அமெரிக்க டொலர் இருப்பதாக ராஜித சொன்னார்.

முடிந்தால் மகிந்த திருடினார் என்று அந்த வங்கியில் இருந்து ஒரு டொலரையாவது மீட்டெடுத்து வாருங்கள். அப்படிச் செய்தால் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி உள்ளிட்ட அனைத்துப் பதவிகளையும் துறப்பேன். ஒருபோதும் உங்களால் அப்படி முடியாது. அவர் திருடினார் என்று சொல்லிச் சொல்லியே ஆட்சி செய்வீர்கள். மக்களை ஏமாற்றுவீர்கள்.

அடுத்த மே தினத்துக்கு முன் ராஜபக்ச குடும்பத்தைக் கைது செய்து விடுவோம் என்று ராஜித கூறுகின்றார். முடிந்தால் மத்திய வங்கியைக் கொள்ளையடித்த அர்ஜூன் ஆலோசியஸை அடுத்த மே தினத்துக்கு முன் கைது செய்து காட்டுங்கள்.

திருடனைப் பிடிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு வந்த அரசு இன்று திருடர்களு டன்தான் சேர்ந்து பயணிக்கின்றது. மகிந்தவை திருடர் என்று சொல்லச் சொல்ல அவருக்கு மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளட்டும் - என்றார். (த-3)

## முஸ்லிம் பொலிஸாருக்கு மதக் கடமை செய்ய வசதி

### பொலிஸ்மா அதிபரிடம் ஹிஸ்புல்லா கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 31
புனித ரம்ழான் மாதத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் முஸ்லிம் பொலிஸார் தமது மதக் கடமைகளைத் தடையின்றி மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிடம் மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொலிஸ்மா அதிபருக்கு அமைச்சர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:
பொலிஸ் சேவையில் ஏராளமான முஸ்லிம் பொலிஸார் உள்ளனர். இப்தார், சஹர், தராவீஹ் தொழுகை மற்றும் ஏனைய வழமையான கடமைகளை அவர்கள் ஒழுங்கான முறையில் நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதற்கமைய, புனித ரமழான் மாதத்தில் சேவையில் ஈடுபடும்முஸ்லிம் பொலிஸார் தமது மதக் கடமைகளைத் தடையின்றி மேற்கொள்வதற்குத்தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொலிஸ்மா அதிபரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தேன்.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சீரற்ற வானிலை காரணமாக பொலிஸாரின் விடுமுறை ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதனால் சேவையில் உள்ள முஸ்லிம் பொலிஸார் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இரவு நேரங்களில் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்களாயின் நோன்பு நோற்பதற்கும், இரவு நேர வணக்கங்களை மேற்கொள்வதற்கும் அது பாதிப்பாக அமையும். பொலிஸார் எதிர்நோக்கியுள்ள இவ்வாறான பிரச்சினைகளை சுட்டிக்காட்டி அவர்களுக்கு வசதிகளை செய்து கொடுக்குமாறும் பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொண்டேன் - என்றார். (த-5)

## இயற்கை இடர் காரணமாக சைட்டத்துக்கு எதிரான போராட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 31
இயற்கை இடரால் நாட்டில் ஏற்பட்டுள்ள அவல நிலையைக் கருத்திற்கொண்டு மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு (சைட்டம்) எதிரான தங்களது போராட்டம் இரு வாரங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தேசிய தொழிற்சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ள சகல தொழிற்சங்கங்களினதும் ஏகோபித்த முடிவின்படி போராட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும், இரு வாரங்களுக்குப் பின் அடுத்த தீர்மானம் எடுக்கப்படுமெனவும் [illegible] விடுதலை முன்[illegible] வசந்த சமர சிங்க தெரிவித்துள்ளார். (த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இடரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்புக்குத் திரும்ப வேண்டும்

### வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 31
இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்கள் விரைவில் தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வேண்டும். அவர்களுக்கு தேவையானவற்றை அரசும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் வழங்குவதற்கு தயாராக இருக்கவேண்டும்.

இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.

தென்னிலங்கையில் ஏற்பட்ட இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்து வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது
கடந்த வாரம் இலங்கையின் மூன்று மாகாணங்களை சேர்ந்த ஏறக்குறைய 8 மாவட்டங்களை தாக்கிய சீரற்ற காலநிலையால் இதுவரையில் பலதரப்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளதோடு, நூற்றுக்கும் அதிகமானோர் காணாமற் போயுள்ளனர். வெள்ளத்தால் சோகத்தில் ஆழ்ந்துள்ள அனைத்து மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவர்கள் மீண்டும் தமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்பப்பிரார்த்திக்கின்றேன்.

அரசும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் விரைவாக நடவடிக்கை மேற்கொண்டு மக்களது தேவைகளை பூர்த்தி செய்யவேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்புப் பணி மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்ட சகல தரப்பினருக்கும் எனது நன்றிகள். என்றுள்ளது. (ற-10)

# தமிழரின் மீள்குடியமர்வு விடயம் கொழும்பு அரசின் செயலணியில் இணைக்கப்படுவது கட்டாயம்

## யாழ்ப்பாண ஒருங்கிணைப்புக் குழுவிடம் வலியுறுத்து

கொழும்பு மீள்குடியேற்ற அமைச்சின் சிறப்புச் செயலணி தமிழ் மக்களின் மீள்குடியமர்விலும் அக்கறை செலுத்த வேண்டும். அதற்கான தமிழ் மக்களின் மீள்குடியர்வு விடயத்தையும் அதில் இணைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதில்கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"கொழும்பு மீள்குடியேற்ற அமைச்சின் சிறப்புச் செயலணியில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கான மீள்குடியேற்றம் தொடர்பில் மட்டுமே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தச் சிறப்புச் செயலணியில் தமிழ் மக்களையும் இணைத்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு இணைக்காதுவிட்டால் அந்தச் செயலணியை கலைக்க வேண்டும்.

நாவற்குழிப் பகுதியில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் தெரிவில் தவறு இருக்கின்றது. தற்போது 50 சிங்களக் குடும்பம் எதிர்காலத்தில் 500 குடும்பங்களாக மாறும் சூழ்நிலை உருவாகும்" என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

"இது தொடர்பில் ஆராய்வோம். மாவட்டத்தின் மீள்குடி யேற்றம் தொடர்பில் ஒரு குழு அமைத்து அதனை விரைவுபடுத்த நடவடிக்கை எடுப்போம்" என்று இணைத் தலைவர்கள் தெரிவித்தனர். (வ-8)

# 2 மாதங்களுக்குள் மயிலிட்டியை விடுவிப்பதாக கூட்டு அரசு உறுதி

## மாவை எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 31

"வலி. வடக்கில் இராணுவத்தினர் வசமுள்ள மயிலிட்டிப் பிரதேசம் 2 மாத காலப்பகுதிக்குள் விடுவிக்கப்படும் என்று அரசு உறுதி வழங்கியுள்ளது"

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மீள்குடியேற்றம் விடயம் குறித்துப் பேசப்பட்டது. இதன் போதே நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலி. வடக்கு மயிலிட்டிப் பகுதியைப் பாதுகாப்பு தரப்பினர் நீண்ட காலமாக தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். அந்தப் பிரதேசத்தை விடுவிக்குமாறு பல தடவைகள் கூட்டு அரசிடம் வலியுறுத்தினோம். மயிலிட்டி பிரதேசத்தை இன்னும் 2 மாத காலப்பகுதிக்குள் விடுவித்து பொதுமக்களிடம் கையளிப்பதாக அரசு உறுதி வழங்கியுள்ளது.

அத்துடன், பலாலி வானூர்தி நிலையத்தின் விரிவாக்கம் தொடர்பில் 1986ஆம் ஆண்டு கொழும்பு அரசால் அறிவிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை அடிப்படையாக வைத்து மேலதிகமாகக் காணிகளை சுவீகரிப்பதற்கு தற்போதைய அரசு முயற்சிகளை எடுத்து வருகின்றது. இதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று நாம் அரசிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளோம்.

1986ஆம் ஆண்டு அரசால் அறிவிக்கப்பட்டதாகக் கூறப்படும் வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெற வேண்டும் என்று கடந்த கால மாவட்ட ஒருக்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது - என்றார். (வ-8)

### மைதானத்தில் அடித்துக் கொலை

# வழக்கின் தொடர் விசாரணைகள் மேல் நீதிமன்றில் நேற்று ஆரம்பம்

வட்டுக்கோட்டை மைதானத்தில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டியின்போது இளம் குடும்பத்தலைவர் அடித்துக் கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கின் தொடர் விசாரணை நேற்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் ஆரம்பமானது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு இடையே இடம்பெற்ற வருடாந்தக் கிரிக்கெட் போட்டியின் போது இளம் குடும்பத் தலைவரும் பற்றிக்ஸ் கல்லூரின் பழைய மாணவனுமான அமலன் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

அவரின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 6 பேருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கின் தொடர் விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று ஆரம்பமாகின. கடந்த வழக்கின் போது நடைபெற்ற 3ஆம் எதிரியின் சட்டத்தரணியின் குறுக்குவிசாரணையுடன் வழக்கு ஆரம்பமானது.

2ஆம் சாட்சியான அமலசிங்கம் துசிந்தன் சாட்சியமளிக்கையில்,

இரு கல்லூரிகளுக்கும் இடையேயான கிரிகெட் போட்டி இடம்பெற்றது. நானும் சுதாஸ்கரன், அன்ரனி விமல்ராஜ் மற்றும் அமலனும் போட்டியைப் பார்க்க 2 மோட்டார் சைக்கிளில் சென்றோம். முற்பகல் 11 மணிக்கும் 2 மணிக்கும் இடையில் சம்பவம் நடைபெற்றது. அந்த வேளையில் நாங்கள் போட்டியைப் பார்த்துக்கொண்டிருந்தோம்.

எனது நண்பன் அமலனை 6 பேர் அடித்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் அவரைத் தூக்கிக்கொண்டு சென்றோம். எனினும் அமலன் மூச்சுப் பேச்சற்றவராக இருந்தார். அவரை அடித்தவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள். ஏனெனில் அவர்கள் அந்தக் கல்லூரியின் கொடியை வைத்திருந்தார்கள். அமலனுக்கு அடித்தவர்களை நான் மைதானத்தில் பார்த்தேன். அடையாள அணி வகுப்பிலும் அவர்களில் ஐந்து பேரை அடையாளம் காட்டினேன்.

சாட்சி எதிரிக்கூண்டுக்குள் நின்ற முதலாம் இரண்டாம் மூன்றாம் ஆறாம் எதிரிகளை அடையாளம் காட்டினார். நான் பார்க்கும் போது அமலனுக்கு முதலாவது எதிரியான மதுசன் அடித்துக்கொண்டிருந்தவர். இந்த ஐந்துபேரும் அடிச்சுக் கொண்டு இருந்தவர்கள். அவர்களின் பெயர்கள் தெரியவில்லை. ஆகவே தனித்தனியாக சொல்ல முடியவில்லை.

அமலன் திரும்பத் தாக்கவில்லை. இவர்கள்தான் அமலனைத் தாக்கினார்கள். நான் போய் அமலனைத் தூக்கும் போது, அவனுக்கு மூச்சுப் பேச்சு எதுவும் இருக்கவில்லை.

அமலனுக்கு அடித்தவர்களில் இரண்டு பேர் வளையமுடியாத பைப் வைத்திருந்தார்கள். றம் அடிக்கும் தடியாலும் அவர்கள் அடித்தார்கள். அமலனுக்கு அவர்கள் சுற்றி நின்று அடித்தார்கள். அமலன் அடியை வாங்கிக் கொண்டுதான் நின்றான். அவன் எதுவுமே செய்யவில்லை என்று சாட்சியமளித்தார்.

வழக்கின் தொடர் விசாரணைகள் இன்று இடம்பெறும். (வ-12)

# ராணுவத்தின் பஸ்களில் பாடசாலை மாணவர்கள்

## அழைத்துச் செல்லப்படுவதை நிறுத்துமாறு சிவாஜி வலியுறுத்து

யாழ்ப்பாணம் மே 31

"இராணுவத்தினரால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகளுக்குப் பாடசாலை மாணவர்களைத் தமது பேருந்துகளில் அழைத்துச் செல்வது மற்றும் கலந்துகொள்ள வைப்பது போன்ற செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்"

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாண செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"யாழ்ப்பணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் களியாட்டங்கள் உட்பட பல்வேறுபட்ட நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர். அண்மையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பனங்காட்டில் புத்திக் கூர்மை என்ற நிகழ்வுக்கு இராணுவத்தினரின் பேருந்து என அடையாளப்படுத்தப்பட்ட வாகனங்களில் பாடசாலை மாணவர்கள் ஏற்றிவரப்பட்டனர்" என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 19,20 மற்றும் 21ஆம் திகதிகளில் நடைபெற்ற இராணுவத்தினரின் நிகழ்வுக்கு இராணுவப் பேருந்தில் மாணவ, மாணவிகள் அழைத்துச் சென்றதை நான் நேரில் பார்த்தேன். பாடசாலை நேரத்தில் சீருடையில் மாணவர்கள் இராணுவத்தின் வாகனத்தில் பயணிக்குமளவுக்கு அனுமதியை யார் வழங்கியது? இந்த விடயம் வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்குத் தெரியுமா?" வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி ஆனந்தி சசிதரன் கேள்வி எழுப்பினார்.

"இவ்வாறான நிகழ்வுக்கு மாணவர்களை அழைக்கின்றோம் என்று இராணுவத்தினர் அனுமதி கோரியதாக இல்லை. இது தொடர்பில் எனது அதிகாரிகளிடம் கேட்க வேண்டும்" என்று பதிலளித்தார் மாகாணக் கல்வி அமைச்சர்.

"யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது வடக்கில் இராணுவத்தின் நிகழ்வுகளுக்கு பாடசாலை மாணவ, மாணவிகளை பாடசாலை நேரத்தில் அழைத்துச் செல்ல அனுமதி வழங்கக்கூடாது. இதற்குரிய நடவடிக்கையை மாகாணக் கல்வி அமைச்சர் எடுக்க வேண்டும்" என்று ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார். (வ-8)

# நெடுந்தீவில் சீரமைத்த வீதிகளைக் காணோம்!

## ஒருங்கிணைப்புக் குழுவிடம் சிறிதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம் மே 31

"நெடுந்தீவில் கடந்த ஆட்சியில் சீரமைக்கப்பட்ட வீதிகள் காணாமல் போயுள்ளன என சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்திரைப்பட நடிகர் வடிவேலு கிணற்றைக் காணவில்லை எனப் பொலிஸாரிடம் முறையிட்டதைப்போன்று நாங்களும் நெடுந்தீவில் சீரமைக்கப்பட்ட வீதிகளைக் காணவில்லை என்று முறையிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது"

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் வீதி அபிவிருத்தி தொடர்பில் தீவகத்தின் வீதிகள் சீரமைப்புக்கு தேவையான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக ஆராயப்பட்டது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"நெடுந்தீவில் கடந்த காலங்களில் மூன்று வீதிகள் சீரமைக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்த வீதிகள் தற்போது காணாமறுபோயுள்ளன.

தீவகப் பகுதிகளுக்கு வீதி அபிவிருத்திக்காக ஒப்பந்தகாரர்கள் முன்வருவதில்லை. அப்படியே முன்வந்தாலும் ஒப்பந்தத்தை எடுத்ததுடன் மட்டுமே அவர்கள் தமது கடமையை நிறுத்தி விடுகின்றனர். தங்களால் எடுக்கப்பட்ட ஒப்பந்த வேலைகளை செய்வதற்கு அவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. இந்த நிலமையால் தீவகத்தின் வீதிகள் பெருமளவில் பாதிப்படைந்துள்ளன.

நெடுந்தீவு பிரதேசத்தின் வீதி சீரமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட ஊர்காவற்றுறை பிரதேச வீதி அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி அதிகமாக இருக்கின்றது. அதற்கான காரணம் என்ன? என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

"ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் வீதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. வெளித்தரையாகக் காணப்படும் பாதைகளாகவே அங்குள்ள வீதிகள் காணப்படுகின்றன. ஆகவே அந்த வீதிகளைச் சீரமைக்கும் போது அவை உயரமாக்கப்பட்டு செப்பனிடும் தேவை உள்ளது. அதற்காக ஆய்வு செய்யப்பட்ட பின்னரே குறித்த திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது" என்று ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பதிலளித்தார்.

"ஊர்காவற்றுறை வீதிச் சீரமைப்பு வேலைகளுக்கு அதிகளவான நிதி கோரியது தவறல்ல. நெடுந்தீவுப் பிரதேச வீதி சீரமைப்புக்கும் அதிகளவான நிதியை கோரியிருக்கலாம். ஏனெனில் கடல் வழியாகவே அபிவிருத்திக்கான பொருள்களைக் கொண்டு செல்லவேண்டிய தேவை உள்ளது. ஆகவே இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி போதுமா? என்பதே எனது கருத்தாகும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சுட்டிக்காட்டினார். (வ-8)

# குடியிருப்புகளில் கழிவகற்றல் காவலூரில் இன்று ஆரம்பம்

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடியிருப்பாளர்களிடமிருந்து திண்மக் கழிவுப் பொருள்களைப் சேகரிக்கும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகும் என்று பிரதேச சபைச் செயலாளர் அறிவித்தார்.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டங்களின் ஒரு அங்கமாக இது அமையவுள்ளது.

"ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு, கோட்டையடி, வைத்தியசாலை வீதி, ஒழுவில் வீதி, தம்பாட்டி, மெலிஞ்சிமுனை ஆகிய இடங்களில் இன்று புதன்கிழமையும் அனலைதீவுப் பிரதேசத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையும் குடியிருப்பாளர்களிடமிருந்து திண்மக் கழிவுகள் சேகரிக்கப்படும். குடியிருப்பாளர்கள் அனைவரும் காலை 8 மணிக்கு முன்னதாக தமது குடியிருப்புக்களில் காணப்படும் திண்மக் கழிவுப் பொருள்களை கண்ணாடி, பிளாஸ்டிக், பொலித்தீன் என மூன்று வகையாகச் பிரித்து தனித் தனி உரப்பைகளில் இட்டு வைக்க வேண்டும். பிரதேச சபையின் கழிவுகளைச் சேகரிக்கும் வாகனம் வருகை தரும்போது அவற்றைக் கையளிக்கவேண்டும்.

பொதுச்சுகாதாரப் பகுதியினர் குடியிருப்புக்கு வருகைதந்து சோதனையிடும்போது சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பொருள்கள் காணப்பட்டால் சட்ட நடவடிக்கையை எடுக்கவேண்டி இருக்கும் என்பதால் இந்த விடயத்தில் சிறப்புக் கவனம் எடுத்து குடியிருப்பாளர்கள் செயற்படவேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவில் புத்தர் சிலை நிறுவும் பணிகளை நிறுத்த ரணில் பணிப்பு

## கூட்டமைப்புத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மே 31
நயினாதீவில் புத்தர் சிலை அமைக்கும் பணிகளை நிறுத்துமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.
யாழ்ப்பாண செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. நயினாதீவில் புத்தர் சிலை அமைக்கப்பட்டு வருவதாகவும் அதனை நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் வலியுறுத்தினார்.
இதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.
"நயினாதீவில் அமைக்கப்படும் புத்தர் சிலைக்கு முறையான அனுமதிகள் எவையும் பெறப்படவில்லை எனப் பல குற்றச்சாட்டுகள் எழுந்தன. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போது, நயினாதீவில் அமைக்கப்படும் புத்தர் சிலை தொடர்பில் சுட்டிக்காட்டினோம். அதனை ஆராய்ந்த அவர் அதன் பணிகளை நிறுத்துமாறு உரியவர்களுக்குப் பணித்தார்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.
"நயினாதீவில் புத்தர் சிலை அமைப்பது தொடர்பில் முறையான அனுமதிகள் பெறப்படவில்லை. அத்துடன், கரையோரப் பாதுகாப்பு திணைக்களமும் எவ்வித அனுமதிகளையும் வழங்கவில்லை. எனினும் கடற்படையின் உதவியுடன் கட்டுமானப் பணிகள் தற்பொழுதும் இடம்பெறுகின்றன" என்று மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் சுட்டிக்காட்டினர்.
ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பதிலளித்தார். (வ-8)

## சாவகச்சேரி வைத்தியசாலையின் சிகிச்சை நேரத்தில் மாற்றம்

சாவகச்சேரி, மே 31
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரதி செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் நடத்தப்பட்டு வந்த பொது மருத்துவம் மற்றும் நீரிழிவு நோய் சிகிச்சை நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன என்று வைத்தியசாலை செய்திக் குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.
தூர இடங்களிலிருந்து வரும் நோயாளர்கள் காலை வேளையில் தூர இடங்களிலிருந்து புறப்படும் பேருந்துகளில் வந்து வைத்தியசாலையில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டது. அதைக் கருத்திற் கொண்டு முன்னர் காலை 8 மணிக்கு ஆரம்பமான நோயாளர் பார்வை நேரம் கடந்த வாரம் தொடக்கம் காலை 6 .30 மணிக்கு ஆரம்பமாகின்றன. இங்கு இரவுக் கடமையில் ஈடுபடும் மருத்துவர்கள் காலை 6.30 மணி தொடக்கம் நோயாளர்களைப் பார்வையிட்டு சிகிச்சை வழங்குகின்றனர் . 8 மணிக்குப் பின்னர் அங்கு வரும் மருத்துவர்க்ள மறு திகதியிட்ட நோயாளர்களைப் பார்வையிட்டு சிகிச்சை வழங்குகின்றனர். பகல் 12 மணி வரை சிகிச்சை வழங்கப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
பூநகரி பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி கிழக்கு போன்ற தூர இடங்களிலிருந்து முதல் பேருந்தில் வரும் நோயாளர்களின் நலன் கருதியே நோயாளர் சிகிச்சை பெறும் நேரங்கள் முன்னகர்த்தப்பட்டுள்ளது எனவும் உள்ளூர் நோயாளர்கள் வழமை போல 8 மணிக்குப் பின்னர் வரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை வைத்தியசாலையில் ஏனைய நோய்களுக்கான நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்க்ள இல்லாததால் சில சிகிச்சையகங்களை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நோயாளர்கள் விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கி நிபுணத்துவ சேவைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். வைத்தியசாலையில் நிபுணத்துவ அதிகாரிகளின் சேவைகளைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். அவர்களின் வருகை உறுதிப்படுத்தப்படுமாயின் மீண்டும் நிறுத்தப்பட சிகிச்சையகங்கள் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## சாவகச்சேரி நகரில் இன்று திண்மக்கழிவுகள் அகற்றல்

சாவகச்சேரி, மே 31
உலக சுற்றாடல் வாரத்தின் மூன்றாவது நாளான இன்று திண்மக்கழிவு முகாமைத்துவ தினமாகக் கடைப்பிடிக்கப்படும் என்று நகரசபைச் செயலாளர் கா. சண்முகதாசன் அறிவித்தார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
குடியிருப்புக்கள், வர்த்தக நிலையங்கள் அரச மற்றும் தனியார் அலுவலகங்களில் பயன்படுத்தப்பட்டு பாவனைக்குதவாத இலத்திரனியல் மற்றும் மின் பொருள்கள் சாவகச்சேரி நகர சபையின் கழிவகற்றல் பிரிவால் இன்று சேகரிக்கப்படும்.
துணிகள், பொழுதுபோக்கு சாதனங்கள், அலுவலக உபகரணங்கள் போன்றவற்றை நகர சபை உழவு இயந்திரப் பெட்டியிலிடப்படவேண்டும்.
அத்துடன் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்துடன் இணைந்து சாவகச்சேரி நகர்ப் பகுதியில் சிரமதானப் பணியும் முன்னெடுக்கப்படும்.
மேலும் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நாளை தென்மராட்சி பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் மரக்கன்று நடுகையும் நாளை மறுதினம் சாவகச்சேரி நகர்ப் புற வாய்க்கால்கள் துப்புரவு செய்தல் மற்றும் குடியிருப்புகளில் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் அமைத்தலும், அவற்றின் நீரை மீள நிலத்தில் இறக்கும் செயற்றிட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடத்தப்படும் என்றார். (வ-9)



தென்பகுதியில் இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் க. கருணாகரன் தலைமையில் குடாநாடு முழுவதும் நேற்று முன்தினம் உதவிப் பொருள்கள் சேகரிக்கப்பட்டன. இந்து, பௌத்த, முஸ்லிம் குருமார்களின் ஆசியுடன் இந்த நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. (வ-50)

## கணித, விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஜூன் 6ஆம் திகதி நியமனம்

யாழ்ப்பாணம், மே 31
வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் கணித , விஞ்ஞான பாட ஆசிரியர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த 25ஆம், 26ஆம் திகதிகளில் இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கான நியமனங்கள் எதிர்வரும் 6ஆம் திகதி வழங்கப்படவுள்ளது என்று வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
இந்தப் பாடங்களுக்கு வடக்கு மாகாணத்தில் 450 வெற்றிடங்கள் உள்ளன. 352 பட்டதாரிகளே விண்ணப்பித்துள்ளனர். அவர்கள் அனைவரையும் அழைத்திருந்தோம்.
அவர்களில் 321 பட்டதாரிகள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியிருந்தனர். தோற்றியிருந்த பட்டதாரிகளில் ஒரு சிலரைத் தவிர ஏனைய அனைவருமே தகுதியானவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் ஓர் பல்கலைக்கழகம் சார்ந்த பட்டதாரிகள் அங்கிருந்து சான்றிதழைப் பெற்றுச் சமர்ப்பிக்கவில்லை. அவர்களுக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அந்த சான்றிதழை இன்றும் நாளையும் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளோம். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டதும் குறித்த நேர்முகத் தேர்வில் தோற்றித் தகுதியானவர்கள் எனக் கண்டறியப்பட்ட அனைவருக்கும். நியமனம் வழங்கப்படவுள்ளது. அதற்கான தனியான அழைப்புக் கடிதங்கள் குறித்த பட்டதாரிகளுக்கு அனுப்பி வைக் கப்படும் - என்றார். (ற-101)

## சமுத்திரப் பல்கலையால் கற்கைநெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 31
இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தால் 2017ஆம் ஆண்டு இரண்டாம் கல்வியாண்டுக்கான தொழிற்கற்கை நெறிகள் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்தார்.
"கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும், கடலக மாலுமி பயிற்சி நெறி, உயிர்ப் பாதுகாப்பு பயிற்சி நெறி, மிதவைக் கப்பல் இயந்திர பொறிவலர், வெளி இணைப்பு இயந்திர பொறிவலர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
ஜி.சி.ஈ சாதாரண தர மற்றும் உயர்தரம் தோற்றியவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். கற்கைநெறிகளை கற்க விரும்புவர்கள் விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் பெற்று முழுமை செய்து எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-10)

## மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் யோகர் சுவாமியின் திருவுருவச் சிலை

நல்லூர், மே 31
யோகர் சுவாமியின் 145ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரின் திருவுருவச் சிலை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் திறந்து வைக்கப்பட்டது.
பாடசாலை அதிபர் கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன், சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத் சைத்தன்யா சுவாமிகள், சிலை அமைத்து வழங்கிய துரைசிங்கம் தம்பதியினர், அயற் பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



யோகர் சுவாமியின் திருவுருவச் சிலையை அமைத்த சிற்பி கௌரவிக்கப்பட்டார். (வ)

## சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 31
வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் மும்மொழிக் கற்கை நிலையத்தில் 2015 /2016 கல்வி ஆண்டில் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது என கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்தார்.
சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை நிலையத்தில் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாஷையூர் அந்தோனியாருக்கு நாளை கொடி

யாழ்ப்பாணம், மே 31

பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்தடன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

புனிதரின் கடல் அந்தோனியார் திருவிழா 3ஆம் திகதி மாலை 5 மணிக்கு இடம்பெற்று 4ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரைக்கும் நவநாள் வழிபாடு மாலை 5 மணிக்கு 12ஆம் திகதி நற்கருணை பெருவிழாவும் நடைபெறும்.

13ஆம் திகதி காலை 5.15 மணிக்கு முதல் கூட்டுத் திருப்பலி வழிபாடு இடம்பெற்று மாலை 4 மணிக்கும் புனிதரின் தேர் பவனி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-17)

## குரும்பசிட்டி சித்தி விநாயகருக்கு இன்று கொடி

யாழ்ப்பாணம்,மே31

குரும்பசிட்டி சித்தி விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ)

## வாரந்த ஆன்மிக சொற்பொழிவு

தொண்டமனாறு, மே 31

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவக் கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப10.30 மணிக்கு சைவவாழ்வியல் என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தச் சொற்பொழிவை சைவப்புலவர் சிவசிறி குமாரசாமி சண்முகலிங்கம் நிகழ்த்துவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

## புல்லாமாமரத்தடி ஞான வைரவருக்கு திருக்குடமுழுக்கு

பொலிகண்டி, மே 31

பொலிகண்டி மேற்கு, புல்லாமாமரத்தடி அருள்மிகு ஞான வைரவர் ஆலய திருக்குடமுழுக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணி தொடக்கம் 8.45 மணிவரையான சுபவேளையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

திருக்குடமுழுக்குக் கிரியைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகின. நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை தொடக்கம் 3ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

ஆலய முதன்மைக் குரு சிவசிறி சண்முக பிரசாந்தக் குருக்களின் தலைமையில் பொலிகண்டி கந்தவனம் சிறி சிவசுப்பிரமணியசுவாமி ஆலயக் குரு கிரியாகலாமணி சிவப்பிரம்மசி ச.வைத்தியநாதக் குருக்கள் முதன்மைக் குருவாக திருக்குடமுழுக்குக் கிரியைகளை நடத்தி வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

## கிளிநொச்சி டிப்போச் சந்தியிலுள்ள இராணுவ நினைவுச் சின்னம் நல்லிணக்கத்தைப் பாதிக்கும்

### அரச தலைவருக்குக் கடிதம் அனுப்ப அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, மே 31

கிளிநொச்சி, டிப்போச் சந்தியில் உள்ள இராணுவ நினைவுச் சின்னம் தேசிய நல்லிணக்கத்துக்குப் பொருத்தமானது அல்ல என்பதைச் சுட்டிக்காட்டி அரச தலைவருக்கு கடிதம் அனுப்புவது என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி நகரத் திட்டமிடல் தொடர்பாக விளக்கமளித்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், "கிளிநொச்சி மாவட்டம் ஒரு நகராக வளர்ச்சியடையாது இருப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையும், இராணுவமுமே காரணம்." என்று குற்றஞ்சாட்டினார்.

"கிளிநொச்சி டிப்போச் சந்தியில் அமைந்துள்ள இராணுவச் சின்னம் யாருக்காக இருக்கின்றது?. டிப்போச் சந்தியில் உள்ள செங்கல் சுவர்கள் எப்போது அமைக்கப்பட்டன?. எங்கிருந்து செங்கற்கள் கொண்டுவரப்பட்டன?. நாம் முன்னர் இடம்பெயர்ந்து சென்றபோது அந்த இடத்தில் அப்படி எதுவும் இருக்கவில்லை.

இவை யாருடைய கலாசாரத்தைக் காட்டுவதற்காக யார் எடுக்கின்ற முயற்சி?. இந்த நடவடிக்கைக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையும் உடந்தையாக இருக்கின்றதா?. கிளிநொச்சி நகரமாவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை ஒத்துழைக்கவில்லை." என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

அங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், "கிளிநொச்சி டிப்போச் சந்தியில் உள்ள நினைவுச் சின்னம் நல்லிணக்கத்துக்குப் பொருத்தமானது இல்லை. இது தொடர்பாக அரச தலைவருக்குக் கடிதம் அனுப்புவோம்." என்றார்.

இறுதியில் இது தொடர்பாக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு இது தொடர்பாக கடிதம் அனுப்புவது என்று ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ற-101)

## கிராம அபிவிருத்திச் சங்கங்களைவிட மாதர் அபிவிருத்தி சங்கங்களே அதிகம்

### வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம், மே 31

வடக்கில் கிராம அபிவிருத்திச் சங்கங்களை விட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அதிகம் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட 2 ஆயிரத்து 435 சங்கங்களும் இயங்குகின்றன என்று வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் என்ற பொது அதிகார சபையின் கீழ், வடக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும், இருக்க வேண்டிய கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் எத்தனை ?, தற்போது எத்தனை கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் இருக்கின்றது ?, தற்போதுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களில் எத்தனை சங்கள் செயற்படுகின்றன ?, செயற்படாதுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஒவ்வொன்றும் எத்தனையாம் ஆண்டு முதல் செயற்படாமல் உள்ளது ?' போன்ற விவரங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்திடம் கோரப்பட்டிருந்தன.

அவை தொடர்பில் வழங்கப்பட்ட பதிலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதில் உள்ளதாவது

ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை சங்கங்கள் இருக்க வேண்டும் என்ற வரையறை இல்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 350 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 390 கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் 165 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 160 கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 240 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 230 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும், வவுனியாவில் 180 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 185 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும், மன்னாரில் 270 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 265 மாதர் கிராம அபிவிருத்திச் சங்களுமாக, வடக்கில் ஆயிரத்து 205 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், ஆயிரத்து 230 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்தும் கிரமமாக இயங்குகின்றன. என்றுள்ளது. (ற-5)

## யாழ்ப்பாண பொஸ்கோ மாணவர் முதியோரை இன்று மகிழ்விப்பர்

யாழ்ப்பாணம் சென்.பொஸ்கோ வித்தியாலயத்தின் மாணவர்கள் கல்விச் சுற்றுலாவாக இன்று புதன்கிழமை கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு வருகைதரவுள்ளனர். அவர்கள் இல்லத்தில் சிறப்பு கலை நிகழ்வுகளையம் நடத்தவுள்ளனர் என்று இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பல பாடசாலைகளின் மாணவர்கள் கல்வி சுற்றுலாவாக கைதடி அரச முடியோர் இல்லத்துக்கு வருகை தந்து பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர்.

முதியோர் இல்லத்தை சமூகத்துக்கு பயனுள்ளதாக நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பல்வேறு நிகழ்வுகள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளன.

இவ்வாறு சமூக நலத்திட்டதின் கீழ் முதியோர் இல்லத்தில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதுடன் எதிர்காலத்தில் முதியோர்களுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களை சமூகத்துடன் இணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

பெற்றோர்களை பிள்ளைகள்தான் பராமரிக்க வேண்டும். பிள்ளைகள் பெற்றோர்களை கைவிடக்கூடாது இப்படிப்பட்ட விழிப்புணர்வும் சமூகத்தில் முன்னெடுக்கப்படும்" என்று அத்தியட்சகர் த.கிருபாகரன் மேலும் தெரிவித்தார். (வ-17)

## தகவல் தொழில்நுட்பத் துறை கண்காட்சியும் செயலமர்வும்

### *யாழ்ப்பாண நகரில் இன்று*

சிறிய நடுத்தர நிறுவன தகவல் தொழில்நுட்ப கண்காட்சியும், செயலமர்வும் இன்று புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு யாழ்ப்பாணம் வலம்புரி விருந்தினர் விடுதியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்றுறை மன்றம் மற்றும் வடக்கு தகவல் தொழில்நுட்ப சம்மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தக் கண்காட்சி நடத்தப்படுகிறது.

"கண்காட்சியில் இணையம் , மென்பொருள், இணைய வடிவமைப்பு , மொபைல் அப்ஸ், இலத்திரனியல் தகவல் பாதுகாப்பு , நெற்வேக்கிங் , இலத்திரனியல் சந்தைப்படுத்தல் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் அதுதொடர்பிலான ஆலோசனைகள் வழங்கப்படும். அத்துடன், முன்னணி தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிறுவனங்கள் தமது சேவைகளையும் தீர்வுகளையும் காட்சிப்படுத்துகின்றன.

கண்காட்சியின் பக்க நிகழ்வாக வியாபாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலான வல்லுநர்கள் வழங்கும் அறிவூட்டல் செயலமர்வும் இடம்பெறும்.

காலை அமர்வில் சிறிய நடுத்தர தொழிற்துறையில் மின்வணிக மேம்பாடும் இலத்திரனியல் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களும் என்ற தலைப்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சந்தைப்படுத்தல் துறை விரிவுரையாளர் கலாநிதி சிவானி கருத்துரை வழங்குவார்.

மாலை அமர்வில் சிறிய நடுத்தர தொழிற்துறையில் இலத்திரனியல் மேம்பாடு என்ற தலைப்பில், யாழ்ப்பாண பல்கலைக்கழக கணினி விஞ்ஞானத் துறை விரிவுரையாளர் எஸ்.சர்வேஸ்வரன் கருத்துரை வழங்குவார்" என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-10)

## வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஊழியர் தினச் சந்திப்புக்கள்

யாழ்ப்பாணம்,மே 31

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கல்வி வலயங்களில் கடமையாற்றும் அனைத்துப் பணியாளர்களின் பிரச்சினைகள் தொடர்பான ஊழியர் தின சந்திப்புகள் நேற்றுமுன்தினம் முதல் வலய ரீதியாக நடத்தப்படுகின்றன.

இன்று யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வவுனியா தெற்கு, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களில் மு.ப. 9 மணி தொடக்கம் சந்திப்புக்கள் நடத்தப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முல்லைத்தீவு கல்வி வலயத்திலும், நேற்று கிளிநொச்சி வலயத்திலும் சந்திப்பு நடத்தப்பட்டது என்றும், நாளைமறுதினம் மன்னார், மடு கல்வி வலயங்களிலும் மூன்றாம் திகதி வவுனியா வடக்கு வலயத்திலும் சந்திப்பு இடம்பெறும் என்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

பதவி நிலை அலுவலர்கள் மூவர் கொண்ட குழு ஊழியர்களால் எழுத்துருவில் சமர்ப்பிக்கும் கோரிக்கைகளை ஆராயும். அவர்களால் தீர்க்கமுடியாத பிரச்சினைகளை மாவட்ட நிலையில் நடத்தப்படும் ஊழியர்தினத்தில்சமர்ப்பிக்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாவட்ட நிலையிலான ஊழியர் தினம் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு கல்வி வலயங்களுக்கான ஊழியர் தினம் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திலும், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய கல்வி வலயங்களால் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் கல்வி வலயத்திலும், வவுனியா வடக்கு, மன்னார், வவுனியா தெற்கு, மடு ஆகிய கல்வி வலயங்களால் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி வவுனியா தெற்கு கல்வி வலயத்திலும் நடைபெறும் என்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## கொழும்புத்துறை விநாயகருக்கு இன்று கொடி

யாழ்ப்பாணம்,மே 31

கொழும்புத்துறை மேற்கு வதரிபிட விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## இறைச்சிக்கடைகள் சிற்றுண்டிச் சாலைக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2017

26.05.2017 திகதிய உதயனில் மேற்குறித்த விளம்பரத்தின் தொடர் இல. 03 இல் பண்ணை மாட்டிறைச்சிக் கடையெனக் குறிப்பிடப்பட்டுள்ளமை தவறானது. அதனை பண்ணை ஆட்டிறைச்சிக் கடையெனத் திருத்தி வாசிக்கவும்.

**பொ. வாகீசன்,**
**ஆணையாளர்.**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

NORTH LANKA IIT & UNIVERSITY OF NORTH EAST LANKA வில் எம்முடன் இணைந்து B. Ed கற்கைநெறியினை மேற்கொள்ளும் சக ஆசிரியை **சர்மினி**
அவர்களின் அன்புத் துணைவர்
**திருக்குமரன்**
அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி அறிந்து துயருறுகின்றோம்.
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**பணிப்பாளர், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள்.**

## மாபெரும் அதிர்ஸ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் ஆனைவிழுந்தான் வன்னேரிக்குளம் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய கட்டட வளர்ச்சிக்கான சீட்டிழுப்பு

**முதலாம் பரிசு - 989**
**2 ஆம் பரிசு - 1693**
**3 ஆம் பரிசு - 2114**

**ஆறுதல் பரிசில்கள்**

| | |
|---|---|
| 2337 | 802 |
| 1672 | 1796 |
| 1805 | 2058 |
| 1362 | 614 |
| 1734 | 3555 |

**அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயம்**
**( ஆனை விழுந்தான் வன்னேரிக்குளம்)**
**077 076 0511, 077 113 4496**

# UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BID

1. The Chairman, Procurement Committee of University of Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the following works.

| No. | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) | Contract Period (No of Calendar Days) | Minimum Required ICTAD Grade | Required Bid Security Amount |
|---|---|---|---|---|---|---|
| 1. | YA/CWP/ RE/2017-06 | Lecture Hall for Faculty of Technology at Ariviyalnagar, Killinochchi, University of Jaffna. | 14.9 | 120 | C6 or above | Rs. 150,000.00 |
| 2. | YA/CWP/ RE/2017-07 | Levelling of Land Area Allocated for places of Worship at Ariviyalnagar, Killinochchi, University of Jaffna. | 3.4 | 60 | C8 or above | Rs. 35,000.00 |
| 3. | YA/CWP/ RE/2017-08 | Installation of Power Cable Laying for Faculty of Engineering at Ariviyalnagar, Killinochchi, University of Jaffna. | 31.2 | 45 | C5/EM2 or above | Rs. 300,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the above table.
5. Interested bidders may obtain further information from Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna and inspect the bidding documents at the same address on any working day from 9.00 hrs to 16.00 hrs Contact numbers are, Phone : 021 2219201 Fax: 0212219201.
6. A complete set of Bidding Documents in English Language may be purchased by interested bidders on the submission of a written application to the Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna until 19th June, 2017 form 9.00 hrs to 15.00 hrs to 15.00 hrs upon payment of a non refundable fee of rupees two thousand (Rs. 2,000/=) for bid no 1 & 2 each and rupees five thousand (Rs. 5,000/=) for bid no. 3.
7. Bids shall be delivered or sent by registered post to the Chairman, procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Registrar's office to reach on or before 14.00 hrs on the 20th June, 2017. Bids will be opened immediately thereafter on 20th June, 2017 in the Board room of the University in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid for a period for 90 days from the date fixed for closing of Bids or any extend period.
9. All Bids shall be accompanied by a Security which shall be;
   * In the form included in Section 09 in the Bidding document.
   * For the amount as indicated in the above table.
   * Valid up to 18th October, 2017.
   * In favour of "Vice Chancellor, University of Jaffna"
   * Issued by one of the agencies indicated in the clause 16 of ITB of the schedule.
10. Pre Bid meeting will be held at board room of the Faculty of Agriculture, Ariviyal Nagar, Killnochchi at 10.00 hrs on the 12th June 2017.

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
**30.05.2017**

# 31 ஆம் நாள் நினைவேந்தலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

## கந்தவனம் சிவகுருநாதன்

**(சித்தப்பா)**

*(இளைப்பாறிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர் - தென்மராட்சி, மருந்தாளர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்)*



அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (31.05.2017) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

நேரில் அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள்
இவ்வறிவித்தலை
தயவு கூர்ந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு
தாழ்மையுடன்
கேட்டுக் கொள்கின்றோம்.

**மண்ணில் உதித்தது**
**05.10.1945**

**விண்ணில் மறைந்தது**
**01.05.2017**

**"குருஸ்தான்"**
**நுணாவில் மேற்கு,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**
**021 227 0337**
**077 318 5779**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேவை

யாழ்ப்பாணத்தில் K.K.S வீதியில் உள்ள பிரபல பூக்கடை ஒன்றிற்கு மாலை கட்டத்தெரிந்த (ஆண்/பெண்) இருபாலாரும் தேவை.

தொடர்பு - 077 9424 011

### தேவை

இணுவிலில் உள்ள கடைஒன்றிற்கு விற்பனை உதவியாளர் தேவை. (பெண்கள் மட்டும்) இணுவிலுக்கு அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

077 287 0230

### கண்ணீர் அஞ்சலி



28.05.2017 அன்று இயற்கை எய்திய தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

**அப்பாத்துரை விநாயகமூர்த்தி**


அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**காந்தி கலை வளர்ச்சி மன்றம், சனசமூக நிலையம் தாவடி.**

## மரண அறிவித்தல்

## அகஸ்தீன் அருளப்பு

**(இளைப்பாறிய அதிபர்)**



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிட மாகவும், 35/2, இந்து மகளிர் வீதி, கந்தர்மடத்தை வசிப்பிட மாகவும் கொண்ட அகஸ்தீன் அருளப்பு (29.05.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அகஸ்தீன் அந்தோனி யாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமநாதர் - சின்னம்மா தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற யோகம்மா (ஓய்வு பெற்ற ஆசிரியை - வேம்படி மகளிர் கல்லூரி) வின் அன்புக்கணவரும் ஜெயக்குமார், தவக்குமார், தேவகுமார், அனுசூயா ஆகியோரின் அன்புத்தந்தையும் செல்வி, நிஷானி, சுபா, ஸ்ரீமுகுந்தன் ஆகியோரின் அன்புமாமனும் காலஞ்சென்றவர் களான அல்பிரட், றோசலின், திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் புஸ்பவதி காலஞ்சென்ற கனகம்மா மற்றும் சேதுப்பிள்ளை காலஞ்சென்ற கோபால் மற்றும் பார்வதி, பேரம்பலம், துரைராசா, புவனேஸ்வரி, லலிதாதேவி ஆகியோரின் அன்புமைத்துனரும் அனுகா, நிகேஷ், எழினா, அக்ஷ்ய, கார்த்திக், ஆரியா, சங்கர், அட்சயன், சாத்வீகா, சிருஷ்டிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 31.05.2017 பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் யா/புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**35/2 , இந்து மகளிர் வீதி,**
**கந்தர்மடம்.**
**075 073 8902**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### தவறவிடப்பட்டுள்ளது

தவறவிடப்பட்ட ஆண்களுக்கான கைப்பை (Purse) கே.கே.எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதி, சிக்னல் சத்திரத்துச் சந்திக்கும் சிவா நறுமணப்பூங்காவிற்கும் இடையில் தர்சினி அமுதம் விற்பனை நிலையத்திற்கு அருகில் ஆண்களுக்கான கைப்பை (Purse) ஒன்று தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், பல்கலைக்கழக அடையாள அட்டை மற்றும் சிறு தொகை பணத்துடன் வங்கிக் கடன் அட்டைகளுடன் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 839 6114, 077 028 0017

## 2ஆம் ஆண்டு நினைவுதினம்

**(31.05.2017)**

## திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி

**(ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்)**

நல்ல போராட்டத்தைப் போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன்
விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்
(11 திமோத் 4:7)



**திரு.ம.குட்டித்தம்பி,**
**அண்ணா**
**அன்பழகன் போல்**
**குடும்பம்**
**"கிருபை"**
**கரணவாய் கிழக்கு,கரவெட்டி.**

## மரண அறிவித்தல்

திருமதி **அரியஜோதி முருகேசபிள்ளை**

**( ஓய்வு பெற்ற பிரதேச மருந்தாளர்)**



நாவலியைப் பிறப்பிட மாகவும், வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அரியஜோதி முருகேசபிள்ளை (30.05.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் V.முருகேசபிள்ளை (ஓய்வு பெற்ற பிரதேச மருந்தாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான திரு. J.V தம்பிநாயகம் (முன்னாள் அதிபர் சா/றிபேக் கல்லூரி) திருமதி ஹரியற் தம்பிநாயகம் (ஆசிரியர்) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஏணஸ்ட் அரியநாயகம் (பொறியியலாளர்) மற்றும் Dr.சாந்தி (அமெரிக்கா) காலஞ்சென்ற தவநாயகம் ( இலங்கை வங்கி) மற்றும் அரியமணி (ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி) காலஞ்சென்ற விமலா (இணுவில் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச்சகோதரியும் றோகான், ஜிகான், ஜெனி (சித்த மருத்துவர்) ஆகியோரின் அன்புத்தாயும் கிருபா ஏணஸ்ட், நெவில் ஏபிரகாம் (பொறியியலாளர் அமெரிக்கா), இந்திரா தவநாயகம் (உபஅதிபர் சுழி/ விக்ரோரியா கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும் S.நோபேட் எமில் (உரிமையாளர்- பஸ்ரியன் ஹோட்டல்), R.ஜனனி (யாழ்ப்பாணக் கல்லூரி), தாமரி, கிரிஷான், டினுஷா, சில்வியா ஆகியோரின் மாமியும் அரவிந்தன், அருந்ததி, ஏரன் ஆகியோரின் பெரியதாயும் ஆத்மீகா, ஆதனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31.05.2017) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று திருவுடல் நவாலி கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கல்லூரி வீதி,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



## சபாபதி துரைரட்ணம்

**(இளைப்பாறிய தபாலதிபர்)**

கல்விங்காடு, மூன்றாம் கட்டையடியைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி துரைரட்ணம் (இளைப்பாறிய தபாலதிபர்) நேற்று (30.05.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சுமதி (கோண்டாவில் - சி.சி.த.க. பாடசாலை ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், மிதுரனின் (சென்ஜோன்ஸ்) அன்புத் தந்தையும், விஜயரட்ணம், யோகரட்ணம் (கனடா), நேசரட்ணம் (அமெரிக்கா), விமலராணி, யோகராணி, ஜெயராணி ஆகியோரின் சகோதரரும், ஞானேந்திரனின் (உரும்பிராய் வடக்கு) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு 17.05.1936
இறப்பு 27.05.2017

## திருமதி செல்லமுத்து கதிரமலை

யாழ். சாவகச்சேரி, கல்வயலைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி செல்லமுத்து கதிரமலை கடந்த (27.05.2017 ) சனிக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரமலையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆனந்தி, பாஸ்கரன் மற்றும் முரளிதரன், புனிதவதி (பிரான்ஸ்), கோணேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2017) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் கந்தையா சுப்பிரமணியம் (கல்வயல்) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கல்வயல்,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0212057807**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







காணாமற்போனோரைத் தேடும் உறவினர்கள் கிளிநொச்சியில் நேற்று நடத்திய பேரெழுச்சிப் போராட்டம்.





# புகைத்தலுக்கு எதிரான செயல்திட்டம் நாடாளவிய ரீதியில் இன்று ஆரம்பம்

கொழும்பு, மே 31

புகைத்தலுக்கு எதிரான பன்னாட்டு தினத்தை முன்னிட்டு கொடிச் செயற்திட்டம் இன்று தொடக்கம் எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை நாடாளவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் கொடிச் செயற்திட்டத்தின் முதலாவது கொடி, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்று முற்பகல் அரச தலைவர் செயலகத்தில் வைத்து அணிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது.

"தீய பழக்கங்களை ஒழித்து நிரந்தர மகிழ்ச்சியை அனுபவிப்போம் - ஆரோக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இந்தக் கொடிச் செயற்திட்டம் இன்று தொடக்கம் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரையான ஒரு மாத காலத்துக்கு நாடு முழுவதிலும் செயற்படுத்தப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் உட்பட பொது மக்களைத் தெளிவூட்டுவதற்கான வீதி நாடகங்கள், சித்திரங்கள், சுவரொட்டிக் கண்காட்சிகள், பாத யாத்திரைகள், விரிவுரைகள் மற்றும் மாநாடுகள் என்பனவும் இதனுடன் இணைந்ததாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.




கொடிகளை அணிவிப்பதன் மூலமாக ஈட்டப்படும் நிதி, சமுர்த்திப் பயனாளிகளின் குடும்ப நலனோம்புகைச் செயற்பாடுகளுக்காகவும், அவர்களுக்கான வீடுகளை நிர்மாணித்தல், புலமைப்பரிசில் செயற்திட்டங்கள், சிறப்புத் தேவைகளை உடையோருக்கு வசதிகளை வழங்குதல், பாடசாலை உபகரணங்களை வழங்குதல் போன்ற சேவைகளை வழங்குவதற்காகவும் பயன்படுத்தப்படும்.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட 'எமது பாதையில் சமூக நலனோம்புத் தடங்கள்' எனும் அறிக்கையும் இதன்போது அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவால், அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ - 5)

# அமைச்சரவைப் பேச்சாளராக தயாசிறி ஜெயசேகர நியமனம்



கொழும்பு, மே 31

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில், அமைச்சரவை இணைப் பேச்சாளராக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவை இணைப்பேச்சாளராக தயாசிறி ஜெயசேகரவை நியமிப்பதற்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் இணங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே இது பற்றிய அதிகாரபூர்வ முடிவை எடுப்பார் என்று தெரியவருகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம், சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

தற்போதைய கூட்டு அரசின் அமைச்சரவை இணைப்பேச்சாளர்களாக ராஜித சேனாரத்ன மற்றும் கயந்த கருணாதிலக ஆகியோர் இருக்கின்றனர்.

சரத் பொன்சேகாவுக்குப் பாதுகாப்புத் துறையில் உயர் பதவி வழங்கவுள்ளதாக அரச தலைவர் அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவித்திருந்தார் என்று, அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன வெளியிட்ட தகவலை அடுத்து, அவருக்கு எதிராகச் சுதந்திரக் கட்சியினர் போர்க்கொடி தூக்கியிருந்தனர். இந்த நிலையில் சுதந்திரக் கட்சி சார்பிலும் ஒருவரை அமைச்சரவை இணைப் பேச்சாளராக நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகிறது. (ஐ - 5)

# கைதிகள் நால்வர் தப்பியோட்டம்

கொழும்பு, மே 31

நீர்கொழும்புச் சிறைச்சாலையிலிருந்து கைதிகள் நால்வர் நேற்று அதிகாலை தப்பிச் சென்றுள்ளனர் என்று சிறைச்சாலை கள் ஆணையாளர் நாயகம் நிசான் தனசிங்க தெரிவித்துள்ளார்.

விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை நீர்கொழும்புப் பொலிஸாருடன் இணைந்து ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ -5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ள இடரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக, வெலிக்கடைச் சிறைச்சாலையின் உத்தியோகத்தர்களும், சிறைக் கைதிகளும் இணைந்து 6 ஆயிரம் மதிய உணவுப் பொதிகளைத் தயார் செய்து நேற்று விநியோகித்தனர். (ஐ - 5)

# இலங்கையைக் கண்காணிக்கும் பன்னாட்டுக் குழுக்கள்

கொழும்பு, மே 31
இலங்கையின் தற்போதைய நிலமை குறித்து, 7 பன்னாட்டுத் தேடல்கள் மற்றும் மீட்புக் குழுக்கள் கண்காணித்து வருகின்றன என்று கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, இந்தக்குழுக்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. தற்காலிக மனிதாபிமானக் குழுவின் கூட்டம் கூட்டப்பட்டது. இலங்கையில் ஏற்பட்டுள்ள இடர்களில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கைகளுக்கு இந்தக்குழுக்கள் ஆதரவளிக்கவுள்ளன. அத்துடன் சுகாதாரக் கருவிகள், நீர் சுத்திகரிப்பு மாத்திரைகள் ஆகியவற்றை நன்கொடையாக வழங்கியுள்ளன. தொழில்நுட்ப ஆதரவு, தகவல் முகாமைத்துவம், பகுப்பாய்வு மற்றும் மருத்துவ அணிகளை ஒருங்கிணைத்தல் ஆகிய உதவிகளையும் குறித்த குழுக்கள் வழங்கவுள்ளன.

தேசிய அவசர நிவாரண சேவைகள் மையத்தின் உடனடித் தேவைகளாகக் குடிதண்ணீர் மற்றும் உணவுப் பொருள்கள் பற்றாக்குறையாக உள்ளது என்று ஐ.நா. அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வெள்ளத்தால் ஏற்பட்ட சேதம் பற்றிய பகுப்பாய்வுக்குத் துணைபுரியும் செயற்கைக் கோள் படத்தைப் பெறுவதற்கு, பன்னாட்டு விண்வெளி மையத்தை, அனர்த்த முகாமைத்துவ மைய நிலையம் நாடவுள்ளது. முகில்கள் காரணமாக இந்த ஒளிப் படங்களைப் பெற்றுக் கொள்வதற்கு கடினமாக உள்ளதெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ - 5)

## இடர்களால் பாதிக்கப்பட்டோருக்கு சிங்கப்பூர் அனுதாபம் தெரிவிப்பு

### ஒரு லட்சம் டொலர் நிதியுதவியையும் வழங்கும்

யாழ்ப்பாணம், மே 31
வெள்ளம் மற்றும் மண் சரிவால் பாதிக்கப்பட்டோருக்கு, சிங்கப்பூர் அரசு அனுதாபம் தெரிவித்துள்ளது. அத்துடன் ஒரு லட்சம் டொலர் நிதி உதவியும் வழங்கியுள்ளது.

சிங்கப்பூர் தலைமை அமைச்சர் லீ சியென் லூங், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே இடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு லட்சம் டொலர் நிதி வழங்கப்படும் எனவும் சிங்கப்பூர் தலைமை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கப்பூரின் அயலுறவுத்துறை அமைச்சர் விவியன் பாலகிருஸ்ணனும், இலங்கை அயலுறவுத் துறை அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் உயிரிழந்தோருக்கான தமது அஞ்சலியைத் தெரிவித்துள்ளார். அதேவேளை, சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கம், இலங்கைக்கு 50 ஆயிரம் டொலர் மதிப்பிலான நிவாரணப் பொருள்களை முதலில் வழங்கும் எனத் தெரிவித்துள்ளது. (ஐ - 5)



## காலியில் விபத்துக்குள்ளான ஹெலியை மீட்பதில் சிக்கல்

கொழும்பு, மே 31
வெள்ள இடர் மீட்பு நடவடிக்கையின்போது, காலி பத்தேகமப் பகுதியில் விபத்துக்குள்ளான எம்.ஐ.17 உலங்கு வானூர்தியை மீட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று வான்படை தெரிவித்துள்ளது.

பத்தேகம இனிமங்கட பகுதியில் உதவிப் பொருள்களை விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த உலங்குவானூர்தியை அவசரமாகத் தரையிறக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

உலங்குவானூர்தியைத் தரையிறக்குவதற்கு அங்கு பொருத்தமான இடம் இருக்கவில்லை. விமானி அனுபவம் மிக்கவராக இருந்ததால், மரங்கள், வீடுகள் என்பவற்றுக்கு மத்தியில் உலங்கு வானூர்தியைத் தரையிறக்கினார். இதன்போது உலங்குவானூர்தியின் வால் பகுதி வீடொன்றின் மீது மோதி உடைந்தது. மரங்களுக்கிடையில் தரையிறக்கப்பட்டதால், அதன் காற்றாடிகளும் உடைந்து நொருங்கின. உலங்கு வானூர்தியின் முன்பகுதி, வெள்ளத்திலும், பின்பகுதி மேட்டுப்பாங்கான பகுதியிலும் சிக்கிக் கொண்டன.

தரையிறக்கப்படும்போது உலங்கு வானூர்தி பலத்த சேதமடைந்தது. அதில் பயணம் செய்த விமானிகள் உள்ளிட்ட 5 வான் படையினர் மற்றும் ஐந்து உதவிப் பணியாளர்கள் பாதுகாப்பாக அதிலிருந்து வெளியேறினர்.

"சேதமடைந்த நிலையில் தரையிறக்கப்பட்ட உலங்கு வானூர்தியை மீட்க முடியவில்லை. சுற்றிவர வெள்ளம் சூழ்ந்திருப்பதால், அதனை மீட்க முடியாதுள்ளது. வெள்ளம் வடிந்த பின்னரே அதனை மீட்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதன் பின்னரே உலங்கு வானூர்திக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்ய முடியும்." என்று வான்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் கிகான் செனிவிரத்ன தெரிவித்தார். (ஐ - 5)

## ஆஸ்திரேலியாவும் இலங்கைக்கு உதவும்

கொழும்பு, மே 31
இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக, 5 லட்சம் அமெரிக்க டொலர்களை ஆஸ்திரேலிய அரசு வழங்கவுள்ளது.

இலங்கையின் தென்மாகாணங்கள் வெள்ளம், மண்சரிவால் கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன. பல லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைவாக மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் காற்று நிரப்பப்பட்ட படகு மற்றும் மோட்டர் படகு என்பவற்றை ஆஸ்திரேலியா அரசு வழங்கவுள்ளது. அத்துடன் சுத்தமான குடிதண்ணீர்ப் போத்தல்களையும் வழங்கவுள்ளது. இதற்கு மேலதிகமாக 5 லட்சம் அமெரிக்க டொலர்களை ஆஸ்திரேலிய அரசு, இலங்கைக்கு வழங்க உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (ஐ - 5)

## உதவும் நாடுகளின் தூதுவர்கள் அயலுறவு அமைச்சருடன் சந்திப்பு

கொழும்பு, மே 31
வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வந்துள்ள அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் ஆகிய நாடுகளின் தூதுவர்கள், அயலுறவுத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடினர்.



அயலுறவுத்துறை அமைச்சரைச் சந்தித்த ஜப்பானிய தூதுவர் கெனிச்சி சுகநுமா, "பல்வேறு துறைகளில் ஜப்பான் உதவிகளை வழங்கும். கூடிய விரைவில் குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், மற்றும் மின் பிறப்பாக்கிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். ஜப்பானில் இருந்து சிறப்பு மீட்புக் குழுவொன்றும் இலங்கை வரவுள்ளது." என்று உறுதியளித்தார்.

அதேவேளை அயலுறவுத்துறை அமைச்சரைச் சந்தித்த அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், "எந்த நேரத்திலும் இலங்கைக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்கா தயாராக உள்ளது." என்று தெரிவித்தார்.

"இந்த நேரத்தில் இலங்கைக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு, எமது நாடு தயாராக உள்ளது" என்று பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டௌரிஸ் அயலுறவுத்துறை அமைச்சரிடம் தெரிவித்தார். (ஐ - 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிப் பொருள்களுடன் வந்தது இந்திய அரசின் 3ஆவது கப்பல்

சீரற்ற காலநிலையால் இடருக்குள்ளான மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக இந்திய அரசால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட மருத்துவர்கள் மற்றும் உதவிப்பொருள்களைஏற்றிக்கொண்டு மூன்றாவது கப்பல் கொழும்புத் துறைமுகத்தை நேற்றுக் காலை வந்தடைந்தது. அரச தலைவர் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தக் கப்பலில் கொண்டு வரப்பட்ட உதவிப் பொருள்களை இலங்கை அரசின் சார்பாக அரச தலைவரின் செயலாளர் பி.பீ.அபேகோன் பொறுப்பேற்றுக் கொண்டு, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்தி னவிடம் கையளித்தார். கப்பலில் வந்த மருத்துவர்கள் உள்ளிட்ட நிவாரணக் குழுவினரை பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டனர். மருந்துப் பொருள்கள், உலர் உணவுகள், சிறிய படகுகள், குடிநீர், கூடாரங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய உதவிப் பொருள்கள் உள்ளடங்கிய சுமார் 10 தொன் நிவாரண உதவிகள் இந்திய அரசால் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன. அதேவேளை பாகிஸ்தான் கப்பல் ஒன்றும் இலங்கைக்கு உதவிப் பொருள்களுடன் வந்துள்ளது. (ற-5)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

கொழும்பு, மே 31
இயற்கை இடரினால் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டி சர்வமத பிரார்த்தனை இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு கோட்டையில் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தக் கூட்டுப் பிரார்த்தனையின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென நிவாரண உதவிகளும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.
அனைத்து இலங்கை வாழ் மக்களையும் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ற-10)

## ஒருமாத சம்பளத்தை பாதிக்கப்பட்டோருக்கு வழங்க முடிவு

கொழும்பு, மே 31
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் ஒரு மாத சம்பளத்தை இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் அகில விராஜ்காரியவசம் தெரிவித்துள்ளார்.
சேகரிக்கப்படும் நிதி இடரால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்து கொடுப்பதற்கு பயன்படுத்தப்படவுள்ளது என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

## பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு மின் விநியோகம் சாத்தியமில்லை

கொழும்பு, மே 31
வெள்ளப் பெருக்காலும், மண்சரிவுகளாலும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு உடனடியாக மின்சாரத்தை வழங்கக்கூடிய சாத்தியம் இல்லை என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.
பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு மின் இணைப்புகள் தற்காலிகமாகதுண்டிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகள் வழமையான நிலைக்குத் திரும்பிய பின்னரே மின் இணைப்பு வழங்கப்படும் என்று இலங்கை மின்சார சபையின் அபிவிருத்திப் பணிப்பாளர் சுலக்சன ஜயவர்தன தெரிவித்தார்.
பாதிக்கப்பட்டுள்ள வீதிகளில் மின் கம்பங்களை பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கான பணியில் சிறப்புக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வெள்ளம் முற்றாக வடியும் வரை மின்சார விநியோகம் இயல்வு நிலைக்குத் திரும்புவது கடினம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

# இயற்கை இடர்களால் 188 பேர் உயிரிழப்பு

## 112 பேர் காயம்; 99 பேரைக் காணவில்லை



கொழும்பு, மே 31
மண்சரிவு, வெள்ளப் பெருக்கு, கடும் மழை என்பவற்றால் 188 பேர் உயிரிழந்துள்ளனர் என்று இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் அறிக்கையிட்டுள்ளது. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 112 ஆக அதிகரித்துள்ளது. காணாமற் போனோரின் எண்ணிக்கை 99 ஆக பதிவாகியுள்ளது.
இரத்தினபுரி மாவட்டத்தில் 31 ஆயிரத்து 921 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 803 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 79 பேர் உயிரிழந்துள்ளனர். 28 பேர் காயமடைந்துள்ளனர். 26 பேர் காணாமற் போயுள்ளனர். 163 வீடுகள் முழுமையாகவும், ஆயிரத்து 658 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. 181 நலன்புரி நிலை யங்களில், 10 ஆயிரத்து 623 குடும்பங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 975 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
களுத்துறை மாவட்டத்தில் 36 ஆயிரத்து 36 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 320 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 59 பேர் உயிரிழந்துள்ளனர். 69 பேர் காயமடைந்துள்ளனர். 53 பேர் காணாமற் போயுள்ளனர். 223 வீடுகள் முழுமையாக வும், 990 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 81 நலன்புரி நிலையங்களில் 550 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 295 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
மாத்தறை மாவட்டத்தில் 43 ஆயிரத்து 333 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 61 ஆயிரத்து 763 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 24 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார். 15 பேர் காணாமற் போயுள்ளனர். 246 வீடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 2 ஆயிரத்து 127 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 26 நலன்புரி நிலையங்களில் 2 ஆயிரத்து 891 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 85 பேர் தங்க வைக்கப்பட்டுள்ள னர்.
காலி மாவட்டத்தில் 26 ஆயிரத்து 72 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 144 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 13 பேர் உயிரிழந்துள்ளனர். 2 பேர் காயமடைந்துள்ள னர். 5 பேர் காணாமற்போயுள்ளனர். 176 வீடுகள் முழுமையாகவும், 481 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 12 நலன்புரி நிலையங்களில் 634 குடும்பங்க ளைச் சேர்ந்த ஆயிரத்து 411 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 188 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 756 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 5 பேர் உயிரிழந்துள்ளனர். 63 வீடுகள் முழுமையாகவும், 393 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.
கம்பகா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 756 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 133 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 4 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார். 2 வீடுகள் முழுமையாகவும், 55 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 27 நலன்புரி நிலையங்களில் 2 ஆயிரத்து 535 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 692 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
கேகாலை மாவட்டத்தில் ஆயிரத்து 537 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 848 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 4 பேர் உயிரிழந்துள்ளனர். 7 பேர் காயமடைந்துள்ளனர். 9 வீடுகள் முழுமையாக வும், 64 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. 6 நலன்புரி நிலையங்களில், 33 குடும்பங்களைச் சேர்ந்த 124 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.
கொழும்பு மாவட்டத்தில் 4 ஆயிரத்து 439 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 597 பேர் பாதிக்கப்பட்டுள்ள னர். 3 பேர் காயமடைந்துள்ள னர். 7 வீடுகள் முழுமையாகவும், 32 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 41 நலன்புரி நிலையங்களில் ஆயிரத்து 706 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 750 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-5)



## இயற்கை இடரால் மாணவர்கள் 8பேர் உயிரிழப்பு

கொழும்பு, மே 31
வெள்ளப்பெருக்கில் தென் மாகாணத்தில் இதுவரை 8 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். ஒன்பது பேர் காணாமல் போயுள்ளனர் என்று தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் திருமதி பிரசாஞ்சலி கமகே தெரிவித்தார்.
மாத்தறை மாவட்டத்தில் மொரவக்க பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் இவர்களில் மூன்று மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். ஒன்பது பேர் காணாமல்போயுள்ளனர். முலட்டியான கல்வி வலயத்தில் மூன்று மாணவர்களும், அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்லை கல்வி வலயத்தின் இரண்டு மாணவர்களும் உயிரிழந்துள்ளனர் என்று தகவல் கிடைத்துள் ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற-5)

## தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சால் பயிற்றப்பட்டோர் மீட்பு பணியில்

கொழும்பு, மே 31
இயற்கை இடரால் சேதமாகியுள்ள வீடுகளையும், ஏனைய கட்டடங்களையும் திருத்தும் பணியில் திறன்கள் அபிவிருத்தி தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சால் பயிற்றுவிக்கப்பட்டுள்ள மாணவர்களைக் கொண்ட செயலணியொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.
தனது அமைச்சின்கீழ் நாடு முழுவதிலும் உள்ள பயிற்சி நிலையங்களில் கட்டட நிர்மாணத் துறையில் பயிற்சிபெற்ற மாணவர்கள் இந்தத் தன்னார்வத் தொண்டர் அணியில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். அவர்களுக்கான சகல உதவிகளும் அமைச்சால் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
நாடு முழுவதிலும் பயிற்சி நிலையங்களிலிருந்து தெரிவாகும் மாணவக் குழுக்கள் இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்டுள்ள ஏழு மாவட்டங்களிலும் குழுவாரியாக இன்று முதல் தங்களது பணிகளை ஆரம்பிப்பார்கள் எனவும் அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். (ற5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மிக விரைவான நடவடிக்கை வேண்டும்

ஒரு கிரிக்கெட் ஆட்டத்தில் 100 ஓட்டங்கள் அடித்திருந்தால் பாராட்டலாம். ஆனால் மக்கள் போராட்டம் ஒன்று 100 நாள்களைக் கடந்து சென்றிருந்தும் அரசு பாராமுகமாக இருக்கிறது என்பது மகிழ்ச்சியடையக்கூடியதல்ல, அதுவொரு சாபக்கேடு; கொடுமை. ஒருபுறத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஓடியோடி உதவி செய்யும் அரசு, மறுபுறத்தில் தமக்கு உதவுமாறு கேட்டு வீதியில் போராடும் மக்களைக் கண்டுகொள்ளாமலேயே இருப்பது இந்த அரசின் மீதான நம்பிக்கையை மேலும் மேலும் தமிழர்களிடம் பலவீனப்படுத்திக்கொண்டே செல்கிறது.

இறுதிப்போரின்போதும், போர்நடந்தகாலங்களிலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியத்தரும்படி கேட்டே இந்த மக்கள் கிளிநொச்சியில் 100 நாள்களுக்கு முன்னர் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அமைதியான வழியில், எவருக்கும் எந்த இடைஞ்சலும் கொடுக்காமல் அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறார்கள். இடையில் வடக்குகிழக்கு முழுவதும் முழு அடைப்புப் போராட்டம் ஒன்றை நடத்தித் தமது பிரச்சினையை அரசுக்கு ஞாபகமூட்டவும் முயன்றார்கள். ஆனால், அரசு எதற்கும் அசைந்து கொடுப்பதாக இல்லை.

குறைந்தபட்சம் இந்த மக்களின் கோரிக்கையின் பின்னனராவது காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை இயக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், அதுகூட நடைபெறவில்லை. அந்த அலுவலகம் தமது பிரச்சினைக்குத் தீர்வல்ல, அது ஓர் உள்ளூர் பொறிமுறை என்பதால் அதில் தமக்கு நம்பிக்கையில்லை என்று காணாமற்போனவர்களின் உறவினர்கள் அதனை நிராகரித்து விட்டாலும்கூட, அவர்களின்போராட்டத்துக்கு மதிப்பளித்துக்குறைந்தபட்சம்அந்தஅலுவலகத்தையாவது இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை நிறுவுவதற்கானசட்டம்ஏற்கனவேநிறைவேற்றப்பட்டுவிட்டது. இது தொடர்பான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும்போதே ஜே.வி.பி. திருத்தத்தை முன்வைத்திருந்தது. அந்தத் திருத்தம் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. அந்தத் திருத்தத்தை உள்வாங்குவதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கிவிட்டது. ஆனால் திருத்தச் சட்டவரைவு இன்னமும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. இந்தத்திருத்தத்தைஉள்ளடக்கவேண்டும் என்பதற்காகவே அலுவலகத்தை இயக்குவதில் தாமதம் ஏற்படுவதாக அரசுத் தரப்பில் காரணம் கூறப்படுகிறது.

ஆனால், அந்தத் திருத்தத்தை நிறைவேற்றியதன் பின்னர்தான்அலுவலகத்தைஇயக்கவேண்டும்என்பதில்லை,அலுவலகத்தை இயக்கிக் கொண்டும் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று சட்ட வல்லுநர்கள்சுட்டிக்காட்டுகிறார்கள். எனவே, இந்தவிடயத்தில்அரசு வேண்டும் என்றே காலந் தாழ்த்துகிறது.

காணாமற்போனோர்தொடர்பானஅலுவலகத்தைநிறுவுவதற்கான சட்டத்தை உருவாக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல்விடுக்கப்பட்டுஒருவருடம்கடந்துவிட்டபோதிலும் அலுவலகத்தை ஆரம்பிப்பதற்கான பணி ஓர் இஞ்சிகூட நகரவில்லை என்பதே இந்த விடயத்தில் அரசுக்கு உள்ள அக்கறையைத் தெளிவாகக் காட்டிவிடுகிறது.

மக்களுக்கு நீதியை வழங்குவோம் என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஒரு அரசு, தன்னை நல்லாட்சி அரசு என்று அழைத்துக் கொண்ட அரசு இப்படி ஒரு பகுதி மக்களின் பிரச்சினையை அலட்சியமாக அணுவதன்பின்னால்இனப் பாகுபாடுதவிர்ந்த வேறு எந்தப்பொருத்தமானகாரணத்தையும் கற்பிக்க முடியவில்லை.

அரசு இந்தப் போக்கிலேயே தொடர்ந்தால் அரசு மீது தமிழர்கள் முற்றாகவே நம்பிக்கையிழந்து போகும் நிலையே ஏற்படும். அதற்கு முன்னதாக காணாமற்போனோர் தொடர்பிலான அலு வலகத்தை உனடியாக அமைத்து எஞ்சியிருக்கும் கொஞ்சநஞ்சநம்பிக்கையையாவது அரசு காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இது விடயத்தில் இறுக்கமான நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. அரசுக்கு வலிக்குமே என்பதற்காகவோ, ஆட்சி குழம்பிப் போய்விடுமே என்பதற்காகவோ இந்த விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்பும் இருக்கக்கூடாது. விரைவில் அரசைப் பதில் சொல்ல வைக்கவேண்டும்.



# பொது நூலகத்தைத் திட்டமிட்டு எரியூட்டி இனவாதம் கக்கிய சிங்கள ஆட்சியாளர்கள்

## 36 ஆண்டுகளின் முன்னர் சிங்கள அரசு நிகழ்த்திய ஊழிக்கூத்தின் இரை மீட்பு

■ மு. ஈழத்தமிழ்மணி

'தேடு, கல்வி இலா ஊரைத் தீமூட்டு' என்று கூறினார் சுப்பிரமணிய பாரதியார். தமிழர்களின் கல்விக்கு அடி அத்திபாரமாய் விளங்கும் பொது நூலகத்தையே எரித்து சாம்பராக்கு என்றது ஐக்கிய தேசியக் கட்சி அரசு. ஈழத்தமிழர்களின் வாழ்வியலுக்கு கல்விச் செல்வத்தை ஈந்த பொது நூலகத்தையே எரித்துச் சாம்பராக்கிய மகா கொடுமையான சம்பவம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று இன்று முப்பத்தி ஆறு ஆண்டுகளாகி விட்டன.

97000நூல்களையும், பழைமை வாய்ந்த 1800 ஓலைச் சுவடிகளையும், சஞ்சிகைகளையும் ஒன்று சேர்த்து எரித்துச் சாம்பலாக்கிய பண்பாட்டுப் படுகொலை, 1981 ஆம் ஆண்டு மேமாதம் 31ஆம் திகதியன்று அரங்கேற்றப்பட்டது. அன்று ஐக்கிய தேசியக் கட்சி அரசும், அரசினது முக்கிய அமைச்சர்களும், கொழும்பிலிருந்து கூட்டிவரப்பட்ட பல குண்டர்களும், படையினரும் சேர்ந்துநடத்திய அராஜகம், மறக்க முடியாததும் மன்னிக்க முடியாததுமாகும். அந்த யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்புச் சம்பவம் தமிழர்களது நெஞ்சங்களில் வரலாற்றுப் பதிவாகியுள்ளது.

### யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் வரலாறு தொன்மைவாய்ந்ததொன்று

யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்கென நீண்டதொரு வரலாறுண்டு. 13ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் நல்லூரில், யாழ்ப்பாண மன்னன் சிங்கை ஆரியச்சக்கரவர்த்திகளின் ஒரு [illegible] காலத்தில் (1380 தொடக்கம் 1414) 'சரஸ்வதி மகாலயம்' என்ற பெயரில் நூலகம் இருந்திருக்கின்றது. இந்த நூலகத்துக்கு தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த புலவர் பெருமக்களால் பழைய நூல்களின் ஏடுகள் கொண்டு வரப்பட்டன. இந்த நூலகமே வட ஈழத்தில் முதல் நூலகம்மட்டுமன்றி பிற்காலத்தில் பெரும்புகழ் கொண்ட யாழ்ப்பாண நூலகத்தின் மூலவேரென வரலாறு சான்று பகருகின்றது.

1842 ஆம் ஆண்டு பெரிய நீதிமன்றக் காரியதரிசியாய் இருந்த எப்.ஸி.கிறினியர் என்பவரால் யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் நூல் நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிறினியர் என்பவரால் தொடங்கப்பட்ட நூல்நிலையம் பயன்படுத்தப்படாமலிருந்தது. நீதிமன்றத்துக்குள் வேறொரு நூல்நிலையம் இருந்தமையாலும், அதனை வழக்கறிஞர்கள் மட்டும் பயன்படுத்தியிருந்தமையாலும் நாளடைவில் அது கவனிப்பாரின்றிக் கிடந்தது.

யாழ்ப்பாணத்தில் ஒரு பொது நூலகம் அமையவேண்டும்என்ற யோசனை, 1933 ஆம் ஆண்டில் புத்தூர் மேற்கைச் சேர்ந்தவரான சக்கடத்தார். க.மு.செல்லப்பா என்ற படித்த கனவானும், பரோபகாரியமான பெருமகனது மனதில் உதித்தது. அவரது அந்த நல்லெண்ணம் பல அறிஞர்கள் பெரியார்களிடம் முன்வைக்கப்பட்டபோது, அவர்கள் அதனை வரவேற்று முழுமையான நூலகமாக அமைக்க வேண்டுமென விரும்பினர்.

1934 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் திகதி ஒன்றுகூடி, நூலகம் அமைப்பதற்கான குழுவை ஏற்படுத்தினார்கள். அந்தக் காலப்பகுதியில் நீதிபதியாக இருந்தவரான சீ.குமாரசாமி, குழுவின் தலைவராகவும், வண.டாக்டர் ஐஸக் தம்பையா துணைத்தலைவராகவும், சீ.பொன்னம்பலம் இணைச்செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர். க.மு.செல்லப்பாவின் அயராத முயற்சியினால் நூலகத்திற்கென 1184 ரூபா 22 சதம் நன்கொடையாகக் கிடைத்தது. நூலகத்தின் ஆரம்ப வளர்ச்சிக்கான மூலதனமாக அந்தத் தொகை அமைந்தது.

க.மு.செல்லப்பாவின் இடைவிடாத முயற்சியால் உருவான நூல்நிலைய சபையின் பெயர், இலவசத் தமிழ் நூல்நிலையச் சங்கம், யாழ்ப்பாணம் எனப் பயன்படுத்தப்பட்டது. தொடக்கத்தில் நூலகத்தில் இரவல் கொடுக்கும் பகுதியில் 844 நூல்கள் இருந்தன. இவற்றில்150நூல்கள் புதிதாகவாங்கப்பட்டவை. எஞ்சிய 694 நூல்களும் அன்பர்கள், அங்கத்தவர்கள், மற்றும் பொதுமக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டவை. சஞ்சிகைகள், நாளிதழ்கள் ஆகியவற்றை விற்பனை செய்யும் முகவர்கள் அவற்றின் பிரதிகளை நூலகத்துக்கென இலவசமாகக் கொடுத்துதவினர்.

த.க.மு.செல்லப்பாவினால் தொடங்கப்பட்ட மத்திய இலவச தமிழ் வாசகசாலையை 1935 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி யாழ்ப்பாண நகரசபை பொறுப்பேற்றுக் கொண்டது. 28.7.1934 அன்று யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் மின்சார நிலையத்துக்குத் தென் பகுதியில்ஒரு கடை வாடகைக்கு எடுக்கப்பட்டு நூலகம் தொடங்கப்பட்டது. பின்னர் பிரதான வீதியில் ஒரு சந்தியில், அபூபக்கர் கட்டடத்தில் பெரிய அளவிலான முகப்புக்கடையொன்றை வாடகைக்கு எடுத்து அதில் நூலகத்தை இயங்க வைத்தார்கள். 1936 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண வாடிவீடுக்குத் தென்திசையில் சைவ வித்தியாவிருத்திச் சங்கக் காரியாலயக்கட்டடத்தின் அருகிலுள்ள மாடிக்கட்டடத்தின் மேல் மண்டபத்தை, புத்தூர் மழவராயர் குடும்பத்தாரிடம் மாதம் 65 ரூபா வாடகை செலுத்திப்பெற்று அந்த இடத்துக்கு நூலகத்தை மாற்றினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நூலகத்தைப் பொறுப்பேற்றது யாழ்.மாநகரசபை

மாடி வீட்டில் அமைந்திருந்த நூலகம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ச்சியடைந்தது. 1949 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாநகர சபையாக விரிவடைந்தபோது, அதன் தலைவர், நகரத்தை உயர்த்துகின்ற உயரிய சிந்தனைக்கேற்ப தமது கடமைகளோடு அறிவுக்கண்களைத் திறக்கும் நூலகத்தையும் சிறப்பான முறையில் நடத்தவேண்டிய பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் பெரிய நூலகத்தை யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டும் என்று எண்ணினார். அவரின் சிந்தனைக்கமைய 16.05.1952 அன்று பல பிரமுகர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதன் பெறுபேறாக யாழ்ப்பாணம் மத்திய நூல்நிலையசபை உருவாகியது.

யாழ்மாநகர மையப்பகுதியான முனியப்பர், கோயிலுக்குக் கிழக்கே இருந்த முற்றவெளியை நூலகக் கட்டடம் அமைப்பதற்காகத் தெரிவு செய்தனர். நூலகக் கட்டட அடிக்கல் நாட்டுவிழா 29.03.1954 இல் நடைபெற்றது. அன்றைய நிகழ்வில் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சேர். செசில் சையெஸ், அமெரிக்கத் தூதுவர் எச்.யி.பிலிப் குறோல், இந்தியத் தூதுவரின் முதற்செயலாளர் சிறிசித் தார்த்தசாரி ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதா கும்.



உதவிகள் பல கிடைத்தும், அப்போதிருந்த மாநகர முதல்வரால் நூலகத்தைக் கட்டிமுடித்துத் திறந்து வைக்க முடியவில்லை. நூலகக்கட்டடத்தின் ஒருபகுதியை வேகமாகக் கட்டிய அப்போதைய யாழ்ப்பாண முதல்வரான அல்பிரட் துரையப்பா, 11.10.1959 அன்று அதனைத் திறந்து வைத்தார். அதிலிருந்து படிப்படியாக வளர்ந்து வந்து பெருமை வாய்ந்த நூலகமாக, தமிழ் மக்களுக்கு கிடைத்த அரும்பெரும் பொக்கிசமாக யாழ்ப்பாண நூல் நிலையம் அமைந்தது. யாழ்ப்பாணப் பொது நூலகம், 1936 ஆம் ஆண்டு யாழ் மாநகரசபையின் முதலாவது முதல்வராகப் பணியாற்றிய சாம்சபாபதி, 1953 இல் வண.லோஸ் அடிகளார் போன்றோரை உள்ளடக்கிய கல்விமான்கள், பிரமுகர்களைக் கொண்ட குழுக்களின் முயற்சியால் காலத்துக்குக் காலம் வளர்ச்சி கண்டு வந்தது. தற்போதைய இடத்தில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டும், அத்துடன் புதியதொரு கட்டடத்தைத் தன்னகத்தே கொண்டும் பன்னாட்டுத் தரத்திலான கட்டடத் தொகுதியாக உயர்ந்து நிற்கின்ற யாழ்ப்பாணப் பொதுநூலகம் ஈழத்தமிழர்களுக்கென்று இருக்கவே கூடாது என்ற தீய எண்ணத்தில் அதனை அழிப்பதற்கென்றே அப்போதைய முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசதலைவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான அரசில் முக்கிய அமைச்சர்களாக இருந்தவர்களான காமினி திசநாயக்கா, சிறில்மத்தியூ ஆகியோர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

1981 இல் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான மாவட்டசபைத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில், ஐக்கிய தேசியக் கட்சி தனது முழுப் பலத்தையும் பயன்படுத்தி மாவட்டசபைத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இறுதிநேரத்தில் வன்முறைகளில் இறங்கிச் செயற்பட்டது. யாழ்ப்பாணத்தில் உள்ள அறிவியல் விருட்சமான நூலகத்தை முற்றாக எரித்து அழிப்பதன் மூலம் மாவட்டசபையின் அதிகாரத்தைக் கைப்பற்றும் ஐ.தே.கட்சி ஆட்சியாளர்களது நோக்கம் இறுதியில் சிதைந்து போனது.

யாழ்ப்பாணத் தலைநகரை முற்றாக எரிப்பதன் மூலம் தமிழினத்தின் விடுதலையுணர்வுகளை வேருடன் அறுக்க வேண்டும், அவர்களின் கல்வித் திறனையும் நலிவுபடுத்தவேண்டும் என்ற நோக்குடன் ஐக்கியதேசியக்

> “
> தமிழினத்தை அழிக்கின்ற அடக்குமுறை நடவடிக்கையில் பொது நூலகத்தை எரித்துச் சாம்பலாக்கிய வரலாற்று நிகழ்வு பெரும் துயரச் சம்பவமாகும். அறிவு சார் தேட்டத்தின் திட்ட மிட்ட பண்பாட்டுப் படுகொலையாக சிங்கள அரசியல் சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட பொதுநூலக அழிப்பை வரலாறு என்றும் மன்னிக்காது.

கட்சி அரசு 1981 மே 31 ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னர் ஆரம்பித்த அராஜகமும், ஊழிக்கூத்தும் மிகப் பயங்கர வெறியாட்டமாக யூன் மாதம் முதலாம் திகதிவரை கோரத்தாண்டவமாடியது. பொலிஸாரினதும், குண்டர்களின் ஊழிக் கூத்து தமிழர்களின் குருதியை உறையவைத்தது.

### மாவட்ட சபைத் தேர்தலைக் குழப்பக் குண்டர்களை ஏவியது ஐ.தே.கட்சி அரசு

யாழ்ப்பாணம் வண்ணை நாச்சிமார் கோயிலடியில் 1981 ஜீன் 31ஆம் திகதியன்று இரவு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாவட்ட சபைத் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இரண்டு பொலிஸார் மீது இனம் தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது, பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்டார். அமைச்சர்களின் நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் தினசரிப் பத்திரிகையாக வெளியாகிக் கொண்டிந்த ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் மீது குண்டு தாக்குதல் நடத்தியதுடன் தீயிட்டு எரிக்கப்பட்டது. அப்போது தீவிரமாகச் செயற்பட்ட யாழ்ப்பாணத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான யோகேஸ்வரனையும், அவரது மனைவியையும் வீட்டுக்குள் புகுந்து சுட்டுக் கொல்லமுயற்சித்தபோது இருவரும் தப்பியோடியதால் உயிர்தப்பினர். வீட்டை முற்றாக எரித்து சாம்பலாக்கியது, அந்தக் குண்டர்கள் குழு. யாழ் மத்திய பஸ் நிலையத்தைச் சூழ இருந்த கடைகளையும் முற்றாக எரித்த படையினரின் அராஜகம் பிரதான வீதியிலிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயம், அருகிலிருந்த வர்த்தக நிலையம, மருத்துவர் செபஸ்தியானின் மருத்துவ நிலையம் போன்றவற்றையும் எரித்து சாம்பலாக்கியதுடன் யாழ் மாநகரப் பகுதியை மயானமாக்கியது. படையினரால் உத்தியோக பூர்வமற்ற ஊரடங்குச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு இரு அமைச்சர்களான காமினி திசநாயக்கா மற்றும் சிறில் மத்தியூ ஆகியோரின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட யாழ் மாநகரத்தை தீயூட்டி அழித்து நிர்மூலமாக்கும் திட்டத்தில் நூலகத்தை எரித்துப் பொசுக்குவது முக்கிய குறிக்கோளாக அமைந்திருந்தது.

நூலகம் தீயில் எரிவதைக் கண்டும் கேள்விப்பட்டும் அங்கு குழுமிய பொது மக்கள் நூலகத்தை தீயில் பொசுங்குவதினின்றும் காப்பாற்ற முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை. யாழ் நூலகம் எரிந்து சாம்பலாகும் வரையில் சுற்றிவர நின்ற பொலிஸார் அந்த இடத்துக்குக் கிட்டச்செல்ல எவரையும் அனுமதிக்கவில்லை.

### பொதுநூலகம் எரிவதைக் கண்டு அதிர்ச்சியில் சாவடைந்த வண.தாவீது அடிகளார்


யாழ்ப்பாணப் பொது நூலகம் வன்முறைக் கும்பல்களினால் மூட்டப்பட்ட செந்தணலில் பொசுங்கி நீறாகிப் கொண்டிருந்த துயரச் சம்பவத்தை யாழ்ப்பாண சம்பத்தரிசியார் கல்லூரி மாடியிலிருந்து அவதானித்துக் கொண்டிருந்த பன்மொழிப் புலவர் வண. தாவீது அடிகளார் மாரடைப்பால் உயிர் நீத்தார்.

யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்ட அராஜக செயல் குறித்த செய்தியை ஈழநாடு செய்தித்தாள் பிறிதொரு அச்சுக்கூடத்தில் அச்சடித்து வெளியிட்ட போதுதான் மக்கள் முழுமையாக நம்பினர். யூன் மாதம் முதலாம் திகதி காலையிலிருந்து யாழ்.குடாவெங்கணுமிருந்து மக்கள் யாழ்ப்பாணத்தில் தீயோடு பொசுங்கிக் கொண்டிருந்த நூலகத்தைப் பார்வையிட திரண்டபடியிருந்தனர். நேரடியாகப் பார்த்தவர்கள் ஏங்கி நின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்து வன்முறைச் சம்பவங்களையும் விசாரிப்பதற்கு அப்போதைய அரசதலைவரால் தனி நபர் விசாரணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது. ஆணைக்குழுவினால் எரியூட்டப்பட்டபொதுநூலகத்துக்கு ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபா நஷ்ட ஈடாக வழங்கப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டிருந்தும் அரசினால் அது வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நாடாளுமன்றில் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோரியிருந்தார். அப்போதைய ஐக்கியதேசியக் கட்சி ஆட்சி செய்தபோது அமைச்சராக இருந்தவர், தாம் சார்ந்திருந்த ஆட்சியினர் பொது நூலகத்தை எரித்ததை 35 வருடங்களுக்குப் பின்னர் தலைமை அமைச்சர் என்ற நிலையிலிருந்து ஒப்புக் கொண்டுள்ளார்.

புத்தகத்துக்கு உயிரில்லை. ஆனால் உயிருள்ளவனை அது மனிதனாக்கும். மனிதர்களுக்குத்தான் நூல்களின் பெறுமதி தெரியும். பொதுநூலகத்தை எரித்த படையினருக்கும், குண்டர்களுக்கும் அதனை முன்னின்று நடத்திய இரண்டு அமைச்சர்களுக்கும், யாழ்பொதுநூலகத்தின் பெறுமதி தெரியவேயில்லை. தமிழினத்தை அழிக்கின்ற அடக்குமுறை நடவடிக்கையில் பொது நூலகத்தை எரித்துச் சாம்பலாக்கிய வரலாற்று நிகழ்வு பெரும் துயரச் சம்பவமாகும். அறிவுசார் தேட்டத்தின் திட்டமிட்ட பண்பாட்டுப் படுகொலையாக சிங்கள அரசியல் சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட பொதுநூலக அழிப்பை வரலாறு என்றும் மன்னிக்காது. யாழ்பொது நூலகம் ஈழத்தமிழர்களின் தனித்துவ அடையாளம் என்பதுபோல், நூல் நிலைய எரிப்புச் சம்பவமும் சிங்கள இனத்துக்கு என்றும் கறை படிந்த அத்தியாயம் என்பதே உண்மையாகும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### கொலைக் களமாக மாறிவிட்ட குடாநாட்டு வீதிகள்

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளையில் யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகத்துக்கு மினிபஸ்சில் பயணம் செய்து கொண்டிருந்தேன். மினிபஸ் பயணிகளை ஏற்றும் பொருட்டு குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் நிறுத்தப்பட்டது. வலதுபக்க ஆசனமொன்றில் நான் அமர்ந்திருந்ததால் வீதியின் கிழக்குப் பக்கத்தில் தெரிந்த ஒரு காட்சி கண்ணில் பட்டது. வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை அணந்திருந்த சுமார் 75 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் வீதியின் ஓரமாக விழுந்து கிடந்தார். அவரது தலையிலிருந்து குருதி கொட்டிக் கொண்டிருந்தது. பக்கத்தில் சிலர் நிற்பதும் தெரிந்தது. அப்போது மினிபஸ்சினுள் ஏறிய பெண் பிள்ளை ஒருவர், சைக்கிளில் வீதியோரமாகப் பயணித்துக் கொண்டிருந்த அந்த முடியவரைப் பின்னால் வேகமாக வந்த காரொன்று மோதித் தள்ளிவிட்டு நிற்காது ஓடி மறைந்து விட்டதாகக் கூறினார். ஈவிரக்கமில்லாத அந்தக் கார்ச் சாரதியின் செயற்பாட்டை நினைக்கையில் இதயம் வலித்தது. குடாநாட்டின் வீதிகள் தற்போது கொலைக் களங்களாக மாறிவிட்டன. வாகனச் சாரதிகளின் பொறுப்பில்லாத செயற்பாடுகளால் தினமும் விபத்துக்கள் இடம்பெறுகின்றன. உயிரிழப்போர் மற்றும் படுகாயங்களுக்கு உள்ளாகுவோரின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமேயுள்ளது.

மனித உயிர்கள் பெறுமதி மிக்கவை. ஆனால் கண்மூடித்தனமாக வாகனங்களைச் செலுத்துபவர்கள் இவற்றைத் துச்சமாகவே கருகின்றனர்.

மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் போட்டி போட்டுக் கொண்டு தலைதெறிக்க தமது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் செல்கின்றனர். அநேகமான விபத்துக்களுக்கு இவர்களே காரணமாக ஆகின்றனர். மினிபஸ்சும், அரசபஸ்சும் ஒன்றையொன்று கண்டுவிட்டால் உன்மத்தம் பிடித்தவை போன்று சீறிப் பாய்ந்து செல்கின்றன.

வீதியில் பயணம் செல்பவர்கள்குறித்தோ அல்லது தமது வாகனங்களில் பயணிக்கும் பயணிகளது பாதுகாப்புக் குறித்தோ சாரதிகள் கருத்தில் கொள்வதில்லை. போட்டிபோட்டு ஓடுவதுதான் அவர்களது ஒரே குறிக்கோளாகும். ஏனைய வாகனச் சாரதிகளும் வீதி முழுவதும் தமக்கே உரித்தானது என்ற வகையில் நடந்து கொள்கின்றனர். கட்டை வண்டியில் பயணித்த அந்தக் காலத்தில் மனிதர்கள் மெதுவாகப் பயணித்தாலும், பாதுகாப்பாகப் பயணித்தார்கள். ஆனால் இன்று வேகமாகச் சென்றாலும் இறுதி முடிவு அதே வேகத்தில் தான் முடிந்து விடுகின்றது.

க.பரமேஸ்வரன்
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி லொத்தர் சபையின் 'ராசி அதிர்ஷ்டம்' அதிர்ஷ்ட லாபச் சீட்டு சந்தைக்கு அறிமுகம்

## வடக்குக் கிழக்கு மக்களுக்குப் பரிசுகளை வழங்கும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது

அபிவிருத்தி லொத்தர் சபையின் 'ராசி அதிர்ஷ்டம்' எனும் அதிர்ஷ்ட லாபச் சீட்டைச்சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி வடக்கு கிழக்கு மக்களுக்கு பரிசுகளை அதிகம் வழங்கும் வரப்பிரசாதமாக அபிவிருத்தி லொத்தர் சபையினால் உருவாக்கப்பட்டுள்ள இந்த 'ராசி அதிர்ஷ்டம்' எனும் அதிர்ஷ்ட லாபச்சீட்டுக்கள் இம்மாதம் 05 ஆம் திகதி முதல் வடக்குக் கிழக்கு சந்தைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அறிமுக நிகழ்வில் அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் ரொமேஷ் ஜயவர்தன, உப தலைவர் ஆர்.ஐ.விமலசேன, பொது முகாமையாளர் சமன் ஜெயசிங்க, பிரதி பொது முகாமையாளர் அநுர ஜயரத்ன மற்றும் உதவி பொது முகாமையாளர் அசங்கா குணசிங்க ஆகியோர் கலந்து கொண்டிருந்ததாகக் கூறப்படு கின்றது. அத்துடன் அன்றைய நிகழ்வில் முதல் தொகுதி அதிர்ஷ்ட லாபச் சீட்டுக்கள் மட்டக்களப்பு விற்பனை முகவர் எஸ்.ஹரிஹரனிடம் கையளிக்கப்பட்டது.

வழமையான சீட்டிழுப்புக்கு மேலதிகமாக இச் சீட்டிழுப்பின் விசேடத்துவமாக மற்றுமொரு சீட்டிழுப்புக்கான சந்தர்ப்பம் இந்த அதிர்ஷ்ட லாப சீட்டில் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிர, இந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டானது வடக்குக் கிழக்கு மக்களின் நலனைக் கருதிற்கொண்டு அவர்களுக்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. எனவே வடக்குக் கிழக்கு மக்கள் அதிகளவான அதிர்ஷ்ட லாபச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்து கொண்டு அதிகரித்த நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென அபிவிருத்தி லொத்தர் சபையின் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இவ் விசேட சீட்டிழுப்பில் வெற்றிபெறுவோருக்கான பரிசு வழங்கலில் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. முதலில் தெரிவு செய்யப்படும் 40 இலக்கங்களுக்கு ஒரு தங்க நாணயம் வீதம் 40 தங்க நாணயங்கள் பரிசாக வழங்கப்படும்.
2. இரண்டாவதாகத் தெரிவு செய்யப்படும் 4 இலக்கங்க ளுக்கு ஒரு அப்பிள் ஐ போன் வீதம் 4 ஐ போன்கள் பரிசாக வழங்கப்படும்.
3. மூன்றாவதாகத் தெரிவு செய்யப்படும் 3 இலக்கங்கங்களுக்கு ஒரு தங்க ஆபரணம் வீதம் 3 தங்க ஆபரணங்கள் பரிசாக வழங்கப்படும்.
4. நான்கவதாகத் தெரிவு செய்யப்படும் 2 இலக்கங்களுக்கு ஒவ்வொரு ஸ்கூட்டர் வீதம் 2 ஸ்கூட் டர்கள் பரிசாக வழங்கப்படும்.
5. ஐந்தாவதாகத் தெரிவு செய்யப்படும் இலக்கத்திற்கு பெறுமதிமிக்க எக்சியா வகை சார்ந்த கார் ஒன்று பரிசாக வழங்கப்படும்.




"ராசி அதிர்ஷ்டம் உங்களை வெற்றியாளராக்கும் தனியோகம். விசேட சீட்டிழுப்புச் செயற்பாடுகள் எதிர்வரும் ஜூன் மாதம் 9ஆம் திகதி மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது"

# முதலீடு மற்றும் வர்த்தக மாநாடு கொழும்பில் ஆரம்பம்

## இலங்கை வர்த்தக சபையின் ஏற்பாட்டில் இடம்பெறுகிறது

இலங்கை வர்த்தக சபையின் ஏற்பாட்டின் கீழான முதலீடு மற்றும் வர்த்தக மாநாட்டு நிகழ்வுகள் நேற்றைய தினம் கொழும்பில் ஆரம்பமாகியுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பிரகாரம் இலங்கையின் பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டே இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் 15 நாடுகளைச் சேர்ந்த முன்னணி வர்த்தக நிறுவனங்கள் மற்றும் 50 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளமை நோக்கத்தக்கது.

இதன்மூலம் இலங்கையில் வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் சிறிய மற்றும் மொத்த வர்த்தக நிறுவனங்கள் தமக்கான முதலீட்டு வசதிகள் குறித்தான மேம்பாட்டினையும் மற்றும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்றுவரும் இந்த மாநாட்டு நிகழ்வுகள் நாளைய தினம் நிறைவுறுகின்றது.

# கடற்றொழில் துறையில் அதிகளவான வேலை வாய்ப்புகளை வழங்கத் தயார்

கடற்றொழில் துறையில் அதிகளவான வேலை வாய்ப்புகளை வழங்கத் தாம் தயாராக இருப்பதான தகவல்கள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சகத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 10 லட்சம் அரச தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழாக கடற்றொழில் துறையில் ஏறத்தாழ ஒரு லட்சத்து 20 ஆயிரம் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

தவிர, மன்னார் பிரதேசத்தில் 3 ஆயிரம் ஏக்கர் மற்றும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பில் அமைக்கப்படவுள்ளதான நீர்நிலை உற்பத்தித் தொழிற்றுறை பூங்காக்கள் இரண்டின் கீழாக ஏறத்தாழ 40 ஆயிரம் தொழில்வாய்ப்புகளையும் பெற்றுக்கொடுக்க தீர்மானித்துள்ளதாகவும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

# சுற்றாடலுக்கு சாதகமான கிளையை ஹொரணையில் ஆரம்பித்தது செலிங்கோ லைவ்

சுற்றாடலுக்கு சாதகமான எரிசக்திக்கு ஏற்ற அதிகளவான கிளைகளை மாற்றியமைப்பது என்பதான திட்டத்தின் கீழ் சுற்றாடலுக்கு சாதகமான தனது கிளை ஒன்றினை செலிங்கோ லைவ் காப்புறுதி நிறுவனம் ஹொரணையில் ஆரம்பித்துள்ளது.


இதன்பிரகாரம் 5ஆயிரத்து870 சதுர அடி பரப்பளவைக் கொண்ட புதிய இரண்டு மாடிக் கட்டிடம் ஹொரணை - பாணந்துறை வீதியில் அமைக்கப்பட்டுள்ளது. நான்கு மாடிகளாக மாற்றியமைக்கப்படக்கூடியதான வசதிகளுடன் உச்ச பயனறுதியாக இயற்கை வெளிச்சத்தையும் உள்ளடக்கும் வகையில் முற்றிலும் சூரிய சக்தியை உள்வாங்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

பிரதானமாக எரிசக்தியின் சிக்கனத் தன்மையைக் கொண்ட ஒளியூட்டல் வசதி, வளிச்சீராக்கி வசதி, மழைநீரை சேமித்து வைக்கும் வசதி என்பன இக்கிளையில் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது.

புதிய சுற்றாடலுக்குச் சாதகமான மாதிரிக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ள செலிங்கோ லைவ் இன் கிளைக் கட்டிடங்கள் வென்னப்புவ, திருகோணமலை, பண்டாரவளை, பாணந்துறை ஆகிய இடங்களிலும் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை அனுராதாபுரம், யாழ்ப்பாணம், கண்டி, மட்டக்களப்பு, களுத்துறை, குருநாகல், கம்பஹா, காலி, மாத்தறை, திஸ்ஸமஹாராம, நீர்கொழும்பு, இரத்தினபுரி, கொட்டாஞ்சேனை, கல்கிசை ஆகிய இடங்களில் அமையப்பெற்றுள்ள கிளைகளில் சில சூரிய சக்தி முறைமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இலங்கையின் ஆயுட் காப்புறுதித் துறையில் இந்நிறுவனம் நாட்டினுடைய 25 மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் காணப்படுகின்ற பிரதான நகரங்களிலும் கிராமங்களிலும் பௌதிக ரீதியில் 250 வரையான கிளைகளைக் கொண்ட மிகப் பெரும் வலையமைப்பாக இயக்கி வருகிறது.






# பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருள்களை மீள்சுழற்சி செய்வது குறித்து விழிப்புணர்வு

பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருள்களை மீள்சுழற்சி செய்வது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்தான கருத்தரங்கு நிகழ்வு ஒன்று கொழும்பு - 10 டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள சம்மேளனத்தின் கேட்போர் கூடத்தில் இன்று பிற்பகல் 3 மணி தொடக்கம் 4.30 மணிவரை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் சுற்றாடலில் மாசு ஏற்படுத்தும் தன்மையினை கட்டுப்படுத்த முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன் மேற்குறித்த கழிவுப் பொருள்களிலிருந்து மாற்று மசகு எண்ணெய் பெறும் முறைமை குறித்தும் மக்களுக்கு ஆலோசனை வழங்கப்படவுள்ளது.

தேசிய வர்த்தக சம்மேளனம் மற்றும் கனிமவள அபிவிருத்தி அமைச்சின் அங்கமான பொலிட்டோலங்கா நிறுவனம் என்பன இணைந்து கொண்டு மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE


பங்குச்சந்தைத் தகவல்கள்

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி , யாழ்ப்பாணம் - 212221455

30/5/2017
www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -24.21 | 6,655.25 | 6,679.46 |
| S&P SL20 | -17.39 | 3,803.27 | 3,820.66 |
| வியாபாரப்புரள்வு | | 1,717,421,820 | 270,576,768 |
| உள்நாடு:- கொள்வனவு | | 1,673,460,740 | 199,889,584 |
| விற்பனை | | 1,675,733,500 | 256,942,592 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 43,961,036 | 70,687,168 |
| விற்பனை | | 41,688,344 | 13,634,166 |

| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| இலங்கை கொமர்ஷல் வங்கி | COMB.N | 135.50 | 10,876,481 | 1,445,971,915 |
| நலலோகா ஹொஸ்பிற்றல் | NHL.N | 4.60 | 7,217,694 | 33,200,601 |
| அக்கின் ஸ்பொன்ஸ் | SPEN.N | 70.00 | 396,981 | 28,159,474 |
| பிறவுன்ஸ் கப்பிற்றல் | FLCH.N | 3.00 | 6,135,511 | 18,342,214 |
| சேவ்ரோன் லுப்பிரிக்கன் | LLUB.N | 168.00 | 88,134 | 14,806,958 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 167.00 | 87,530 | 14,487,998 |
| ஜனசக்தி இன்சுரன்ஸ் | JINS.N | 15.90 | 649,565 | 10,327,096 |
| அக்சஸ் எஞ்சினியறிங் | AEL.N | 26.10 | 373,112 | 9,701,092 |
| சம்பத் வங்கி | SAMP.N | 290.10 | 31,646 | 9,177,623 |
| வட்டவளை பெருந்தோட்டம் | WATA.N | 33.30 | 215,302 | 6,754,361 |




Workshop

பங்குலாபம்
லங்கா ஆசோக்லேடன்ஸ் - ரூபா 30.00
சென்றல் பைனான்ஸ் ரூபா. 0.85

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 224 |
| விலை உழைப்பு | 11.7 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.5 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரையைக்கடந்தது 'சாவு'
# 10 லட்சம் பேர் பாதிப்பு

டாக்கா, மே 31
வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த சாவு (மோரா) புயல் நேற்றுக் காலை 7 மணியளவில் (இலங்கை நேரப்படி) கரையைக்கடந்தது.




பங்களாதேஷின் பிரபல துறைமுக நகரான சிட்டகொங் நகருக்கும் கோக்ஸ் பஜாருக்கும் இடையே புயல் கரையைக்கடந்ததாகபங்களாதேஷ் வானிலை ஆய்வு மையம் அதிகாரபூர்வமாக வெளியிட்ட சிறப்பு வானிலைஅறிக்கையில் தெரிவித்துள்ளது. புயல் கரையைக் கடந்தபோது மணிக்கு 117 கி.மீ. வேகத்தில்பலத்தகாற்றுவீசியது. மரங்கள்குடைசாய்ந்தன. மின்கம்பங்கள் முறிந்து விழுந்தன. சிட்டகொங் நகரின் பல பாகங்களுக்கும்மின் இணைப்புநேற்றுமுன்தினம் இரவில் இருந்தேதுண்டிக்கப்பட்டிருந்தது. மரங்கள்முறிந்து வீதியில்விழுந்துள்ளதால் போக்குவரத்து பெரும் பாதிப்படைந்தது. மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதிகளாவானமழைபொழிந்ததால் எல்லைக் கிராமங்கள்பலவும்வெள்ளிநீரில் தத்தளிக்கின்றன என்று பங்களாதேஷ் ஊடகங்கள்செய்திவெளியிட்டன.



**10 லட்சம் மக்கள் பாதிப்பு**


முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கரையோரப் பகுதிகளில் இருந்து 10 லட்சம் மக்கள் வரை வேறுஇடங்களுக்குஅப்புறப்படுத்தப்பட்டதால்உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது என்று முதல் கட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும்சேதவிவரங்கள் தொடர்பில் உத்தியோகபூர்வ தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. இதனால் சில உயிரிழப்புக்கள்இருக்கலாம்என்று அச்சமும் வெளியிடப்பட்டது. இந்தப் புயலுக்கு பங்களாதேஷ் வானிலை ஆயுவு மையம் வைத்த பெயர் மோரா. மோரா என்றால் தமிழில் சாவு என்று அர்த்தம். (ம)



## ஊடகங்கள் மீது ட்ரம்ப் பாய்ச்சல்

> வெள்ளை மாளிகையில் இருந்து கசியும் தகவல்கள் என கூறப்படும் அனைத்தும் ஊடகங்களால் ஜோடிக்கப்பட்ட பொய்தகவல்கள் என்பதே எனது கருத்து.

வொஷிங்டன், மே 31
வெள்ளை மாளிகையில் இருந்து கசிந்த தகவல்கள் என்ற பெயரில் ஊடகங்கள் வெளியிடும் தகவல்கள் அத்தனையும் பொய்யானவை என்று மீண்டுமொரு தடைவை கொதித்துள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.
அமெரிக்க அதிபராக ட்ரம்ப் தெரிவானதில் ரஷ்யாவின் பங்களிப்பு உண்டு என்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அந்த நாட்டின் நடுவகப் புலனாய்வுஅமைப்புவிசாரணைகளை ஆரம்பித்துள்ளது. ட்ரம்பின் மருமகனும் விசாரணை வளையத்துக்குள் வைக்கப்பட்டுள்ளார்.
இந்த நிலையிலேயே அமெரிக்க ஊடகங்கள் மீது ட்ரம்ப் மீண்டும் கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.
"வெள்ளை மாளிகையில் இருந்து கசியும் தகவல்கள் எனகூறப்படும்அனைத்தும் ஊடகங்களால் ஜோடிக்கப்பட்ட பொய்தகவல்கள் என்பதே எனது கருத்து. ஜெராட் நாட்டுக்காக சிறந்த பணியைச் செய்திருக்கிறார். அவரில்எனக்குநம்பிக்கைஉள்ளது. அவர் சிறந்த மனிதர்" என ட்ரம்ப் தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டார். (ம)



## மோடியின் பயணங்கள்

பெர்லின், மே 31
இந்தியாவின்தலைமைஅமைச்சர் மோடி 6 நாள்கள் சுற்றுப்பயணத்தை ஜேர்மனி, ரஷ்யா, பிரான்ஸ், ஸ்பெய்ன் உள்ளிட்ட நாடுகளுக்கு மேற்கொண்டுள்ளார். முதலாவதாக நேற்றுமுன்தினம் அவர் ஜேர்மனி சென்றடைந்தார். ஜேர்மனிஅரசதலைவர் மெர்க்கல் - மோடி இடையிலான சந்திப்பநேற்று இடம்பெற்றது.
அடுத்ததாக அவர் இன்று ஸ்பெய்ன் செல்கிறார். 30 ஆண்டுக்குப்பிறகு ஸ்பெய்ன் செல்லும் முதலாவது இந்திய தலைமை அமைச்சர்மோடிஎன்பதுகுறிப்பிடத்தக்கது. ஸ்பெய்னைத் தொடர்ந்து ரஷ்யாவுக்கு நாளை மறுதினம்செல்கிறார். ரஷ்யாவில் இந்தியா - ரஷ்யா உச்சிமாநாடு உள்ளிட்டபல்வேறுநிகழ்வுகளில் பங்கேற்கிறார்.
ரஷ்ய பயணத்தை முடித்துக் கொண்டுமோடிபிரான்ஸ்செல்லவுள்ளார். மோடி - மக்ரோன் இடையிலான சந்திப்பு மிக முக்கியத்துவம்வாய்ந்த ஒன்றாக எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## வடகொரியாவுக்கு ரஷ்யா கண்டனம்

பியாங்யாங், மே 31
வடகொரியா கடந்த ஞாயிற்றுக்கிழமை அணுவாயுதங்களை சுமந்து செல்லவல்ல ஏவுகணையைச் சோதித்து வெற்றி கண்டுள்ள நிலையில் அந்த நாட்டுக்கு ரஷ்யாவும் ஏனைய நாடுகளும் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. வடகொரியாவின் ஏவுகணைச் சோதனையில் பெரிய அளவில் கருத்துத் தெரிவித்திருக்காத ரஷ்யா இம்முறை கண்டனம் தெரிவித்துள்ளமை புதிய விடயமாகப் பார்க்கப்படுகிறது.



எங்கள் கடல் பகுதியில் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்துவதால் அந்தப் பகுதியில் எங்களுடைய கப்பல் மற்றும் விமான போக்குவரத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளது.
அத்துமீறி செயல்படும் வடகொரியா மீது அமெரிக்காவுடன் இணைந்து தக்க நடவடிக்கை எடுப்போம் என்று ஜப்பான் அரசதலைவர் சின்சோ அபே தெரிவித்தார். (ம)

## மாட்டிறைச்சிவிற்பனை தமிழகத்தில்வேண்டும்

*ராமதாஸ் வலியுறுத்தல்*



சென்னை, மே 31
மாட்றைடிச்சி விற்பனை, தோலுக்காக விலங்குகளைக்கொல்லுதல்ஆகியவற்றுக்கு இந்திய மத்திய அரசு தடை விதித்துள்ள நிலையில், 'இந்தச் சட்டம் தமிழகத்தில்நடைமுறைப் படுத்த முடியாது. தமிழகத்துக்கு விசேட விலக்கு வழங்க வேண்டும்' என்று ராமதாஸ் வலியுறுத்தினார்.
எமது மாநிலத்தில் மாட்டிறைச்சியை விரும்பிச் சாப்பிடும் மக்கள் ஏராளமானவர்கள் உள்ளனர். மட்டுமல்லாமல்தோல்பதனிடல் உள்ளிட்ட தொழிலை முக்கியவருவாயாகக்கொண்டு நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழுகின்றன. இந்தத் தடையை நடைமுறைப்படுத்தி மத்திய அரசு மார்பில் குத்தினால், தமிழக அரசு மௌனமாக இருந்து முதுகில் குத்துகிறது.
கேரளா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்கள் தடை சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில் தமிழக அரசு மௌனமாக இருப்பது அழகல்ல. இந்த விடயத்தில் தமிழக அரசு அவசர சட்டமொன்றை இயற்றி உறுதியான முடிவைப் பெறவேண்டும். அனைத்துக்கட்சிக் கூட்டமொன்றைக்கூட்ட வேண்[illegible] மேலும்தெரிவித்தார். (ம)

**11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 28 . 08 . 1932



உதிர்வு 01 . 06 . 2006

**அமரர் ஸ்ரீமான் இராமசாமிபிள்ளை வைத்திலிங்கம்**
**(சிங்கம் அண்ணா)**


**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

இராமசாமிபிள்ளை வைத்திலிங்கம் (சிங்கம் அண்ணா) அவர்கள் இறைவனடி சேர்ந்து ஆண்டுகள் பதினொன்று நிறைந்தாலும் அவரது நினைவலைகள் என்றும் எம்முள் ஓய்வதில்லை. அத்தகைய நற்பண்பும், நற்குணமும், சிறந்த சிந்தனையும், அறிவு ஆற்றலும் அத்தனையும் வாய்க்கப் பெற்றவர்.
பாசத்தின் உறைவிடமாய், அன்பின் திருவுருவமாய், கருணையின் இருப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எங்கள் அனைவரையும் வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வமே!
பதினொரு ஆண்டு காலம் சென்றாலும் கவலைகள் மறையவில்லை. ஆண்டுகள் பல கடந்து போனாலும் எம்மை விட்டு நீங்காது உங்களின் நினைவு.

**உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்**
**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**
**ஸ்ரீ இராகவேந்திராய நமோ நமஹ**

**என்றும் உங்கள் நினைவுடன்**
**[illegible], மகன்மார், மகள், மருமகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டி, உற்றார், உறவினர்கள், ஸ்தாபன சேவையாளர்கள், சக ஊழியர்கள்.**
**RV.G. ஸ்தாபனம், நல்லூர், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரமழான் நோன்பு காலம் ஆரம்பமாகியுள்ளது. உலகெங்கும் உள்ள பள்ளிவாசல்கள் விழாக் கோலம் பூண்டுள்ள நிலையில் ஈராகின் இரண்டாவது பெரிய நகரான மோசூலின் மேற்குப் பகுதியில் உள்ள முக்கிய பள்ளிவாசலின் ஒளிப்படமே இது. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்த மேற்கு மோசூலின் 90 சதவீதமானவை அரச கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மெலனியா மீது விமர்சனம்



வொஷிங்டன், மே 31
அமெரிக்காவின் முதற்பெண் மெலனியா மீது அமெரிக்க அரசியல் களத்தால் கடும் விமர்சனம் வைக்கப்படுகிறது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், அண்மையில் தனது முதல் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். சவூதிக்கு முதலாவதாகச் சென்றார். சவூதியில் தலைமுடியை மறைக்கும் துணி அணியாததை அடுத்தே மெலனியா மீது விமர்சனங்கள் வைக்கப்படுகிறது.

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா, சவூதிக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது அவரது மனைவி மிச்செல் ஒபாமா தலையை மறைக்கும் துணியை அணிந்திருக்கவில்லை. இதை ட்ரம்ப் கடுமையாக விமர்சித்திருந்தார். சவூதிக்குச் செல்லும்போது அந்த நாட்டுச் சட்டதிட்டத்துக்கு மதிப்பளிக்கவேண்டும் என்று சாடியிருந்தார். தற்போது இதே தவறை ட்ரம்பின் மனைவி மெலனியாவும் செய்துள்ளார்.

மட்டுமல்லாமல் ட்ரம்புடன் சென்ற அவரது மகள் இவன்கா ட்ரம்பும் தலையை மறைக்கும் துணியை அணியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## மாராவி மீட்பு தொடர்கிறது

மணிலா, மே 31
பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து 800 கி.மீ. தொலைவில் உள்ள மாராவி தீவில் ஐ.எஸ். ஐ.எஸ். ஆதரவு ஆயுததாரிகள் ஊடுருவியதை அடுத்து அங்கு இராணுவத்துக்கும் ஆயுததாரிகளுக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்று வருகிறது. மாராவியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட மக்களை நேற்று முன்தினம் பிலிப்பைன்ஸ் அதிபர் டுடேர்தே பார்வையிட்டார்.

இதுவரை தரைவழியாகவே தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தற்போது வான் வழியாகவும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இந்த மீட்புப் போர் எதிர்பார்த்ததை விட கடினமாகியுள்ளது என்று பிலிப் பைன்ஸ் ஊட கங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# கிழக்கு உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு சலுகை கிடையாது

## பிரான்ஸ் அதிபர் இம்மானுவல் மக்ரோன் புடினைச் சந்தித்த பின்னர் வெளிப்படை




பாரிஸ், மே 31
"கிழக்கு உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவின் நகர்வுகளுக்கு சிறியசலுகைகூடகிடையாது."

இவ்வாறு தெரிவித்தார் பிரான்ஸ் அதிபர் மக்ரோன்.

மக்ரோன், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இடையிலான சந்திப்பு பரிஸ் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் உரையாற்றுகையிலேயே மக்ரோன் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு உக்ரைனை தன்னுடன் இணைத்துக்கொள்ள ரஷ்யா கடும் முனைப்புக் காட்டுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையும், அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் இந்த விவகாரத்துக்கு கடும் எதிர்ப்புக் காட்டுகின்றன. இந்த நிலையில் மக்ரோனின் இந்த நிலைப்பாடு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று பார்க்கப்படுகிறது.

"ரஷ்யாவுடன் பேச்சு நடத்துவது முக்கியமானது. ஏனெனில் பல்வேறு பன்னாட்டுப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவின் நகர்வுகளை ஏற்க முடியாது. சிறு கரிசனையேனும் காட்ட முடியாது. இந்த விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை கொண்டுவர ஜி-7 நாடுகளின் மாநாட்டில் ஆலோசித்தோம்" என மக்ரோன் மேலும் தெரிவித்தார்.

> இந்த விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதாரத் தடை கொண்டுவர ஜி–7 நாடுகளின் மாநாட்டில் ஆலோசித்தோம். ”

ஜி-7 நாடுகளின் கனடா, அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், பிரிட்டன் ஆகியன அங்கம் வகிக்கின்றன.

இந்த மாநாடு அண்மையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் வைத்து மக்ரோன் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு இடம்பெற்று ஒரு வாரத்துக்குள் புடின் - மக்ரோன் இருவரும் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பார்வை அற்றவர்களுக்கு கியூபாவில் பேஸ்போல்



பார்வையற்றவர்களுக்கான பேஸ்போல் விளையாட்டு கியூபாவில் அண்மையில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

பார்வையற்றவர்களுக்கான கால்பந்து, துடுப்பாட்டம் ஆகிய விளையாட்டுக்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. பார்வையற்றவர்களுக்கான பேஸ்போல் விளையாட்டு இதுவரை பரிசீலிக்கபடாமல் இருந்தது. இந்தநிலையில் கியூபாவில் அண்மையில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

"ஒலியெழுப்பும் பந்துகள், துடுப்புகள் மூலம் இது சாத்தியமானது. இனிவரும் காலங்களில் இரு நாட்டு அணிகளுக்கு இடையில் இந்த ஆட்டங்கள் நடத்தப்படும்" என்று ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். (ம)

# டுடேர்தேயின் நடவடிக்கைக்கு ஜின் பிங் ஆதரவு



பீஜிங், மே 31
போதைப் பொருளுக்கு எதிராக பிலிப் பைன்ஸ் அதிபர் டுடேர்தே எடுக்கும் நகர்வுகள் மற்றும் திட்டங்களுக்கு சீன அதிபர் ஜி ஜின் பிங் முழு ஆதரவு தெரிவித்தார்.

இவர்கள் இருவருக்கும் இடையிலான சந்திப்பு, பீஜிங் நகரில் அண்மையில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் வைத்தே டுடேர்தேக்கு தனது ஆதரவைத் தெரிவித்தார் ஜின் பிங்.

கடந்த வருடத்தின் மத்திய பகுதியில் பிலிப்பைன்ஸ் அதிபராக டுடேர்தே பொறுப்பேற்றார். அன்றிலிருந்து போதைப் பொருளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்கிறார். போதைப் பொருளுடன் தொடர்புடைய பல்லாயிரக்கணக்கானவர்கள் எவ்வித சட்ட நடவடிக்கையும் இன்றி கொன்று குவிக்கப்படுகின்றனர். இதற்கு ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் சீனா தனது ஆதரவைத் தெரிவித்தது. தென்சீனக் கடல் பகுதியை சீனா சொந்தம் கொண்டாடி வந்தது.

இதற்கு பிலிப்பைன்ஸ் எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. மட்டுமல்லாமல் பன்னாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அந்தப் பகுதி சீனாவுக்கு உரித்துடையது அல்ல என்று தீர்ப்பும் வந்துள்ளது. இது பிலிப்பைன்ஸுக்குக் கிடைத்த வெற்றியாகப் பார்க்கப்படும் நிலையில் போதைப் பொருளுக்கு சீனா ஆதரவு தெரிவித்ததால் தென்சீனக் கடல்பலப்பில் சீனாவுடன் முரண்டுபிடிக்காமல் சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய பிலிப்பைன்ஸ் முன்வரும் என்று அரசியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலோலியில் இரு தினங்கள் ஒலித்த சிலம்பொலி



ஆ.நா.சு.திருச்செல்வம்

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தைப் படைத்து உலகப் பெரும் புலவர்களுள் ஒருவராகப் போற்றப்படும் இளங்கோ அடிகளாரின் புகழ் மணம் பரப்பும் அகில இலங்கை இளங்கோ கழகம் இறையருளும் பெரும் புலவருமான இளங்கோவின் குருவருள் ஒன்று கூடப் புலமை ஒலி என்ற மகுடத்தில் வடமராட்சி இரண்டு நாள்கள் பெருவிழாவெடுத்தது.

இந்தப் புலமை ஒலி பெருவிழா புலோலி தெற்குப் புற்றளை மகாவித்தியாலய சின்னத்தம்பி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த இருதினங்களும் விவாத அரங்கு கவியரங்கம், சுழலும் சொற்போர், சிந்தனை அரங்கு பட்டிமண்டபம் என விழா மண்டபம் கலகலத்தது.

முதல்நாள் விழா தமிழ்த்தாத்தா கந்த முருகேசனார் அரங்கில் ஆரம்பமானது. யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் ஓய்வு நிலைச் செயலாளர் சண்முகசுந்தரம் தம்பதிகள் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியை திருமதி பாக்கிய லக்ஷ்மி ராஜன் கடவுள் வாழ்த்துப் பாடினார்.

இந்த ஆண்டு அகில இலங்கை இளங்கோ கழகத்தின் உயர் விருதான தமிழ்மாமணி விருது தமிழர்களால் போற்றி மதிக்கப்பட்டு வரும் தமிழ் அறிஞர் பண்டிதர் வீ.பரந்தாமனுக்கு வழங்கப்பட்டது. தா.ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தப் பெருவிழாவின் முதல் அமர்வில் தமிழ்ச் சான்றோருக்கு உயர் விருது வழங்கும் வைபவம் முக்கிய நிகழ்வாக இடம்பெற்றது.

## குருக்களின் ஆசியுரை

சிவஸ்ரீ சோ.ஜெயபாலசுந்தரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். புற்றளை மகா வித்தியாலய பகுதித்தலைவர் ந.சிவலிங்கம் தமிழ்மாமணி விருது பெற்ற பண்டிதர் வீ.பரந்தாமனைக் கௌரவித்து உரையாற்றினார். அவர் தனது கௌரவிப்பு உரையில் இனம் என்ற அடிப்படையில் தமிழ் இனம் காலத்தால் முற்பட்ட இனமாகும். நாம் எமது மண்ணில் சுதந்திரமாக வாழ வேண்டும் எமது உரிமைகளையும் கடமைகளையும் நாமே ஆற்ற வேண்டும். தமிழினம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற தணியாத தாகத்துடன் எங்களுடன் வாழ்பவர் பண்டிதர் பரந்தாமன் என்று குறிப்பிட்டார்.

கிளிநொச்சி அறிவியல் நகரிலே பண்டிதர் வீ.பரந்தாமன் கவின் கலைக் கல்லூரியை ஆரம்பித்துச் செந்தமிழ்ப் பயிற்சிப் பள்ளியில் பல மாணவர்கள் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தினார். தமிழ்த்தாத்தா கந்த முருகேசனாரின் திண்ணைப் பள்ளியிலே தமிழை ஐயம் திரிபறக் கற்று நல்லாசிரியராகத் திகழ்ந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றபின் வன்னி வாழ் மக்களுக்குக் கிளிநொச்சித் தமிழ்ப் பயிற்சிப் பள்ளியில் தமிழ் கற்பித்தார் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

விருது பெற்ற பண்டிதர் பரந்தாமன் மனிதரும் கடவுளும் கௌரில்லாப் போர் விரகுகள் பண்டைக் குமரியும் பழங்குடித்தமிழரும் திருக்குறளில் செந்தமிழாராட்சி புதிய தோர் புறம் தமிழ் கடந்த தடங்கள் வேரடிவழித்தமிழ்ச் சொற்பிறப்பியல் சிற்றகரமுதலி அருகிவரும் பழந்தமிழ்ப் பேச்சு வழக்கு சொற்பிறப்பியல் அகராதி தமிழர் உறவு முறை தமிழ் தரம் 10 இன் பயிற்சி விடைகள் தமிழ் தரம் 9 இன் பயிற்சி விடைகள் முதலிய நூல்களை எமக்குத் தந்துள்ளார்.

உள்ளத்தில் எழுந்த உணர்வுகளுக்கு உருக்கொடுத்து அவற்றை அறியாமையின் விளைவு வாழவிடுங்கள் ஒற்றைச் சிலம்பு காடு காத்த காவலன் வீழ்ந்த யாழ்ப்பாணம் போன்ற மேடை நாடகங்களையும் படைத்துள்ளார். தமிழ்ப்பணியோடு நின்று விடாமல் சமூகச் சீர்திருத்தவாதியாகவும் செயற்பட்டு வெற்றி கண்டவர் என்று அவர் எடுத்துரைத்தார். சமூகத்தோடு வாழ்ந்து தானும் முன்மாதிரியாகத் திகழ்ந்து சிறப்பாகத் தமிழ்ப் பணியாற்றிவரும் இவருக்குத் தமிழ் மாமணி விருது வழங்கியிருப்பது சாலப் பொருத்தமானதாகும். என்றும் அவர் குறிப்பிட்டார்.

முதல் நாள் அமர்வில் கீரன் நகுலேந்திரன் சிவன் அறக்கட்டளை ஆலோசகர் அறிமுகவுரை நிகழ்த்தினார். இலக்கியச் செம்மல் பரா.ரதீஸ் தொடக்கவுரையையும் ஆங்கில விரிவுரையாளர் சி.சிவசுப்பிரமணியமும் நிகழ்த்தினர். சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திரா தலைமையில் இன்றைய பெண்களின் பாதுகாப்பு பெரிதும் தங்கியிருப்பதும் சட்டத்தின் வலிமையில் சமூக அக்கறையில் குடும்பப் பொறுப்பில் என்னும் தலைப்பில் இடம்பெற்ற விவாத அரங்கில் ம.கோசலை அ.பிரதாபன் இ.கிருஷ்ணப் பிரியா க.கஜந்தன் க.அருண் பிரசாந் தி.கார்த்திகேயன் பரா.றமேஸ் இ.பிரயோ சங்கர் சி.பூபாலசிங்கம் ஆகியோர் பங்குபற்றினர். புலமையொலி இரண்டாம் நாள் விழா பேராசிரியர் கா.சிவத்தம்பி அரங்கில் ஆரம்பமானது. முதலாவது அமர்வை கிருபாகரன் தம்பதியினர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். நீதியமைச்சின் மத்தியஸ்தர் குழாம் உறுப்பினர் கலாபூசணம் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் அறிமுகவுரை நிகழ்த்தினார். வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் தலைமையில் இரண்டாம் நாளின் முதலாம் அமர்வு கோலாகலமாக நடைபெற்றது.

## தமிழ் இலக்கியப் பணி

அகில இலங்கை இளங்கோ கழகம் இருபத்தொரு வருடங்களாக ஆற்றிவரும் தமிழ் இலக்கியப் பணிகள் பாராட்டப்பட வேண்டியன. கலைஞர்களை இணைத்துக் கலைப்படைப்புக்களை உருவாக்கிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். என்று முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழகக் கல்வியியற்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி தனதுரையில் வெகுவாகப் பாராட்டினார்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் கவிஞர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நிகழ்ந்த கவியரங்கம் மண்டபத்தை அதிர வைத்தது. "உரைக்காது விடுத்ததை மறைக்காது உரைத்திடுவோம்" என்னும் தலைப்பிலான இந்தக் கவியரங்கில் வேல் தலைப்பிலான இந்தக் கவியரங்கில் வேல் நந்தகுமார் மாதவி கண்ணகிக்கு என்றும் சௌந்தலா சிவலிங்கம் கண்ணகி மாதவி கண்ணகிக்கு என்றும் பெரிய ஐங்கரன் பாண்டியன் கோவலனுக்கு என்றும் ச.சுவர்ணன் கோவலன் பாண்டியனுக்கு என்றும் கு.ரஜீவன் பாண்டிமா தேவி கண்ணகிக்கு என்றும் புரிந்த கவிச் சமர் பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது.

## சுழன்ற சொற்போர்

கவிப்பேரரசர் முடிந்த களைப்பு ஆறுவதற்கு இடையில் சுழலும் சொற்போர் ஆரம்பமாகி மண்டபத்தையே அதிர வைத்தது. சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் நடுவராக இந்த சொற்போரை நடத்தினார். "இராமன் தம்பியர்களுள் ஏற்றமிகு தம்பி" என்பது இந்தச் சுழலும் சொற்போரின் தலைப்பு. கோ.கோகிலரதன் இலக்குவன் என்றும் சு.இமயராஜ் விபூஷணன் என்றும் ச.அன்ரனி குகன் என்றும் க.வாணி முகுந்தன் சுக்கிரீவன் என்றும் களத்தில் இறங்கி வாதாடினர்.



தமிழ் மொழிக்குத் தனி பெருஞ்சிறப்புண்டு. தமிழை வளர்ப்பதில் அகில இலங்கை இளங்கோ கழகத்துக்கும் பெரும்பங்குண்டு கல்லில் இருந்து கடதாசி வரை கலை வண்ணம் கண்ட தமிழன் இன்று அவில் வாழ்க்கையில் தடுமாறி நிற்கின்றான். கலை கலாசாரப் பண்பாடுகளில் இருந்து விலகிச் சென்றமையினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ்க்கலை கலாசாரம் பண்பாடுகளைப் பேணிப்பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினரிடம் கையளிக்க வேண்டியது கட்டாயமாகும் என்று தனது ஆரம்ப உரையில் கலாபூசணம் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் வலியுறுத்தினார். இளைஞர் யுவதிகள் மத்தியில் இதற்கான எழுச்சி முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

புலமை ஒளி 2017 விழாவின் இறுதி நிகழ்வுகள் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அரங்கில் இரண்டாம் நாள் மாலையில் ஆரம்பமானது. மனோகரன் கலா ஈஸ்வரி தம்பதியினர் மங்கல விளக்கேற்றி வைத்தனர். புற்றளை மகாவித்தியாலய ஆசிரியர் ஆ.சிவநாதன் தலைமையில் இப்பெருவிழா நடைபெற்றது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் தொடக்கவுரை நிகழ்த்தும் போது இலக்கியங்கள் எமது வாழ்க்கையை வளமாக்கி எமக்குச் சிறப்பான பாதைகளைக் காட்டுகின்றன- என்றார்

## இலக்கிய வாழ்க்கை

நாங்கள் இலக்கிய வாழ்க்கை வாழ வேண்டும். இளங்கோவடிகள் எமக்குத் தந்த சிலப்பதிகாரம் வாழ்க்கைநெறியைப் போதிக்கின்றது. இலக்கியங்களின் மகத்துவம் இத்தகைய விழாக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். அகில இலங்கை இளங்கோ கழகம் தொடர்ந்து இந்த இலக்கியப் பணியைத் தமிழ் உலகுக்கு ஆற்ற வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

சிவன் அறக்கட்டளை ஸ்தாபகர் கனேஸ்வரன் வேலாயுதம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். யாழ்.பல்கலைக்கழகச் சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி கோசலைமதன் தலைமையில் "பாரதியின் பாடு பொருள்" என்னும் தலைமைப்பில் சிந்தனை அரங்கு இடம்பெற்றது. தேசம் என்று த.குருபரனும் பக்தி என்று க.வாணி முகுந்தனும் தமிழ் என்று ச.அன்ரனியும் சமூக விடுதலை என்று அ.யூ.செ. கலம்பேட்டும் காதல் என்று த.சதீபனும் பெண் விடுதலை என்று திருமதி தர்மினி ரஜீவனும் சிந்தனை வயப்பட்டுச் சபையோர்களையும் சிந்திக்க வைத்தனர்.

சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் நடுவராகப் பட்டிமண்டபம் நிகழ்ந்தது. "சிலப்பதிகாரத்தில் விஞ்சி நிற்பது பெண்மையின் ஆற்றலே" என்று பரா.ரதீஸ் பெரிய ஐங்கரன் வேல் நந்த குமார் ஆகியோர் வாதிட்டனர். "விதியின் வலியே" என்று ஜி.இராஜகுலேந்திரா கோ.கோகிலரதன் தி.கார்த்திகேயன் ஆகியோர் எதிர்வாதம் புரிந்தனர்.

இந்த இருநாள் இலக்கியப் பெருவிழாவில் த.குருபரனும் சி.பூபாலசிங்கமும் அ.பிரதாபனும் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்தனர். நீண்ட நாள்களின் பின் ஒரு நிறைவான விழாவில் இலக்கியச் சுவையைக் கேட்டும் கண்டும் ரசித்து லயிக்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பாரியில் தனித்துவம் பெறும் பெண்கள்

உடுவிலூர் கலா



ஒப்பாரி தொன்று தொட்டு நடைமுறையில் இருந்து வந்த ஒன்று. அறிவியலின் அதீத வளர்ச்சி என்பது ஒப்பாரியை ஓரம் கட்டி விட்டது. துரதிர்ஷ்டவசமாக இன்றைய பெண்கள் ஒப்பாரி சொல்லி அழுவதில்லை. அந்த மரபு மறைந்து போய் விட்டது என லாம். இன்றைய எமதான ஆடம்பர, கலா சார மற்றும் அறிவியல் மோகம் ஒப்பாரி சொல்லி அழுவதை அநாகரிகமான செயலாகக் கருதுகிறது. ஒப்பாரி என்பது சாவடைந்த ஆன்மாவை நினைந்து பிரிவின் துயரம் கொண்டு பெண்கள் குரலைவிட்டுப் பாடும் ஓர் பாடலே.

ஒப்பாரி மனதிலுள்ள வேதனைகள், சோகங்களை எடுத்தியம்பும் தனித்துவமுடையது. இதில் பெண்களின் பங்களிப்பே முக்கியமானது. இது ஒரு இலக்கியமாகக் கொள்ளப்பட்ட போதும் நாட்டார் இலக்கியம் என்கிற வரையறைக்குள் சமுதாய நிலை கருதி ஒடுக்கப்பட்ட இலக்கியமாகக் கருதப்படுவதால் அந்த வரையறையைத் தாண்டி மேன்மக்கள், கீழ்மக்கள் என்கிற வர்க்க வேறுபாட்டை உடைத்தெறிந்து சகல இனப்பெண்களாலும் பாடப்படுவதால் இவை பெண் வாய்மொழி இலக்கியம் என்னும் சிறப்பைப் பெறுகிறது.

> இது ஒரு நாட்டார் இலக்கியமாகக் கொள்ளப்பட்ட போதும் நாட்டார் இலக்கியம் என்கிற வரையறைக்குள் சமுதாயத்திலே ஒடுக்கப்பட்ட இலக்கியமாகக் கருதப்படுவதால் அந்த வரையறையைத் தாண்டி மேன்மக்கள் கீழ்மக்கள் என்கிற வர்க்க வெறியை உடைத்தெறிந்து சகல இனப்பெண்களாலும் பாடப்படுவதால் பெண் வாய்மொழி இலக்கியம் என்னும் சிறப்பைப் பெறுகிறது.

பெண்கள் ஆணாதிக்க அடக்குமுறைகள் இருந்தாலும் சுதந்திரமாகப் பாடித் தமது சோகங்களை வெளிப்படுத்திய பாடல்களின் தன்மை வெளியே ஒப்பாரி. பெண்களின் எண்ணங்களையும், ஆழ்ந்த உணர்ச்சிச் செறிவையும் வெளிப்படுத்திச் சோகத்தில் ஆழ்ந்திருப்போரின் மனக் காயங்களை ஆற்றும் மருந்தாக ஒப்பாரி இருந்துள்ளது. இறந்தவருடைய குணம், நிறம், அவர் வாழ்ந்த வாழ்க்கை செய்த நற்செயல்கள் என்பனவெல்லாம் மீட்டப்படாத இசையுடன் பாடி ஒப்பாரியுள் மெருகூட்டப்படுகின்றன. பெண்களின் அனுபவபூர்வமான உணர்வுகளையும், ஒருயிரின் பிரிவையும் ஒப்பாரிகள் சிறப்பாக வர்ணித்துப் பாடிக் கொள்கின்றன. அது மட்டுமல்ல கூட்டு வாழ்க்கையையும் எடுத்தியம்பி சில கற்பனைகளையும் பல நிகழ்வுகளையும், தொகுத்து இசைச் சுவையோடும், கேட்போர் மனங்களில் ஒருவித பரிதாப நிலையையும், பாடியவரை நீள நினைந்திடும் நிலமைகளையும் ஒப்பாரி தக்க வைத்துக் கொள்கிறது. ஒப்பாரி மொழி எளிமையானது. இங்கு கவிதைக்கான வரையறைகளோ மொழிக்கான வரையறைகளோ கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. ஆற்றொழுக்குப் போன்றது. ஒப்பாரியின் செயற்பாடும், உவமான உவமேயங்களும், கற்பனை நயமும் உணர்ச்சிக் கொந்தளிப்புக் கொண்டவை.

ஒப்பாரிப் பாடல் யார்மீது பாடப்படுகிறதோ அதனைப் பொறுத்தே அதன் சிறம்பம்சமும் அமைகிறது. அதே போல் பாடுபவர் யாரோ அவரைப் பொறுத்தும் சிறப்படையும். இறந்த கணவனுக்காக இளம் மனைவிபாடும் ஒப்பாரி கேட்பவர் மனங்களை உறையச் செய்யும் தன்மையுடையது. அதே போல் தாயின் இறப்பில் பிள்ளைபாடும் பாடல் தனிச் சிறப்பானது. தாய் மீதான ஒப்பாரிப் புலம்பல் ஈடுசெய்ய முடியாத இழப்பைஎண்ணி மிகுந்துயரை வெளிப்படுத்தி நிற்கும். கணவன் மீதான ஒப்பாரி இருவரும் அனுபவித்த இன்பத்தையும் சமூக அந்தஸ்து, தற்போதைய விதவைக் கோலம் என்பனவற்றை வெளிப்படுத்தியும் நிற்கும். பிள்ளை மீதான ஒப்பரி தாய்மையின் அவல நிலையைப் புலப்படுத்தும். தந்தை மீதான ஒப்பாரி வாழ்க்கை நிலையாமை, எதிர்பாராமல் உயிர் பறிக்கப்பட்டமை போன்றவற்றை கொண்டுள்ளதாக அமையும்.

ஒப்பாரி மூலம் பெண்கள் தமது பிரிவுத் துயரை அழுது புலம்பி வெளிப்படுத்துகின்றனர். இதன்மூலம் கொஞ்சமேனும் துன்பதுயரங்கள் குறைய வாய்ப்புள்ளது. பெண்ணின் கற்பனா சக்தியை ஒப்பாரி சிறப்புற வெளிப்படுத்தி நிற்கின்றது.

*ஈரச் சுவரானேன் நான்*
*இடிகரையில் மண்ணானேன்...!*
*வேலி விறகானேன் நான்*
*வேடர் கையில் அம்பானேன்...!*
*ஆற நிழலுமில்லை என்னை*
*ஆதரிப்பார் ஆளுமில்லை*
*ஆருடைய தஞ்சமென்று என்னை*
*அகலவிட்டுப் போனீரோ...!*

என்கிற ஒப்பாரி வரிகள் மனைவியின் பிரிவுத்துயரையும், யாருமற்ற தனிமரம் போன்ற நிலமையையும் எடுத்தியம்புகின்றன. சில பெண்கள் தாங்கமுடியாத வேதனையின் நிமித்தம் மார்பில் அடித்து ஒப்பாரி பாடுவர். எழுதப்படாத இலக்கியங்களாக உள்ள ஒப்பாரிகள் பெண்களுக்கே உரிய துறைகளாகக் கொள்ளப்படுகிறது. ஒப்பாரியைப் பாடி அழும் பெண் தனக்கென ஒரு தனித்துவத்தை நிறுவுவது மட்டுமல்ல, யார் மீது சொல்லி அழப்படுகிறதோ அவர்மீதும் ஒருதனித்துவத்தை நிறுவுவதைக்காணலாம். இன்று ஒப்பாரி அருகியும் மருகியும் உள்ளது. சாவுச் சடங்குகள் நவீனத்துவம் பெற்றுவிட்டது. நாகரிகமாக அழும் முறைமை நடைமுறைக்கு வந்து விட்டது. மரண வீட்டுக்கு வருவோரை அணைத்துச் சென்று இறந்தவரின் உடலத்தைக் காட்டுவர். அவர் தலை குனிந்து மௌனித்து நின்று அஞ்சலி செலுத்துவார். பின்னர் நெருங்கிய உறவுகளைத் தோளில் தட்டி சில வேளை சில முத்தம் கொடுத்துத் தேற்றுறிவிருந்தோம் பல் செய்வர். ஒப்பாரி தமிழ் இலக்கியங்களில் முக்கிய இடத்தை கொண்டுள்ளது. சாவு வீட்டுக்கு உயிரூட்டுவது ஒப்பாரி. எமது பண்பாட்டில் ஒவ்வொரு சடங்கும் ஒ வ் வொரு சிறப்பம்சங்க ளால் தனித்துவமடைந்துள்ளது. எனவே அவை அருகிச் செல்வது ஏற்புடையதல்ல. நவீனத்துவ நடைமுறைகளால் எமது பாரம்பரியம் தன்னழகை அசிங்கப்படுத்த முடியாது.

ஒப்பாரி மனித உயிர் இழப்புக்களில் மட்டுமல்ல மேடைநாடகங்களிலும் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளது. ஒப்பாரி இடம்பெறுவதால் சிலநாடகங்கள் மக்களின் பெரு வரவேற்பைப் பெற்று மீண்டும் மீண்டும் மேடையேறுவதும் உண்டு. இதேபோல் மழை வேண்டியும் சில அரசியல் குளறுபடிகளின் போதான மக்களின் எதிர்ப்பார்த்த கொடும்பாவி எரிப்பு நிகழ்தலின் போதும் ஒப்பாரி முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஆக, எமது பாரம்பரியங்களைப் பாதுக்காக்க வேண்டியது எமது தலையாய கடமை ஆகும். எம்மினத்தைச் சுட்டிக் காட்டும் பல அடையாளங்களை நாமே அழித்தொழிப்பது நியாயமன்று. அதனைப் பேணிப்பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க வேண்டியது எல்லோரதும் கடமையாகும். ஒப்பாரியை மீண்டும் மரணவீடுகளில் ஒலிக்கச் செய்வோம். பெண்களின் படைப்பாற்றல்களை எழுத்துமூலம் இல்லாவிடினும் வாய்மொழி இலக்கியமாகவேனும் சமூகத்தில் நிலைநிறுத்துவோம். பெண்களே நீங்கள் தயாரா?



அகில இலங்கை இளங்கோ கழகத்தின் `புலமை ஒலி' 2017 இலக்கியப் பெருவிழா புலோலியில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் இவ்வாண்டு தமிழ்ச் சான்றோருக்கான ``தமிழ் மாமணி" விருது பண்டிதர் வீ. பரந்தாமனுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுவதைக் காணலாம்.



கலைஞர் கௌரவிப்பின்போது பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் இ.த.ஜெயசீலன் கௌரவிக்கப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணாதிசயங்கள்

## கூந்தலை வைத்தே இயல்பறிதல்



பண்டைய காலத்தில், ஒரே ஒரு கூந்தலை மட்டும் வைத்துக்கொண்டு, சம்பந்தப்பட்டவரைப் பார்க்காமலே ஒருவரது முக அமைப்பை மட்டுமல்ல, முழு உருவத்தையும் வரைந்துவிடும் ஆற்றல் மிக்க ஓவியர்கள் இருந்திருக்கிறார்கள்.
அது எப்படிச் சாத்தியம் என்று நினைக்கலாம். உண்மையில் எம் முன்னோர்கள் சாமுத்திரிகா லட்சணங்கள், அங்க இலக்கணங்கள் மூலமாகவே ஒருவரது குணத்தைச் சொல்லி விடுவார்கள்.
வித்யாதரன்சாமுத்திரிகா லட்சணத்தில் முக்கியமான இடத்தை வகிப்பது முகம். 'எண் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்' என்பார்கள். அந்த முகம் எப்படி அழகாக இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் தலைமுடி மிக முக்கியமான பங்கை வகிக்கின்றது.

**சுருள் சுருளான தலைமுடி**

பெண்களில் சிலருக்குச் சுருண்ட முடியானது நெளிநெளியாக அமைந்திருக்கும். முடி அமைவு செழுமையாக இருந்தால், வாழ்வும் செழிப்பாகவே இருக்கும். இந்த மாதிரியான பெண்களின் உடல் உறுப்புகள் குறிப்பாக இதயம், கல்லீரல், சிறுநீரகம் போன்ற உள்ளுறுப்புகள் நல்ல வலிமையுடன் இருக்கும்.
இவர்கள் சாத்வீகமான எண்ணங்களுடன் குளிர்ச்சி யான பொருள்களான வெள்ளரி, இளநீர் போன்றவற்றை விரும்பி உண்பார்கள். நீதி, நேர்மை, நியாயம் தவறமாட்டார்கள். அவ்வளவு எளிதில் எதற்கும் இணங்கிப் போக மாட்டார்கள். விழிப்புணர்வு மிக்கவர்கள். நம்பியவர்கள் யாராவது இவர்களுக்குத் துரோகம் செய்தால், அதைப்போலவே நான்கு மடங்கு துரோகம் செய்து எதிராளியை வீழ்த்திட முயற்சிப்பார்கள்.

**கோரைமுடி**

தலைமுடிகள் கோரை புற்களைப் போல் சிலருக்கு இருக்கும். இவர்கள் எதற்கும் பேராசைப் பட மாட்டார்கள். இருப்பதை வைத்துக் கொண்டு, 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற வாக்கிற்கிணங்க வாழ்வாங்கு வாழ்வார்கள்.
இவர்கள் தங்களது திருமணத்தின்போது சாதாரணமான எளிய வாழ்க்கையைத்தான் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். திரு மணத்துக்குப் பிறகு படிப்படியாக உயர்ந்து மிகப்பெரிய செல்வ நிலையை அடைவார்கள். பொது உலக விடயங்கள், சமூகம் சார்ந்த காரியங்கள், உலக அறிவு போன்றவற்றில் இவர்களுக்கு நாட்டம் குறைவாகவே இருக்கும்.

(தொடரும்)

# வரலாற்றில் இன்றைய தினம்

455-றோடைவிட்டுத் தப்பி ஓடும் போது கோபம் கொண்ட கும்பல் ஒன்றினால் பேரரசர் பெற்றோனியஸ் மக்ஸிமஸ் கல்லாலெறிந்து கொல்லப்பட்டார்.
526-பேரழிவு தந்த நில நடுக்கத்தால் சிரியா அன்றிகொச்சில் 250 ஆயிரம் பேர்வரை உயிரிழந்தனர்.
1578-பாரிஸில் மிகப் பழமை வாய்ந்த பொன்றநியூப் (புதிய பாலம்) புக்கான அடிக்கல் மூன்றாம் ஹென்றி அரசால் நடப்பட்டது.
1795-படைப்பாளிகளுக்கு முழு உரிமை வழங்கும் உரிமைச் சட்டம் ஐக்கிய அமெரிக்காவில் கொண்டுவரப்பட்டது.
1805-டயமன்ட் குன்றுகளில் நிலை கொண்ட பிரிட்டிஷ் படைகளுக்கு எதிரான தாக்குதல்களை பிரான்சிய மற்றும் ஸ்பானிய படைகள் தொடங்கின.
1859-பிக்பென் மணிக் கூட்டைக் கொண்ட நாடாளுமன்ற மணிக் கூட்டுக்கோபுரம் நேரத்தைக் காட்டத் தொடங்கியது.
1889-பென்சில்வேனியா ஜோன்சன் நகரில் அணை உடைந்து 60 அடி உயரமான தண்ணீர் நகருள் பாய்ந்ததில், 2 ஆயிரத்து 200 பேர் உயிரிழந்தனர்.
1902-வெறினீங் ஒப்பந்தத்தின் மூலம் தென் ஆபிரிக்கா மீது பிரித்தானியாவின் கட்டுப்பாடு உறுதிப்படுத்தப்பட்டமையை அடுத்து, அங்கு போர் முடிவுக்கு வந்தது.
1909-கறுப்பின மக்களின் மேம்பாட்டுக்கான தேசிய சங்கத்துக்கு (NAACP) முன்னோடியான தேசிய நீக்ரோ கமிட்டி முதன் முதலாகக் கூடியது.
1910-தென் ஆபிரிக்க யூனியன் உருவாக்கப்பட்டது.
1911-மெக்சிகோ புரட்சியை அடுத்து அரசதலைவர் போர்ட்பிறியோ டயஸ நாட்டை விட்டுத் தப்பி ஓடினார்.
1924-சோவியத் யூனியன் பீஜிங் அரசுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது. இதற்கமைய மொங்கோலியாவின் புறப்பகுதி, சீனக்குடியரசின் ஒரு பகுதியெனவும், அதன் இறைமையை ரஷ்யா மதிப்பதாகவும் உறுதியளித்தது.
1927-கோடிக் கணக்கான வாகனங்களை உற்பத்தி செய்த நிலையில், போர்ட் ரி மொடல் வாகனங்களின் உற்பத்தி நிறுத்தப்பட்டது.
1935-7.7 ரிச்டர் அளவிலான நில நடுக்கத்தில் பாகிஸ்தான் குயெற்றா பகுதி அழிவடைந்ததில் 40 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
1942-ஜப்பான் இம்பீரியல் கடற்படை நீர் மூழ்கிக் கப்பல்களால் அவுஸ்திரேலியாவின் சிட்னி மீது தொடர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.
1961-தென் ஆபிரிக்க யூனியன் தென் ஆபிரிக்கக் குடியரசானது.
1990-செய்தியாளர் மீது சீறிவிழுந்தார் பாதுகாப்புத் துணையமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா
1990-அரச கரும மொழிச் சட்டத் திருத்த அறிக்கையை அமைச்சரவை ஏற்றுக் கொண்டது.
1992-சுன்னாகம் நகரப் பகுதியில் குண்டு வீச்சு குடும்பப் பெண் சாவு, கடைகள் வீடுகள் சேதம்.
1992-முல்லைத்தீவுப் பகுதியில் கடும் சண்டை
2003-மணற்காட்டுக் கடற் பகுதியில் 3 கடற்படையினரைக் காணவில்லை என்ற அறிவிப்பு வெளியீடு.
2003-இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசின் பதிலுக்குத் தமிழ்க் கட்சிகள் கண்டனம்.
2004-குடாநாட்டின் கல்வி நிலமை தொடர்பாக உலகக வங்கிக் குழு ஆராய்ந்தது.

**நாளை**

**வைகாசி-18**
வியாழக்கிழமை -01.06.2017
திதி: ஸப்தமி பி.ப.12.18
நட்சத்திரம்: மகம் பி.ப.04.49
சுபநேரம்:07.22-08.52 வரை
ராகுகாலம்:01.22-02.52 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லையும் கனியாக்கும் நல்லை ஆதீனம்

கே.எஸ்.சிவஞானராஜா

“என்றும் வேண்டும் இன்ப அன்பு” என்ற அருள்வாக்குக்கமைய எமக்குப் பருவம் வந்த காலம் தொடக்கம் நல்லை ஆதீனம் சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றி வருகிறது.
மணிஐயர் காலத்திலிருந்து உபந்நியாசம் , கதாகாலேட்சபம், பிரசங்கம், பண்ணிசை, சங்கீதம், சமய வகுப்பு, சிவதீட்சை, புராணபடனம் , இசைவிழா, நூல்வெளியீடு, அரங்கேற்றம், சைவசமய கலாசாரப் போட்டிகள், பண்பாட்டு விழுமியம் பேணும் விழாக்கள் எனக் காலம் கருதிய அனைத்தையும் ஆதீனம் திருப்தியோடு ஆற்றி வருகிறது.

**ஆதீனம்**

இந்தியாவில் பொதுவாக ஆதீனங்கள் அந்த நாட்டின் “சமதர்ம சக வாழ்வு சாம்ராஜ்ஜியத்துக்காகவும், சமய தாற்பரியங்களுக்காகவும், சமய கலை, கலாசார, பண்பாட்டு வளர்ச்சிக்காகவும் புராதன தமிழ்ப் பாரம்பரிய சைவ சித்தாந்த உபந்நியாச திருமுறை, வேத, மந்திர, சிவாகம அனுட்டானங்களுக்காகவும் மிகுந்த தொண்டாற்றி வருகிறது. மேலும் வாழையடி வாழையாக ஆதீனங்கள் சீடர்களை வளர்த்தும் வருகிறார்கள். அது ஆதீனங்களின் தேவையுமாகும். ஒவ்வொரு ஆதீனத்துக்கும் ஒவ்வொரு சம்பிரதாயங்கள் உண்டு. உடை, நடை பாவனை உண்டு. ஒழுக்க விழுமியங்கள் உண்டு. உயர்ந்த இலக்கு உண்டு. வழிகாட்டவல்ல பக்கபலம் உண்டு. வகுப்புக்கள் உண்டு. நூல்நிலையங்கள் உண்டு. ஆலய வழிபாடுடைய வசதிகள் உண்டு. நிர்வாகக் கட்டமைப்பு உண்டு. நாளாந்தக் குறிப்பேடு உண்டு. கணக்கு வழக்குண்டு. எல்லாவற்றுக்கும் மேலாக ஆதீனங்கள் யாவும் அறிவுப் பொக்கிசம். யாரையும் தீண்டாத பக்குவமுடையது. அதேபோல ஏனையவர்களும் சீண்டாத புனிதம் உடையது. காலத்துக்குக் காலம் அடுத்த வாரிசுகளைச் பரிந்துரை செய்யும் சீரான யாப்புடையது. தெய்வம் வருகை தந்து கூடிக் குலாவும் பாங்குடையது. கௌரவத்தையும், பட்டங்களையும் நடுநிலையோடு முதிர்ந்த பேறு உடையவர்க்கு வழங்க வல்லது. பணத்துக்கும், பந்தங்களுக்கும், அரசியல் குறுக்கீடுகளுக்கும் இடந்தராதது. ஆதலால் ஆதீனங்கள் பிசகுவதில்லை. வெற்றி பெறுகின்றன.

**நல்லை ஆதீனம்**

இலங்கையில் சைவத்தையும், தமிழையும், பண்பாட்டையும், கலாசார விழுமியங்களையும், ஒழுக்கத்தையும் பேணிப்பாதுகாக்கும் அதேவேளை அவற்றை வளர்ப்பதிலும் முன்னின்று பணியாற்றுவதில் நல்லை ஆதீனம் அளப்பரிய சேவையாற்றி வருகிறது. இது நாடறிந்த விடயமாகும். மணிபாகவதர், மணி ஐயர், குருமகா சந்நிதானம், ஆதீனம், முதல்வர், பஜனாதிபதி உபந்நியாசாதிபதி , பிரசங்க வாரிதி, சைவ சமய பீடாதிபதி, ஆதீன கலாநிதி என முன்னைய முதல்வர் அலங்கரிக்கப்பட்டது போலத் தற்போதைய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் இரண்டாவது குரு மகா சந்நிதானம் அதனது கௌரவம் பேறாகும் படியாக சேவைகளை குறைவின்றி ஆற்றிவருவது இலங்கை செய்த பாக்கியமாகும்.

**சிறப்பு**

தற்போதைய ஆதீன முதல்வரின் தோற்றப்பாடு, செந்தழிப்பு, அருட்பார்வை, தமிழ் வளம், தமிழ் உச்சரிப்பு , சைவசமயப் பொலிவு, திருவருட்கடாட்சம், பேதமில்லாம வாழ்வு. திருமுறைச் செறிவு, புராண இதிகாச வரலாற்றுச் சொற்பெருக்கு, சிவசிந்தனை, புன்னகை பூத்த வதனம் யாவுமே யாழ்ப்பாணம் மட்டுமல்ல உலக சைவ சமய வியாபகத்தின் அடையாளங்களாகும். இத்தகு நிலை நல்லை ஆதீனத்தின் முத்திரைகளாகும். ஏனைய மதங்களில் மதகுருமார்களை எவ்வாறு போற்றிக் கௌரவமளிக்கிறார்களோ அதேபோல நல்லை ஆதீன முதல்வருக்கும் உலகம் தலை வணங்குகின்றது. இந்த நிலையில் இந்த மண்ணும் அவருக்கு ஏற்ற கௌரவத்தை அளித்து மாண்புறுகிறது. அவரை நானும் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.
மேலும் ஆதீன முதல்வர் என்னதான் சோதனை வந்தபோதும் எல்லாவற்றிலும் எல்லாம் வல்ல பரம்பொருளையே துணையாகவும் கொண்டு சைவசமயத்தைத் தனது குரு முதல்வரின் ஆணைப்படி காப்பாற்றியும் வெல்லவும் வைத்துள்ளார். அவரது உடல், பொருள் ஆவி, மொழி, நடை உடை பாவனை, சிவசின்னம் அனைத்துமே கல்லையும் கனியாக்க வல்லதாகும்.
அவரது சுயமான கருத்துக்கள் எதுவாயினும் அவர் பரந்த நோக்குடன் செயற்படுபவர் என்பதால் யாவும் இனிதாகவே இந்த மண்ணில் அமையும் என்பது எனது பார்வையாகும். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

# தமிழ்த் திரை உலகின் இசைச் சக்கரவர்த்தி ரி.எம்.எஸ்

ஆ.கனகரத்தினம்



தமிழ்த் திரை உலகின் இசைச் சக்கரவர்த்தியாக விளங்கிய ரி.எம் சௌந்தரராஜன் மதுரையில் 1923 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி மீனாட்சி ஐயங்கார் தம்பதிகளின் இரண்டாவது புதல்வனாகப் பிறந்தார்.

இவர் தனக்கு ஏழுவயதாக இருக்கும்போது இசையில் மிகுந்த ஈடுபாடுடையவராய்க் காணப்பட்டார். இதனால் சக்கிரபாணிபாகவதரிடமும் காரைக்குடி ராஜமணி ஐயங்காரரிடம் இரண்டு வருடம் சங்கிதம் கற்றார் இத்துடன் அந்தக் காலத்தில் சிறந்த நடிகரும் பாடகருமாக விளங்கிய எம். கே. தியாகராஜ பகவதரின் பாடல்களைச் சுத்தமாக அவர் பாடியது போலவே பாடிப் பலரதும் பாராட்டைப் பெற்றார். அவரைப் போல தானும் ஒரு நடிகராகவும், பாடகராகவும் வரவேண்டும் என்ற ஆசையும், ஆர்வமும் அவரது மனதில் குடிகொண்டிருந்தது.

### பாகவதரின் பாடல்கள்

இதனால் அந்தத் துறையில் பணியாற்றுபவர்களிடம் சென்று தன் விருப்பதைத் தெரிவித்தார். தியாகராசா பகவதருடைய பாடல்களைப் பாடும் போது எடுத்த எடுப்பிலேயே உச்சஸ்தாயியில் பாடுவதனால் திரைப் பட நடிகர்களுக்கு பின்னணி கொடுக்கச் சரிவராது என்று மறுத்தனர். அவர்கள் மறுத்தபோதிலும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. அப்போது சென்றல் ஸ்ருடியோ திரைப்படத் தயாரிப்பாளரான சுந்தர்வால் நட்கர்னி என்பவரது வீட்டில் ஆறுமாதம் பணியாளராக இருந்தார். அந்த திரைப்படத் தயாரிப்பாளர் தனது இசையமைப்பாளரிடம் 1946 ஆம் ஆண்டு வெளியான கிருஸ்ண விஜயம் என்ற படத்தில் ஒரு பாடலைப் பாட இடம் கொடுக்கும்படி சொன்னார் அப்போது இவர் தனது 23 ஆவது வயதில் முதன்முதல் பாடிய பாடல் "ராதே என்னைவிட்டுப் போகாதேடி" என்ற பாடலை தனது குருவாகிய தியாராஜபகவதரின் மெட்டில் பாடினார். அதனைக் கேட்ட மாத்திரத்தில் அந்தப்படத்தின் இசையமைப்பாளரான எஸ்.எம்.சுப்பையா நாயுடு அந்தப் படத்தில் வரும் மிகுதி ஐந்து பாடல்களையும் இவரையே பாடும்படி கேட்டுக் கொண்டார் அந்தப் படத்தில் வந்த ஆறு பாடல்களையும் பாடி ஊதியமாக 625 ரூபா மட்டும் தான் கிடைத்தது. அடுத்து மந்திர குமாரி படத்திலே இராமநாதனின் இசையமைப்பில் "அன்னமிட்ட வீட்டிலே கன்னக் கோலைசாத்தியே" என்ற பாடலைப் பாடினார்.

இதிலே இவரது திறமையைக் கண்ட கே.வி.மகாதேவன் இரண்டு நாட்டார் பாடல்களைப் பாடுவித்தார். அடுத்து ஏ.வி.எம்.ஸ்ரூடியோ உரிமையாளர் தயாரிக்கும் படங்களுக்குப் பின்னணி பாடல்கள் பாட ரி.எம்.எஸ் ஐ பயன்படுத்துமாறு கே.வி.மகாதேவன் பரிந்துரை செய்தார். அப்போது ஆர்.சுதர்சனம் இசையமைத்த செல்லப்பிள்ளை படத்தில் வரும் எம். எஸ். இராஜேஸ்வரியுடன் இணைந்து பாடும் வாய்ப்பைப் பெற்றார். இந்தப் பாடலுடன் ரி.எம்.எஸ் திரைப்படப் பாடகராக பாடுவதற்கு அங்கீகாரம் கிடைத்தது.

### கூண்டுக்கிளி படத்தில்

அதனைத் தொடர்ந்து 1954 ஆம் ஆண்டு நடிகர் திலகமும், மக்கள் திலகமும் சேர்ந்து நடித்த கூண்டுக்கிளி படத்தில் "கொஞ்சும் கிளியான பெண்ணே" என்ற பாடலைச் சிவாஜிக்காகப் பாடினார். இதைக் கேட்ட மக்கள் திலகம் பிரமித்துப்போனார். அப்போது எம். ஜி.ஆர். ஒரு விண்ணப்பம் செய்தார். இனித் தான் நடிக்கும் படங்களில் வரும் பாடல்களை நீங்களே பாட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதன் படி அவருக்காகப் பாடிய புரட்சிப் பாடல்கள் கேட்போரை ஈர்த்துக் கொண்டன. உ+ம் "அச்சம் என்பது மடமைடா" " சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா" "உலகம் ஆயிரம் சொல்லட்டுமே" "நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்" என்ற பாடல்கள் ஒரு சிலவாகும். சோகப்பாடல்கள் வரிசையில் கார்த்திகை தீபம் படத்தில் " மலை சாய்ந்து போனால் சிலையாகலாம்" சதாரம் என்ற படத்தில் வரும் "நினைத்து நினைத்து நெஞ்சம் உருகுதே" எண்ணமெல்லாம் ஓர் இடத்தையே நாடுதே" "உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி" "தேவனே என்னைப் பாருங்கள் என் பாவங்கள் தம்மை வாங்கிக் கொள்ளுங்கள்" தாய்ப்பாசத்தை வெளிப்படுத்தும் பாடல்கள் பட்டினத்தார் படத்தில் வருவதை விட அன்னையின் ஆணை என்னும் படத்தில் அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை" பக்திப் பாடல்கள் வரிசையில் பார்க்கும் போது இவர் முருகபக்தன் என்பதால் அருணகிரி நாதர் படத்தில் பாடிய திருப்புகழ் முத்தைத்தரு பத்தித்திரு நகை" "உள்ளம் உருகுதையா" முருகா நீ வர வேண்டும், கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும், மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன், வேலை வணாங்காது வேறென்னவேலை, கதிர்காமக்கந்தன் மீது பாடிய மேனி சிலிர்க்குதையா, சொல்வாத நானில்லை சுடர் மிகு வடிவேலா, வடிவேலும் மயிலும் துணை, சிந்தனை செய்மனமே, கற்பக வல்லி, நின் பொற்பதங்கள் பிடித்தேன், காமல் பாடல் வரிசையிலே முதலாளி படத்தில் ஏரிக்கரையின் மேலே, உத்தமபுத்திரனில், முல்லைமலர் மேலே மொய்க்கும் வண்டுபோலே, சபாஸ்மீனாவில், சித்திரம்பேசுதடி வானில் முழு மதியைக் கண்டேன், என் அருமைக் காதலிக்கு வெண்ணிலாவே, காரங்கதாராவில் வசந்த முல்லைப் போலே வந்து அசைந்து ஆடும் இருமலர்ககளில் மாதவிப் பொண்மயிலாள் தோகை விரித்தாள் பச்சை விளக்கில் ஒளிமயமான எதிர்காலம் என்ற பாடர்கள் ஒரு சிலவாகும்.

வெற்றிப் பாடல் வீரப்பாடல் வரிசையில் திருவிளையாடலில் "பாட்டும் நானே பாவமும் நானே, அகத்தியரில் வென்றிடுவேன் எந்த நாட்டையும் நாதத்தால் வென்றிடுவேன் தவப்புதல்வனின் இசைகேட்டால் [illegible] கல்வியா செல் [illegible] ஒரு சிலவாகும். ரி.எம். எஸ்சின் குரலின் தனிச்சிறப்பு கம்பீரமான ஆண்குரல் ஏழுஸ்வரங்களில் உலாவக்கூடிய குரல் எல்லா நடிகர்களுக்கும் ஏற்றபடி மாற்றியமைக்கக்கூடிய குரல் இதனால் தான் பின்வரும் நடிகர்களுக்கெல்லாம் பின்னணி பொருத்தமாக கொடுத்துள்ளார். நடிகர் திலகம் சிவாஜி, எம்.ஜி.ஆர். முத்துராமன், ஜெய்சங்கர்,எஸ். வி.சுப்பையா நாகேஸ், ஜெமினிகணேசன், நம்பியார், நாகேஸ், சிவகுமார் இன்னும் பல நடிகர்களுக்கு பின்னணிப் பாடல் அவரவர் குரலுக்கு ஏற்றவாறு மாற்றிப் பாடுவதில் ரிம்.எம்.எஸ்சுக்கு நிகர் அவரே தான்.

> இவர் தனது 23 ஆவது வயதில் முதன்முதல் பாடிய பாடல் ராதே என்னை விட்டுப் போகாதேடி என்ற பாடலை தனது குருவாகிய தியாராஜ பகவதரின் மெட்டில் பாடினார். அதனைக் கேட்ட மாத்திரத் தில் அந்தப் படத்தின் இசைய மைப்பா ளரான எஸ். எம். சுப்பையா நாயுடு அந்தப் படத்தில் வரும் மிகுதி ஐந்து பாடல்களையும் இவரையே பாடும்படி கேட்டுக் கொண்டார் அந்தப் படத்தில் வந்த ஆறு பாடல்களையும் பாடி ஊதியமாக 625 ரூபா மட்டும் தான் கிடைத்தது.

### ஏராளமான விருதுகள்

இதனால் இவருக்குக் கிடைத்த விருதுகளாவன கீதா வாரிதி, கலைமாமணி, ஏழிசைமன்னர், பத்மசிறி, ஞானகலாபாரதி, மருத்துவர் செம்மல், இப்படி இன்னும் விருதுகள் பெற்றிருந்தார். நடிப்புத்துறையில் சிவாஜியை 37 வருடங்கள் எவராலும் அசைக்க முடியாமல் இருந்தது போல ரி.எம்.எஸ்சையும் 23 வயது தொடக்கம் 65 வயது வரைக்கும் எவராலும் அந்த இடத்தை பிடிக்க முடியவில்லை. இது அவர்கள் இருவருக்கும் ஆண்டவன் கொடுத்த கொடை என்று தான் சொல்ல வேண்டும்.

தமிழ்த் திரையுலககில் இயல் இசை நாடகம் இவை மூன்றுக்கும் உதாரண புருஷராக விளங்கியவர்கள் கண்ணதாசன், ரி.எம்.எஸ், நடிகர் திலகம் ஆகியோரின் கலைப் பணி தமிழ் உலகுக்கு ஒருவரப் பிரசாதமாகும். எனவே கலையை வளர்த்த கலைஞர்களுக்கு என்றும் நன்றியுடையவர்களாயிருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்படிப்பாட நான் ஆசைகொண்டேன்

கருடன்


இசைபயிலும் மாணவர்களுக்குப் பெரும் வரப் பிரசாதமாக அமைந்த இசையரங்குதான் நெய்வேலி சந்தான கோபாலனின் கர்நாடக இசைக்கச்சேரி அரங்கம். அடேயப்பா! பிரம்மாதம். கர்நாடக சங்கீதமே தேனாகப் பாய்ந்து ஓடிய ஆற்றில் நாமும் தோய்ந்து குளித்துச் சூடாறினோம். சூடேறியவர்களுக்குக் கூட பூநாறி மடத்தடி மண்டபம், இசையால் தானாற வைக்கும் என்பதை நெய்வேலியாரின் இசைப் பாட்டு நன்கு உணரவைத்து விட்டது.

**இந்தியா**

இசையின் இருப்பிடம் இந்தியாவேதான். காரணம் அங்குதான் இசை செழிப்பாக விளைகிறது. அங்கு பண்படுத்தப்படுகிறது. தினமும் பேறாக்கப்படுகிறது. வைத்தியரின் வீடாயினும் சரி, விவசாயியின் வீடாயினும் சரி அங்கே சங்கீதம் ஒலித்துக் கொண்டேயிருக்கும். அத்தகை மண்ணில் தான் தண்டபாணிதேசிகர், ஜயாக்கண்ணுதேசிகர், ரங்காச்சாரியார், மணிஐயர், சோமசுந்தரம் (சோமு) சந்தானம், விஸ்வநாதையர், சுப்புலட்சுமி, வசந்த குமாரி, பட்டம்மாள், ராதா ஜெயலட்சுமி, கோவிந்தராஜன், ஷேஷகோபாலன், பாலமுரளிகிருஷ்ணா, யேசுதாஸ், நித்தியசிறி, சுதாரகுநாதன், தியாக ராஜன், அருண், சௌமியா, ஷேஷவாச்சாரியார், ராகவாச்சாரியார், கல்யாண கிருஷ்ண பாகவதர், கல்யாணராமன், பூஷணி, சித்தூரார் போன்ற பிரபல்யமான கர்நாடக சங்கீத ஜாம்பவான்கள் தோன்றினர். இசையை ஊற்றெடுக்க வைத்து, உலகை ஈர்தெடுக்க வைத்த பெருமையை, இந்தியா இன்றுவரை காப்பாற்றி வருகிறது. இனிமேலும் அது இரட்டிப்பாக இசையை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை. இந்தநிலையில் மதுரை. என். ஷேஷ கோபாலனின் திருவடிகளிலும் கர்நாடகசங்கீதம் எப்படிப் பூவாகி மலர்ந்தது போல் தனக்குப் பேறளித்து வரமளித்த குருவின் பாதங்களில் சரணமடைந்து அவரது இசையில் பேறாகியவரே நெய்வேலி சந்தான கோபாலன் ஆவார். இறைபக்தி, குருபக்தி, மண்பக்தி அவரின் பெரும்பக்தியாகும்.

**விவகாரம்**

நெய்வேலியின் இசைப்பாணி (STYLE) ஒரு தனிரகம். இசைப்பணியும் எமக்குப் பெருமிதம். உலக அரங்கிலே தலைசிறந்த முன்னணி இசைக் கலைஞர் நெய்வேலி சந்தான கோபாலனாவார். அவரது தோற்றப்பாடு, உடை நடை பாவனை, மனோதர்ம இசைவளம், இராகம், தானம் (THAANAM), பல்லவி, நிரவல், கற்பனாஸ்வரம், சாகித்திய வெளிப்பாடு, சௌக்க மத்திம துரித இசைப்பிரயோகம், அபூர்வ இராகங்களின் ஆட்சி, அபஸ்வரம் பிசகாத இருபத்திரண்டு சுருதிகளைக் கையாளும் விதம், கச்சேரி தர்மம், சகபின்னணிக் கலைஞர்களுக்கான வழங்கும் சந்தர்ப்பம், புன்முறுவலோடு சபைக்கு இசையை அர்ப்பணிக்கும் விதம், அளவான கமகங்கள், அழகான பிருக்காக்கள், அழுத்தமான சங்கதிகள் யாவுமே ஆற அமர இருந்து அனுபவிக்கக் கூடிய சுபாவங்களாகும். இன்னுமொரு முக்கியமான விடயம் யாதெனில், இசையின் அத்திபாரத்திலிருந்து உச்சம்வரை ஆழ்ந்த புலமை மேற்கூறிய விவகாரங்கள் நெய்வேலி சந்தான கோபாலனின் சொந்தமாக இருப்பதனால், அவர் வாய்திறக்க இசைத் தேன் சொட்டுகிறது. வான் பொழிகிறது.



**பயிற்சி**

அகார, இகார, உகாரப் பயிற்சிகளும், கீழ்ஸ்தாயி, மேல்ஸ்தாயி வரிசைகளோடு, ஜண்டை வரிசைகள், அலங்காரங்களில் திரிகாலப் பயிற்சியும் சுருதியோடு தினமும் காலை மாலைகளில் செய்வது குரலுக்கும், வாத்தியங்களில் பயிற்சி செய்வது விரலுக்கும் மிகுந்த சுகத்தைப் பிரவாகிக்கும். உண்மையும் கூட.

மேல்ஸ்தாயிகளில் பாடுவதற்கு குரல் சங்கடப்படுமாயின் அப்பியாச வரிசைகளிலும், அப்பியாசகானஉருப்படிகளிலும்போதியபயிற்சி இல்லை என்றும் பூரணமாக நம்பலாம்.

ஒவ்வொரு சுருதியிலும் சௌகரியமாக நின்று பாடவேண்டுமாயின் கீதங்களை நன்கு அப்பியாசிக்கவேண்டும். நாம் பரீட்சைக்கும், பட்டத்துக்கும் உருப்படிகளைப் பாடுவதனால் சங்கீதத்தின் சுகத்தை அனுபவிக்க முடியவில்லை. பட்டத்தோடும், நியமனத்தோடும், திருமணத்தோடும், பிள்ளைகளோடும் நாம் (எல்லோருமல்ல) சங்கீதத்தை ஓய்வுக்கு அனுப்பிவிடுகின்றோம். பிறகென்ன சங்கீதத்துக்குப் பென்ஷன் கிடைக்கிறது. இறைவனுக்கோ சங்கீதம் கேட்க எவ்வளவோ ஆசை இருக்கிறது. இறைவனுக்கு மட்டுமல்ல இந்த மண்ணுக்கும் அதே ஆசைதான். முடியவில்லையே! இது துன்பமல்லவா!

**அப்படி!**

அப்பரும், சுந்தரரும், ஆளுடைப்பிள்ளையும் அருள்மணிவாசகரும் பொருளுணர்ந்து பாடி மகிழ்ந்தது போல, நெய்வேலி சந்தானகோபாலன் (06.05.2017) ஐயாக்கண்ணு தேசிகரின் நூற்றாண்டு விழாவில் பாடிய போது நானும் அப்படிப் பாட ஆசை கொண்டேன்! ஆனால் தினமும் எந்தவிதமான பயிற்சியுமில்லாமல் எப் போதுதான் அப்படிப் பாடுவது? முடியவே முடியாது! ஆம்! சங்கீதம் என்பது கடையில் வாங்கும் சரக்கல்ல! சந்தான கோபாலனைப் பார்த்தாலே பாட்டுவரும். எந்தநேரமும் சங்கீதப் புன்னகை! மற்றவர்களைப் குறை சொல்லாத மாண்பு! இளையோர்களை ஊக்குவிக்கும் பொறுப்பு! சுயகட்டுப்பாடு! சுயபரிசோதனை! அதீத சுர, லய, சுருதி ஞானம்! மற்றவரை அளக்கும் மதிப்பீடு! அரங்க தர்மம்! அளவான உணவுப் பழக்க வழக்கம்! ஆயிரக்கணக்கான இராகங்களில் அரசாட்சி! இவ்வளவும் ஒரு மனிதனிடத்தில் நிறையுமாயின் கலைகள் பிரவாகிக்கும்! இதுவே எமக்கும் தேவை? நாம் எங்கே? நாம் நாமாக இல்லையே! நாம் கொஞ்சமாகவது சிரிக்கக் கூடாதா? கலைஞனாக இருந்தால் நாம் மாறியே தீரவேண்டும். அகார சாதகம் செய்யவேண்டும் கீதங்கள் பாடப் பாட ஒவ்வொரு சுரத்திலும் நின்று பாடும் மனோதர்மம் வெளிப்படும். வர்ணம் பாடும் போது தசவித கமகம் குரலில் தொனிக்கும். தினமும் கச்சேரிகள் கேட்கும் தினத்தோறும் கேள்வி ஞானம் குரலில் படிமானம் பெறும். ஆம், நெய்வேலி, றொபேட், பத்மலிங்கம், கருணாகரன், நவரத்தினம், ஜேசுதாஸ், நித்தியசிறி, சுதா, பூஷணி, அருண், பம்பாய் சிறி ஆகியோரைப்போல அப்படிப்பாட நான் ஆசைகொண்டேன்!!! சரியா?

# இராகங்களுக்கு சுவையூட்டுவது 22 சுருதிகளே!



ஒரு நாடு பேறடைவது இயற்கையின் விசித்தி ரங்களினாலாகும். ஒரு கிராமம் பேறடைவது மக்களின் கடும் உழைப்பினாலாகும். ஒரு வீடு பேறடைவது தூய்மையான இல்லற வாழ்வினாலாகும். வாழ்வு பேறடைவது சமய ஈடுபாட்டினாலாகும். சமயம் ஈர்க்கப்படுவது இசையினாலாகும். இசைக்கு உயிராவது இராகங்களே. அந்த இராகங்களுக்குச் சுவையூட்டுவது இருபத்தியிரண்டு சுருதிகளின் பயன்பாடேயாகும். ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாவங்கள் அதற்குள் எத்தனை கோலங்கள் அதனால் எத்தனை அற்புத ஜாலங்கள். அதனைச் சற்று நோக்குவோமாக. ஒரு சங்கீத வித்துவான் பாடும் போது சபாஷ் என்றும், பேஷ் என்றும், பலே என்றும், ஆகா ஓகோ என்றும்; அற்புதம் என்றும் மெய் மறந்து பாராட்டுகிறோமென்றால் அதற்குக் காரணம் அந்த வித்துவான் எடுத்துக் கொண்ட இராகத்தின் சாராம்சங்களை அதன் சுவைபடத் தொட்டு நின்ற வெளிக்காட்டிப் பாடியதேயாகும். சுவையென்பது ஒரு இராகத்துக்கு இருக்க வேண்டிய பொருத்தமான ஸ்வர ஸ்தானங்களின் சரியான வடிவம் அல்லது சுருதியின் அளவு என்பதனைக் குறிப்பதாகும். உதாரணமாக சிதம்பரம் என்ற பெயர் பலருக்கு உண்டு. ஆனால் எல்லோரும் ஒரே மாதிரியானவர்களாக இருக்க முடியாது. அம்மா என்று எல்லோரும் தாயை அன்பாகக் கூப்பிடுகின்றோம். ஆனால் சுவை சொட்டும்படியாக ஏதோவொரு அம்மா என்ற அழைப்பு எம்மை வியக்க வைக்கிறது. ஆகவே ஸ்வரம், பெயர், இறைநாமம், மந்திரம், சாகித்தியம், திருமுறை யாவும் அந்தந்த உரிமங்களோடு உச்சரிக்கும் போதுதான் பயனும் சுவையும் பாரில் கொழிக்கும்.



**சுருதி**

இசைக்கு ஆதாரமான ஸ்வரங்கள் ஏழு. இந்த ஏழு அம்சமான தொனிகள் நாத சாம்ராஜ்ஜியத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நுட்பமான சுருதிகளாகும். இந்த ஏழில் அடங்குமாறு சட்டெனச் சுவைதரும் ஸ்வரங்களோ ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்று பெயர் பெறுகின்றன. குரல் , துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற புராதனத்தமிழ்ப் பெயர்களோடு, மயில், ரிஷபம், ஆடு, ஜீரௌஞ்சகம், கோகிலம், குதிரை, யானை ஆகிய சீவராசிகளின் தொனிகளோடு சம்பந்தமாகி ஏழுஸ்வரங்கள் அதிர்வதைப் புராதன ஞானிகள் சரியாகக் கணக்கிட்டுள்ளனர். பரதர், நாரதர், மதங்கர், சாரங்க தேவர் போன்ற மகாஞான முனிவர்களும் ஏழுஸ்வரங்களை மூலாதாரமாகக் கொண்டு இருப்பத்தியிரண்டு சுருதிகளுக்கு உரிய அந்தஸ்தும், பெயரும் கொடுத்துள்ளனர். ஏழு ஸ்வரங்கள் பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்கள் ஆவதைப் போலவே சற்று இன்னும் விரிவடைந்து இருபத்தியிரண்டு ஸ்தானங்களாகிய நுண்கருவூல சுருதிகளைப் பயன்பாட்டில் முதலாக்கியுள்ளது. மெஞ்ஞானத்தின் பெறுபேற்றில் விளைந்த இந்த இருபத்திரண்டு சுருதிகள் நாளடைவில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி காரணமாக முப்பத்திரண்டுக்கும் மேற்படலாம். எதுஎப்படியோ 22 சுருதிகளின் ஆட்சியில் கர்நாடக சங்கீதம் பேரின்பச் சுவையோடு நீடுவாழ்கிறது. அக்சிப்திகா, ராகவர்த்தனி மகரிணி ஆகிய சம்பிரதாயங்களோடு இராகங்களைப் பாடும் போது 22 சுருதிகளின் ஜீவன் தொனிக்கிறது. ஏழு ஸ்வரங்களில் பேதமற்ற ஸ்வரங்களான ஸட்ஜ, பஞ்சம் ஆகிய இரண்டு ஸ்வரங்களைத் தவிர ஏனைய ஸ்வரங்களான ரிஷப, காந்தார, மத்திம தைவத, நிஷாத ஸ்வரங்கள் ஒவ்வொன்றும் நான்கு பேதங்களை எடுக்கின்ற போது இருபதும், பேதமற்ற ஸ்வரங்கள் இரண்டுமாக மொத்தமாக இருபத்தியிரண்டு சுருதிகளாகின்றன.

அவற்றை விபரமாக இப்போது பார்ப்போம்.

| சுருதி எண் | பெயர் | அளவு | இராகம் |
|---|---|---|---|
| 1 | ஸட்ஜம் | 1 | எல்லா இராகங்களும் |
| 2 | ஏகசுருதி ரிஷபம் | 256/243 | கௌளை,சௌராஷ்டிரம் |
| 3 | துவிசுருதி ரிஷபம் | 16/15 | மாயாமாளவகௌளை |
| 4 | திரிசுருதி ரிஷபம் | 10/9 | பைரவி,ஸ்ரீராகம், கரகரப்பிரியா |
| 5 | சதுஸ்ருதி ரிஷபம் | 9/8 | சங்கராபரணம், கல்யாணி, பூரண சந்திரிக்கா |
| 6 | கோமள சாதாரண காந்தாரம் | 32/27 | தோடி,பைரவி,ஸ்ரீராகம் |
| 7 | சாதாரண காந்தாரம் | 6/5 | கரகரப்பிரியா |
| 8 | அந்தர காந்தாரம் | 5/4 | சங்கராபரணம் |
| 9 | தீவிர அந்தர காந்தாரம்/ ச்யுத மத்திம காந்தாரம் | 81/64 | தேவகாந்தாரி, சௌராஷ்டிரம் |
| 10 | சுத்த மத்திமம் | 4/3 | குந்தலவராளி |
| 11 | தீவிர சுத்த மத்திமம் | 27/20 | பேகடா, எதுகுலகாம்போதி |
| 12 | பிரதி மத்திமம் | 45/32 | கல்யாணி |
| 13 | தீவிர பிரதி மத்திமம்/ ச்யுத பஞ்சம மத்தியமம் | 729/512 | வராளி |
| 14 | பஞ்சமம் | 3/2 | பஞ்சமம் வரும் அத்தனை இராகங்கள் |
| 15 | ஏகசுருதி தைவதம் | 128/81 | சாவேரி |
| 16 | துவிசுருதி தைவதம் | 8/5 | மாயாமாளவகௌளை, பந்துவராளி |
| 17 | திரிசுருதி தைவதம் | 5/3 | காம்போதி, வசந்தா,கமாஸ்,கரகரப்பிரியா |
| 18 | சதுஸ்ருதி தைவதம் | 27/16 | அடாணா, கல்யாணி, சௌராஷ்டிரம் |
| 19 | கோமள கைசிகி நிஷாதம் | 16/9 | பைரவி, சுருட்டி |
| 20 | கைசிகி நிஷாதம் | 9/5 | காம்போதி,கரகரப்பிரியா |
| 21 | காகலி நிஷாதம் | 15/8 | அம்சத்வனி, சங்கராபரணம் |
| 22 | சயுத ஸட்ஜ நிஷாதம் தீவிர காகலி நிஷாதம் | 243/128 | குறிஞ்சி, நீலாம்பரி, தேவகாந்தாரி |
| 23 | தார சட்ஜம் | 480 | தாரஸட்ஜம் வரும் எல்லா இராகங்களும் |

**மேலதிக தரவு**

ஒவ்வொரு ஸ்வரமும் நான்கு சுருதிகளாகப் பிரிக்கப்ப ட்டுள்ளன. இந்த ஒவ்வொரு சுருதிக்கும் இடையில் உள்ள ஏக சுருதி, மூன்று அளவுகளைப் பெற்றுள்ளது. அவையாவன.

பூரண ஏக சுருதி 256/243
நியூண ஏக சுருதி 25/24
பிரமாண ஏக சுருதி 81/80

இதைவிட ஸ்வரங்களுக்கான இடையில் உள்ள இடைவெளிகள் நான்காகும். அவையாவன.

ஏக சுருதி 256/243
துவி சுருதி 16/15
திரி சுருதி 10/9
சதுஸ் சுருதி 9/8

பூரண ஏக சுருதியும், பிரமாண ஏக சுருதியும், நியூண ஏக சுருதியும், பிரமாண ஏக சுருதியும், படிமுறையாக ஒவ்வொன்றுடன் சேரும் போது 22 சுருதிகளைக் கணக்கிட முடிகிறது. இத்தகைய சுருதிகளை நாம் குரல், விரல் பயிற்சிகளின் மூலமாகவும், அனுபவத்தின் வாயிலாகவும், கேள்விஞான மூலமாகவும் நன்கு புரிந்து கொள்ள முடியும். முயற்சிப்போமா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இன உணர்வைத் தூண்டிய ஊடகப் போராளி

இலங்கையில் விடுதலைப் போராட்டம் எழுச்சி பெற்றகாலத்தில் விடுதலைக்கான நியாயத்தை வெளிப்படுத்தி வந்த முக்கிய ஊடகவியலாளர்களில் பலர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

முன்னைய அரசதலைவர்களான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா முதல் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிகாலம் வரை ஊடகவியலாளர் பலர் பல்வேறு சிரமங்களுக்கு உட்பட நேர்ந்துள்ளது. அந்தவகையில் மட்டக்களப்பு ஊடகத்துறையை மௌனிக்கச் செய்வதற்காக மட்டக்களப்பு எல்லை வீதியில் வைத்து பிரபல ஊடகவியலாளர் ஜி.நடேசன் 31.05.2004 திங்கட்கிழமையன்று பகல்நேரப்பொழுதில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஊடகத்துறைக்கு வந்த ஜி.நடேசன் அதற்கு முன்னர் ஆசிரியராகவும், வடக்கு கிழக்கு மாகாணசபை அமைக்கப்பட்டபோது மாகாணசபையின் தகவல் உதவிப்பணிப்பாளராகவும் பணியாற்றியிருந்தார். ஊடகத்துறை அனுபவமும் எழுத்தாற்றலும் காரணமாக ஆசிரியராக இருந்த சமகாலப்பகுதியில் ``வீரகேசரி" பத்திரிகையின் மட்டக்களப்பு செய்தியாளராகவும் பணியாற்றத்தொடங்கினார்.

இராணுவ நெருக்கடிகள் நிறைந்த அந்தக்காலகட்டத்தில் இராணுவம் அப்போது நடத்தியிருந்த பல படுகொலைகளுக்கு நீதி கோருகின்ற போராட்டங்களை கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த ஜி.நடேசன், தராக்கி சிவராம் போன்றவர்கள் முழுமூச்சாக முன்னெடுத்தனர்.

நடேசன், சிவராம், உட்பட மட்டக்களப்பில் இருந்த தமிழ்ப் பத்திரிகையாளர்களின் முயற்சியால் 2000 ஆம் ஆண்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் நிகழ்வாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகியது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு மிகப் பெரியபலமாக தூண்களாக ஜி.நடேசன், தராக்கி சிவராம் இருந்துள்ளனர். இருவரும்படுகொலை செய்யப்பட்டதால் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கமும் பல அச்சுறுத்தல்களை எதிர்கொண்டது. ஊடகத்துறையும் மௌனிக்க நேர்ந்தது.

இன்று
ஊடகவியலாளர்
ஜி.நடேசனின்
13 ஆவது நினைவு
தினம்

நடேசன் 1990 இற்குப் பின்னர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளராகவே செயற்பட்டுவந்தார். வடக்கு கிழக்கு இணைந்த தாயகமாகவே தொடர்ந்திருக்கவேண்டும். அப்போதுதான் மலருகின்ற தமிழீழம் ஒரு முழுமையான தேசமாக இருக்குமென்பதே அவரது யாதார்த்தமான கருத்தாக இருந்தது. அதே சமயம் கூட்டாட்சிக் கொள்கையையும் பலமாக ஆதரித்திருந்தார்.

ஊடகவியலாளரான ஜி.நடேசன் முழுநேரமாக ஊடகத்தொழிலை எடுத்துச் செயற்பட்ட தில்லை. தனது மூச்சுள்ளவரை விடுதலையுணர்வுடன் செயற்படுவதை அவர் நிறுத்தவில்லை.

கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் பிரதித் தலைவராகவும், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் பணியாற்றியிருந்தார். விடுதலையுணர்வுடன் செயல்படுகின்றவர்களை அரசுப் படைகளும் துணைக்குழுக்களும் அழிப்பதில் குறியாக இருந்தவேளையில், அந்தக்குறியில் நடேசனும் அகப்பட்டிருந்தார். நடேசனைப் படுகொலை செய்யும் தங்களது திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நாளாக மே மாதம் 31 ஆம் திகதியை நிர்ணயித்த கொலையாளிகள், நடேசனின் உயிரைக் காவுகொண்டனர். அந்த நேரமே மட்டக்களப்பின் ஊடகத்துறையும் மௌனமாகிவிட்டது.

மு.ஈழத்தமிழ்மணி

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்
## சுப்பிரமணியம் தர்மராஜா
(பெற்றா அண்ணை)

தோற்றம்
24.12.1952

மறைவு
04.06.2014

பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
எமக்கு வழிகாட்டியாய்
உற்றார்.உறவினர்,
நண்பர்களுக்கு
இனியவனாய் வாழ்ந்து
எமை விட்டுப் பிரிந்து
ஆண்டு மூன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும்
நிலைத்திருக்கிறீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்
ஸ்ரீரங்கம்,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தில் விருந்தோம்பல் 4

எஸ்.மல்லிகா

வந்தாரை வரவேற்று, அவர்தம் பசியாற்றும் தலையாய பணியைக் கொண்டிருந்தவர்கள் தமிழர்கள். இவர்கள், பிறர் புசிக்கும் அழகை மெச்சி அறமியற்றிய செம்மல்கள். இந்த விருந்தோம்பல் பண்பு, பக்தி இலக்கிய காலம் மற்றும் காப்பியகாலத்திலும் கோலோச்சியிருந்தமையை இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது.




**பக்தி இலக்கியத்தில் விருந்தோம்பல்**

சமண பௌத்த மதங்களால் பெண்களின் செல்வாக்குக் குன்றிய காலத்தில் பக்தி இலக்கியம் இல்லறத்தின் பெருமையைப் பறைசாற்றியது. இதன் மூலம் விருந்தோம்பல் இல்லற தர்மத்தின் முக்கிய கடமையாகப் போற்றப்பட்டது. சான்றாக, சிவனடியார்களுக்கு உணவு பரிமாறுவதைத் தனது தலையாய கடமையாகக் காரைக்கால் அம்மையார் கொண்டிருந்தமையைக் குறிப்பிடலாம்.

பெரியபுராணத்தில் சிவனடியார்களுக்கு விருந்து படைக்காமல் உண்ண மாட்டார் அப்பூதி அடிகள். பிள்ளை இறந்ததை மறைத்து அப்பருக்கு விருந்து படைப்பது, தன் துன்பத்தை விட விருந்தோம்புவது தலையாய கடமையாகக் கருதியமையைக் காட்டுகிறது. மேலும், சிறுத்தொண்ட நாயனார் சிவனுக்குப் பிள்ளைக் கறியைச் சமைத்ததாகவும் பெரியபுராணம் காட்டுகிறது. இதன் மூலம் இல்லற தர்மத்தில் விருந்தோம்பல் இறையுணர்வின் அங்கமாகவே காட்டப்படுகிறது.

வீட்டுக்கு வரும் சிவனடியார்களைச் சிவபெருமானாகவே நினைத்து விருந்து பரிமாறிய தகவல்களைப் பக்தி இலக்கியங்களில் காணமுடிகிறது.



**இதிகாசத்தில் விருந்தோம்பல்**

இதிகாச காலங்களில் பெண்கள் விருந்தினர்களுக்கு உணவளித்து உபசரிப்பதைப் பெரிய கடமையாகக் கொண்டிருந்தனர். சாதாரண குடிமக்கள் முதல் அரச குடும்பத்தவர் வரை இதில் அதிக நாட்டம் கொண்டு உழைத்தமையை ஒவ்வொரு காப்பியத்திலும் காண முடிகிறது.

கம்பராமாயணத்தில் விருந்தோம்பல் பண்பினை கம்பர் இவ்வாறு கூறியிருப்பார்.

"அருந்து மெல்லடகு ஆரிட அருந்து மென்று அழுங்கும்....
விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்"

என்று சீதை அசோகவனத்தில் இருக்கும் போது, "இராமன் தான் இல்லாமல் விருந்தினருக்குப் விருந்து படைக்க என்ன செய்வாரோ" என்று நினைத்து வருந்துவதாக விருந்தின் சிறப்பைக் கூறியிருப்பார். (கம்பராமாயணம் காட்சிப்படலம் 15). மற்றொரு காட்சியில் குகனின் விருந்தோம்பல் பண்பையும் குறிப்பிட்டிருப்பார்.

இராமன் வந்திருக்கிறான் என்ற செய்தியை அறிந்து அவருக்குக் கொடுக்கத் தேனும் மீனும் எடுத்துச் செல்கிறான் குகன். அழகு திகழும் இராமனைத் தன் கண்களால் கண்டு களிப்படைந்து, நெடுஞ்சாண் கிடையாகத் தண்டனிட்டு விழுந்து வணங்கினான். உடலினை வளைத்து வாயினைப் பொத்திக் கொண்டு பணிவுடன் நின்றான்.

கூவா முன்னம், இளையோன் குறுகி, 'நீ
ஆவான் யார்?' என, அன்பின் இறைஞ்சினான்;
"தேவா! நின் கழல் சேவிக்க வந்தனென்;
நாவாய் வேட்டுவன், நாய் அடியேன்" என்றான்.
(கங்கைப் படலம் 38:34)

இதிலிருந்து வள்ளுவர் கூறும் பணியுமாம் என்றும் பெருமை என்பதற்கு ஏற்பக் குகனின் பணிவு உணர்த்தப் படுகின்றது. குகன் இலக்குவனனையே இராமன் என்று நினைத்து உன் கழல் சேவிக்க வந்தேன் என்கிறான்.

உள்ளம் தூயவன்; தாயின் நல்லான்;
எற்று நீர்க் கங்கை நாவாய்க்கு இறை; குகன் ஒருவன்
என்றான்.
(க.இரா குகப் படலம் 12)

உண்ணுதற்குரிய பொருள்களை என்றும் எடுத்து வருதல் தாயின் தன்மை. அதுபோல இராமனுக்குக் கொடுக்கத் தேனும் மீனும் கொண்டு வந்த குகனிடம் தாயன்பைக் காண்கிறோம். அதைத் தான் கம்பர் "தாயின் நல்லான்" என்கிறார்.

இராமன் வனவாசம் செல்லவே அங்கு வந்திருக்கிறார் என்ற அவரின் நோக்கம் அறிந்த பின், குகனுக்கு இராமனைக் காட்டுக்குள் அனுப்பவே விருப்பமில்லை. அங்கேயே இருந்து விடும்படி மிகவும் கெஞ்சிப் பார்க்கிறான். தன் நாட்டின் வளத்தையும் தன் மக்களின் விருந்தோம்பல் குணத்தையும் எடுத்துச் சொல்கிறான். அதற்கு இராமன் அவன் மனம் நோகாதபடி, நியதிப்படி தான் வனவாசத்தை சமுதாயத்தில் கழிக்கக் கூடாது என்பதை அவனுக்கு உணர்த்தி, "நாங்கள் புண்ணிய நதிகளில் நீராடி, ஆங்காங்கு உள்ள புனிதமான முனிவரை வழிபாடு செய்து, வனவாசம் செய்ய வேண்டிய சில நாள்கள் முடிந்ததும் உன்னிடம் இனிதாக வந்து சேருவோம்" என்று கூறுகிறார்.

இதுமட்டுமன்றி, காட்டுக்குச் சென்ற இராமனை அன்புடன் வரவேற்ற பரத்துவாச முனிவர், இராமனுக்குத் தங்குமிடம் அளித்து விருந்தோம்பிய திறத்தினைக் கம்பர் பின்வரும் பாடலில் அழகாகக் கூறியுள்ளார்.

"புக்கு, உறைவிடம் நல்கி, பூசனை முறை
பேணி,
தக்கன கனி காயும் தந்து, உரைதரும் அன்பால்
தொக்க நல்முறை கூறி,
தூயவன் உயிர் போலும்
மக்களின் அருள் உற்றான்;
மைந்தரும் மகிழ்வு உற்றார்"

இதேபோன்று சவரியின் விருந்தோம்பல் பண்பினையும் கம்பன் மிக அழகாகக் கூறியுள்ளான். இதுமட்டுமன்றி, இராமனைத் தேடிப் பரதன் உள்ளிட்ட சேனைகள் சித்திரகூட மலையை அடைந்த சமயம் அவர்களை இன்முகத்துடன் வரவேற்ற பரத்துவாச முனிவர், அத்தனை படையினருக்கும், பரிவாரங்களுக்கும் உணவளித்த சிறப்பினை யும் கம்பன் பதிவாக்கியுள்ளான். இவ்வாறு கம்பராமாயணத்தில் விருந்தோம்பல்ப் பண்பு நிறைய இடங்களில் ஏற்றிக் கூறப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி, ஏனைய காப்பியங்களான சீவகசிந்தாமணி, வளையாபதி மற்றும் குண்டலகேசி உள்ளிட்ட காப்பியங்களிலும் சிறுகாப்பியங்களிலும் விருந்தோம்பல் பண்பு மிகச் சிறப்பாகப் போற்றப்பட்டிருப்பதைக் காணலாம்.

(தொடரும்)

> உண்ணுதற்குரிய பொருள்களை என்றும் எடுத்து வருதல் தாயின் தன்மை. அதுபோல இராமனுக்குக் கொடுக்கத் தேனும் மீனும் கொண்டு வந்த குகனிடம் தாயன்பைக் காண கிறோம். அதைத் தான் கம்பர் 'தாயின் நல்லான்' என்கிறார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வள்ளுவனோ உலகத்தார் அனைவரும் வாழ்வாங்கு வாழ வாரி வழங்கி இருக்கிறானே! அது எத்தகையது என்று எண்ணிப் பார்ப்போமானால் அவன் எத்தகைய பெரு வள்ளல் என்று உணர முடியும்.

# வள்ளுவன் என்னுமோர் பெருவள்ளல்

வாரி வழங்குகின்ற பெருமக்கள் வாழ்ந்த காலத்தில் தான் வள்ளுவனும் வாழ்ந்தான். மண்ணுலகும் விண்ணுலகும் வாழ்த்திநின்ற பெரு வள்ளல்கள் வற்றாது பெருளை வாரிவழங்கி, மக்கள் குறை தீர்த்து மங்காத புகழ் படைத்தனர். என்றெல்லாம் வரலாறு கூறுகின்றது. அவைகளைக் கற்றோர் இன்னும் நினைவு கூருகின்றனர். பொருளாக மட்டுமல்ல நாடு. நகரங்களைக் கூடப் பரிசளித்ததுண்டு. ஒரு புலவனின் பாட்டுக்காக தன் நாட்டையே பரிசளித்துவிட்டு காடேக முனைந்தான் இரும்பொறை. முல்லைக்குத்தேர் கொடுத்தான் பாரி. நெல்லிக் கனியை ஔவைக்கு ஈந்து தமிழைப் போற்றினான் அதியமான். இப்படியெல்லாம் பொருளைக் கொடுத்துப் புகழ் தேடியதுமல்லாமல் தன் உயிரையே தானமாகக் கொடுத்தான் கர்ணன்.

இவர்கள் அத்தனை பேரும் கொடுத்த கொடைகளின் தன்மை வெளிகள் யும் அழிந்து பல நூற்றாண்டுகள் ஆகின்றன.

**வாரி வழங்கிய வள்ளல்**

ஆனால்வள்ளுவனோ உலகத்தார் அனைவரும் வாழ்வாங்கு வாழ வாரி வழங்கி இருக்கிறானே! அது எத்தகையது என்று எண்ணிப் பார்ப்போமானால் அவன் எத்தகைய பெருவள்ளல் என்று உணர முடியும். அறம், பொருள் இன்பம், வீடு என்ற நான்கு நிலைகளிலும் முதன்மையானது அறம், அறத்தைப் பொறுத்த மட்டில் இல்லறம் துறவறம் என்னும் இரண்டுக்கும் நடுவில் தான் உலகமே இயங்குகிறது என்பதை உற்றுணர்ந்து பார்த்த வள்ளுவப் பெருந்தகை இல்லறத்தின் ஊடாகத்தான் துறவறமே ஆரம்பமாகின்றது என்பதனால் கடவுளுக்கு அடுத்ததாக இல்லறத்தை வைத்தான். அதனால்த் தான் இல்வாழ்க்கை என்று ஆரம்பித்த வள்ளுவன் "இல்வாழ்வான் என்பான் இயல்புடை மூவர்க்கும் நல்லாற்றின் நின்றதுணை" என்று தொடங்கி அந்த அறத்தில் வாழ்பவர்க்குத் தேவையான அனைத்தையும் வாரி வழங்கி இருக்கிறான். 'இயல்புடைய மூவர்க்கும்' என்பதன் பொருளை உற்று நோக்குமிடத்து மனித வாழ்வின் பரிணாம வளர்ச்சியில் (பருவ வளர்ச்சியில்) இயல்புடையதாக இருக்கும் பிரம்மச்சாரி. கிரகத்தன், சந்நியாசி ஆகிய மூவர்க்கும் என்று பரிமேழகர் பொருள் ... இத்தனை சிறப்புகளைய ... இல்லறத்தில் வாழ்பவன் ... லறத்தை முதன்மைப்படு... றுதற்குரியது.

இல்லறம் இனிதாக அமை... பதற்காக வாழ்க்கைத் து... கட்பேறு, அன்புடைமை ... கைத் தேவையான அத்... ளையும் வழங்கிய வள்... இல்லறவியலில் இறுதிய... 24 ஆவது அதிகாரத்தில் ... வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு என்றும் தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று என்று முடிந்திருப்பது நோக்குதற்குரியது.

**துறவறத்துக்குரிய வாழ்க்கை முறை**

அடுத்ததான துறவறத்துக்குரிய வாழ்க்கை முறையென்ன? என்பதை அந்த வாழ்க்கையின் பொருளை வழங்கவந்த வள்ளுவன் அருளுடை என்னும் அதிகாரத்தைத் தந்துள்ளான். அதன்வழி அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம் பூரியாரி கண்ணும் உள எண்ணும் வலியார் முன் தன்னை நினைக்கத்தான் தன்னின் மெலியார்மேல் செல்லுமிடத்து என்னும் குறட்பாக்கள் மூலம் துறவறத்துக்கு அருளுடைமை இன்றி யமையையாது என்பதை வலியுறுத்தி இருப்பது அவன் வழங்கிய கொடைளனில் ஒன்று. மேலும் ஒருபடி சென்று பார்ப்போமாக இருந்தால் துறவறத்துக்குத் தேவையான அருளுடைமை தொடக்கம் அவா அறுத்தல் எண்ணும் அதிகாரம் வரை துறவறத்துக்கு வேண்டியதை அள்ளித்தந்த வள்ளுவன் அவா என்ப. எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் தலா அந்தப் பிறப்பிணும் வித்து. என்று துறவறத்தில் இருப்போர்கள் அவாவை விட்டாலன்றி துறவறத்தில் பயனில்லை என்பதை மிகத் தெளிவாகச்சொல்லியிருக்கிறார். மேலும் தவறும் தவமுடையார்க்கு ஆகும். அவம் அதனை அஃதிலர் மேற்கொள்வது என்னும் குறட்பாவால் இன்று நாட்டில் உலவுகின்ற போலி வேடதாரிகளின் இழிநிலை பற்றி இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே எடுத்துரைத்த பெருமை வள்ளுவனையே சாரும்.

மேலும் அரசியல் பற்றிக் கூறவந்த வள்ளுவப் பெருந்தகை இரைமாட்சி என்னும் அதிகாரத்தில் தொடங்கி இடுக்கண் அழியாமை வளர அரசர்களுக்கு அரசனுக்கு வேண்டிய நெறிகளை 250 பா...ங்களால் விளக்கி இருப்பதுமோர் சிறப்பு. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா மானம் உடைய தரசு என்ற பாடலின் ... ம் ஒரு தலைவனுக்கு வள்ளுவன் செ... ன அறிவுரை வேறு எந்த நூலிலும் ... முடியாததொரு ... டை இயற்றலு... டலும் காத்தலும், காத்து வகுத்தலு... லதாசு என்று கூறிவைத்த வள்ளு... ாடையாளி செங்கோல் குடியோம்... ர்கும் உடையனாம் வேந்தர்க் ... ன்று கூறும் பொழுது கொடையே ... ளும் இருந்தால்தான் அது செங்... ாமை யாகும் என்று வலியுறுத்தியி... நோக்கற்குரியது. ஆக, வைய... ரெல் வாழ்வாங்கு வாழ வழ... ளை ...கிய வள்ளுவப் பெ... யை ...களுக்கெல்லாம் ... ாளல் என்று வாழ்த்துவது மானிட... லாம் முதற் கடமை எனக் கூறு... பரும் கிழ்ச்சி அடை... ன். வாழ்க... வம்.

# அழிந்து போகும் பண்பாட்டுக் கோலங்கள்

புலவர் வள்ளுவதாசன்

"ஒழுக்கம் விழுப்பந் தருதலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்பது வள்ளுவம். மனிதவாழ்க்கையில் ஒழுக்கம் உயிருக்கும் மேலானது என்பதை வள்ளுவப் பெருந்தகையே முதன்முதலில் உலகுக்கு எடுத்துரைத்தான் என்று சொன்னால் அது மிகையன்று. சங்ககாலத்தில் நிலவிய சமுகச் சீர்கேடுகளைச் சங்கமருவிய காலத்தில் தான் மக்கள் உணரக்கூடிய அளவுக்கு தெளிவுபடுத்தப்பட்டிருப்பது. அதுபற்றிய ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருப்பதும் கண்கூடும் இருந்தபோதிலும் இன்றையச் சமூகத்தவர்கள் வள்ளுவனுக்குச் சிலை எடுப்பதிலும் விழாக் கொண்டாடுவதிலும் காலத்தை வீணடிகிறார்களே தவிர வள்ளுவனின் கனவுகளை. அவன் வகுத்த வாழ்க்கை நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதில் அக்கறையுள்ளவர்களாகத் தெரியவில்லை.

கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைபவர்போல் தமிழர்களின் பண்பாடு, கலாசாரங்களைக் கைவிட்டு. மேல்நாட்டு மோகத்தாலும் தற்காலத்தின் கீழ்த்தரமான சினிமா மோகத்திலும் மூழ்கிக் கிடக்கின்றனர். இவர்கள் பின்னோக்கி நகர்கின்ற சமூகமாக அழிவையும் அதற்கான ஏதுக்களையும் வலிந்துவரவழைத்துக் கொண்டாடுகின்றனர் என்பதை சற்று சிந்தித்தால் புரிந்துகொள்ளமுடியும்.

அன்று சகலகலைகளிலும் தன்னிகர் அற்று விளங்கிய மாயன் இனத்தின் அழிவுக்குக் காரணமாயிருந்த செயற்பாடுகள் வஞ்சனைகள் போன்று இன்று தமிழினத்தின் அழிவுக்கு இவை பயன்படுத்தப்படுகிறது.

ஒரு இனத்தை. சமூகத்தை அழித்தொழிக்க வேண்டுமாயின் முதலில் அந்தச் சமூகத்தின் பண்பாடு, கலாசாரம் அழிக்கப்படுவதே காரறிவாளர்களின் செயற்பாடாக இருக்கும். அடுத்தபடியாக மொழியைச் சிதைத்துச் சீரழிப்பதாக இருக்கும். இன்யறைய நிலையில் தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளில் மிகத் தீவிரமாகவும், வஞ்சகமாகவும் நடந்தேறிக் கொண்டிருக்கும் தீமைகள், கொடுமைகள் வெளிப்படையானவை. இவற்றுக்கெல்லாம் தமிழர்களே துணைபோய்க் கொண்டிருப்பது வேதனைக்குரிய விடயம்.

கயமையில் உச்சநிலையாகிய பிறர்மனைபுகல் பற்றிக் கூறவந்த வள்ளுவன் விளித்தாரின் வேறல்லர் தொழிந்தாரில் தீமைபரிந்தொழுகுவார் என்று கூறி வைத்தான். பொய்யா மொழிக்கிணையாக அன்று முதல் இன்றுவரை தமிழர்களால் போற்றப்படுகின்ற நாலடியாரும் அதையே, காணிற் குடிப்பழியாம் கையுறின் கால்குறையும் ஆணின்மை செய்யுங்கால் அச்சம் ஆம்! நீள்நிரயத் துன்பம் பயக்குமால் துச்சாரி நீ கண்ட இன்பம் எனக்கு எனைதால் உறுமற்றவன் மனைவியோடு இருப்பதைக் கண்டால் பிறந்தகுடிக்கும் பழி உண்டாகும் கையும் களவுமாகப் பிடிபட்டால் அரசன் தண்டனையாகக் காலைவெட்டிவிடுவான் ஆண்மையின் பெருமைக்கே இழிவாகும். நெடு நரகத்தையும் துன்பத்தையும் அனுபவிக்க நேரிடுமே! அந்த இழி நடத்தை கொண்ட கேடியே! மற்றவன் மனைவியை விரும்பி நீ கண்ட இன்பந்தான் என்ன? என்று வினவுகின்றார். இத்தகைய ஒரு இழி செயலை இன்று பொழுது போக்காகச் செய்கிறார்கள் என்றால் இந்தச் சமூகம் எத்தகைய ஒரு கீழ் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறது? என்பதை இந்தச் சமூகத்தை வழி நடத்திக் கொண்டிருப்பவர்கள் யாரேனும் சிந்தித்துப் பார்த்ததுண்டா? "கையுறின் கால் குறையும்" என்ற வரியின் பொருளென்ன? மன்ன அறிந்தால் காலை வாங்கிவிடுவான். அன்றைய தமிழ் மன்னர்களின் நல்லாட்சியில் பிறன் மனை புகல் மாபெருங்குற்றமாகக் கருதப்பட்டது. இன்று என்ன நடந்து கொண்டிருக்கிறது? குற்றவாளியிடமிருந்து கையூட்டுப் பெற்றுக் கொண்டு யாரோ ஒருத்தனின் மனைவியை வேறொருவனுடன் சேர்த்துவைக்கும் கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் யார் காரணம்? நீதியையும் தர்மத்தையம் நிலைநாட்டவேண்டியவர்களின் வக்கிரபுத்தியால் இதுபோன்றவை நிறைவேறிக் கொண்டிருக்கிறன.

வள்ளுவனுக்குச் சிலை எடுப்பவர்களின் மரத்துப்போன சிந்தனையில் இது பற்றிய உண்மைநிலை பிறக்குமா? என்பதுதான் இன்றைய கேள்வி

"வான்முகில் வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க"

என்பதையெல்லாம் குறைவின்றிக் கேட்க முடிகிறது "கோன்முறை" என்பதற்கு எமது சமூகம் கண்டுகொண்ட அர்த்தம் குடிகேடிகளை வாழவைப்பது தானோ தெரியவில்லை. காலத்தால் அழியாத எமது பண்பாட்டுக் கோலங்கள் சிலர் வேடத்தால் அழிந்ததேயடி முத்தம்மா என்று கூறுவது பொருத்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கையைப் பேணுதல்...!

## உயிரினச்சமன்பாடுகள் இயல்பான சூழற்சியுள் தரும் ஆத்மார்த்தமான முடிவுகள்

செ. கோமகன்

அறிமுகமில்லாத ஊரிலே இருப்பவற்றையெல்லாம் தொலைத்துவிட்டு நிர்க்கதியாய் நிற்பவனைப்போல தொழிநுட்பச்சுடுகாட்டில் இயற்கையைத் தொலைத்துவிட்ட ஏதிலிகளாய் நின்று கொண்டிருக்கிறோம் நாம்.

மனிதன் தன்னைப் பெற்றவர்களுக்கும் வழிவழிவந்த மூதாதையர்களுக்கும் தருகின்ற மரியாதையில் ஒரு சிறு அளவையாவது தனக்குமுன்பே தோன்றிய இந்த உலகை சேதாரமின்றிப் பக்குவமாய் பக்குவப்படுத்தி நமக்கு விட்டுச் சென்றுள்ள உயிரினங்களுக்கும் இயற்கைக்கும் தரவேண்டும் என எப்போதாவது சிந்தித்திருக்கிறானா..? சிந்தித்ததுண்டா...? சிந்திக்கிறோமா...? தெரியவில்லை...!

புவி தோன்றியபோது நிலம், நீர், காற்று என்பன இருந்தன. பின் ஒரு செல் உயிரிலிருந்து பல செல் உயிரிகள் வரை தோன்றத் தொடங்கின. இதற்குப் பல லட்சம் ஆண்டுகளுக்குப் பின்னரே மனித இனத்தின் தோற்றம் நிகழ்ந்திருக்கிறது.

இயற்கையாகத் தோன்றிய புல், பூண்டு, செடி, கொடி, மரம், பூச்சிகள், பறவைகள், விலங்குகள் உள்ளிட்டவை மனிதனின் உதவியின்றியே உயிர் வாழக் கூடியவை. ஆனால் பிற உயிரினங்களையும் இயற்கை உற்பத்திகளையும் மட்டுமே சார்ந்திருக்கக் கூடிய மனிதனோ, உயிரினங்களை வேட்டையாடியும், இயற்கையை சூறையாடியும் தன்னுயிரை நிலைநிறுத்த முயல்கிறான். இதில் என்ன நியாயம் இருக்கிறது.

நகரங்களைப் பெருக்கி, காடுகளை அழித்து, வளிமண்டலத்தைக் கிழித்து, மாசுகளால் ஒழித்து, ஒளியைத் தொலைத்து இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையேயான இடைவெளியை குறைத்துக் கொண்டே செல்கிறோம். செல்வதால்த்தான் எப்போதாவது வரவேண்டிய ஆழிப்பேரலை, புயல், வெள்ளம், புவிவெப்பமயமாதல் போன்றன அடிக்கடி வந்து தமிழர்களாகிய எம்மை அரச பயங்கரவாதம் அழித்திட கங்கணங்கட்டிய கடந்தகாலங்களை ஞாபகமூட்டுகிறது. இன்னமும் கொடிய முகம் கொண்டு அச்சுறுத்துகின்றது.

### சிந்தனையற்ற அபிவிருத்தி நாமங்கள் தரும் அழிவின் சுருக்கம்

நகரப் பெருக்கத்தின் காரணமாகவும் அதிகரித்துவரும் நல்லிணக்க நாமம் சூடிய அபிவிருத்தியின் திணப்பான கட்டடக்காடுகளும் சுருங்கிப் போன குறுகிய வயல் நிலப்பரப்பில் அதிக விளைச்சல் வேண்டி இரசாயனங்களைக் கொட்டுவது என்பதும் ஒரு விதத்தில் இயற்கையை நமது கட்டுக்குள் கொண்டு வந்துவிட முடியும் என்பதான ஒரு மூடநம்பிக்கையின் தொனிப்புத்தான்.

தீராத வெறிப்புத்தான். யானைகள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறி குடியிருப்புகளாக்கப்பட்ட பகுதிகளில் நுழைந்து தாக்குவதை நாம் 'நாசம்' செய்கின்றன என்று கூறுகிறோம். நாம் செய்துவிட்ட பாதகங்களை, நாசங்கள் என்ற சூசகங்களை மறந்துவிட்டவர்களாய். இவைதவிர நீர்வழிப்பாதைகளை மறித்து கட்டடங்களைக் கட்டிவிட்டு பெருவெள்ளத்தில் ஊர் அழிந்தபின் 'பேரழிவு' என்று சொல்கிறோம். சொல்லித்திரிகிறோம்.

ஆக, உயிரினங்களிலேயே முதிர்ச்சி பெற்ற, ஆறறிவு படைத்த உன்னதமான இனமாக நம்மை நாமே தன்னிச்சையாக அறிவித்துக்கொண்டு செய்கின்ற இயற்கைச் சூறையாடலுக்கு வரன்முறைகள் இல்லாது போய்விட்டது. வரையறைகள் அற்றுப் போய்க்கொண்டிருக்கிறது. இயற்கையைப் பகைத்துக் கொள்வதற்கும் புறக்கணிப்பதற்கும் மனிதனின் பேராசையும் கொடிய குணங்களுமே காரணம் என்று சொல்லலாம். சொல்லப்படுகிறது. உண்மைதானே...! இயற்கை நமக்கு வழங்கிய எண்ணிலடங்கா கொடைகளை வெட்டியும் வெடிவைத்து தகர்த்தும் ஆழத்தோண்டியும் உறிஞ்சியும் கொள்ளையடிக்கிற மகா கொள்ளையர்களாக நாம் இருக்கிறோம்.

### ஒன்றித்து வாழப் பழக வேண்டும்

பல்லாயிரம் கோடி ஆண்டுகள் வழிவழியாய் இப்புவியில் வாழ்ந்துவந்த உயிரினங்களின் எண்ணிக்கையும் இயற்கைவளங்களும் குறைந்துவரும் அதேவேளையில் குடிநீர்த் தட்டுப்பாடும் இயற்கைப் பேரழிவுகளும் மனிதஇனத்திற்கு விடுக்கப்படும் எச்சரிக்கையாகவே எடுத்துக் கொள்ளவேண்டும். மனிதர்களின் வளம் காப்பதற்காக வரம்புமீறி செய்யப்படும் இயற்கைவள சுரண்டலால் 'தக்கன தப்பி வாழ்நிலை பெறும்' எனும் சித்தாந்தம்கூட எதிர்காலத்தில், எதிர்வரும் கணங்களில் கூடப் பிழையாகிப் போகலாம்.

பிற உயிரினங்கள் இன்றி மனிதன் மட்டும் இந்த உலகத்தில் வசதி வாய்ப்போடு கோலோச்சி விடலாம் என்று நினைப்பது ஏகாதிபத்திய மனநிலை. இந்த சிந்தனையோ முட்டாள்தனமானதும்கூட. தனிமனித சுதந்திரம் பற்றி பேசிக்கொண்டே உலகிற்கே பொதுவாக இருக்கும் இயற்கையின் சுதந்திரத்திற்கு தொடர்ந்தும் இடையூறு செய்து கொண்டு இருக்கிறோம்.

வனப்பாதுகாப்புக்கான சட்டம் மட்டும் இருந்தால் போதாது. மனிதனின் மனக்கட்டுபாடுக்கான சுயசட்டமும் ஒவ்வொரு மனிதரிடத்திலும் இருக்க வேண்டும். அரசின் கடமையும் தனிமனிதக் கடமையும் ஒருங்கிணைந்தால் தான் எந்தத் திட்டமும் வெற்றிகரமாக நடைமுறைக்கு வரும் என்பதைத் தோல்வியடைந்த பல திட்டங்கள் வாயிலாகவே புரிந்து கொள்ளலாம். புரிந்துகொள்ள வேண்டும். நகர்ப்புற விரிவாக்கத்திற்கும் கணக்கற்ற கட்டடங்களை கட்டுவதற்கும் அனுமதி அளித்துவிட்டு அதற்குத் தேவையான மணலை 'அள்ளாதே' என்று சொல்வதில் என்ன பலனிருக்கும், பலனிருக்கிறது மக்களே....?? ஊழல், கொலை, கொள்ளை இவற்றைத் தவிர.

கடலரிப்பைத் தடுப்பதற்காக கரையோரங்களில் பாறாங்கற்களைக் கொட்டினால், தடுக்கப்பட்ட அலைகளின் உத்வேகம், கற்கள் கொட்டப்படாத அருகிலிருக்கும் வேறு கரையோர கிராமத்தை பதம்பார்க்கும் என்பதை உணர மறுக்கிறோம். இயற்கையின் வலிமையை உணர்ந்து தெளியாமல் எம்பாட்டில் நடந்துகொள்கிறோம்.

### இயற்கையைப் பேணுவோம்

பிற உயிரினங்களைப் போல் மனிதனும் இயற்கை மற்றும் உயிரின சமன்பாட்டிற்கு உதவ வேண்டுமாயின் இயற்கையைப் பேணவேண்டும். இயற்கையாக பழுக்கும் வரை காத்திருக்கப் பொறுமையின்றி இரசாயனங்களை வைத்துக்கொண்டு மாம்பழங்களைப் பழுக்கவைத்து உடனே பணம் பார்க்க முயலும் அவசரக்காரர்களிடம் நுகர்வோர் எச்சரிக்கையாய் இருந்து தம் உடல் நலனைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதுபோன்ற செயற்கை உற்பத்திக்கு ஆதரவு அளிக்காமல் இருப்பதும் புத்திசாலித்தனம். புரிந்துகொள்ள வேண்டும்...!

இயற்கையின் சுழற்சியில் ஏதேனும் குளறுபடி ஏற்பட்டால் அது ஒட்டுமொத்த உயிரினங்களுக்கான உணவுச்சங்கிலியை பாதிக்கும். வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பம் குறித்து பெருமைப்பட்டுக் கொள்ளும் அதே வேளையில் அழிந்து வரும் உயிரினங்கள் குறித்தும் கவனமாகச் சிந்திக்க வேண்டும்...

தற்காலிகமாக வாழ்ந்து விட்டுப் போக வந்திருக்கும் மனிதனுக்கு இந்தப் பூமியை சிதைத்துப் பார்க்க எந்த உரிமையும் கிடையாது. இந்த பூமி மனிதனுக்கு மட்டும் உடையது அல்ல உயிரின்பன்மயத்திற்கும், பல்வகைமைத்துவத்திற்கும் உதவும் எல்லா உயிரினங்களுக்குமானது.

ஆக, வீட்டில் சமையலுக்காக வைத்திருந்த அரிசியை பறவைகளுக்கு அள்ளிவீசி ஆனந்தம் கண்டவன் நம் பாரதி. நாமோ நம்மை அண்டியபடி மிச்சம் மீதிகளைத் தின்று உயிர் வாழும் பூனைகளை வெறுப்போடு பார்க்கிறோம். அவற்றை அடித்துத் துரத்திவிட்டு வெள்ளை நிறத்தொரு பூனை எங்கள் வீட்டில் வளருது கண்டீர் என போலியாகப் பாடுகிறோம். பாடித்திரிகிறோம்....!

மீண்டும் ஞாபகமிருக்கட்டும் மக்காள்...! பூமி நமக்கு அளித்திருக்கும் வாழ்வதற்கான இந்த அரிய வரத்தை எந்தத் தவத்தாலும் திரும்பப் பெறமுடியாது. சிந்தித்தும் புரிந்தும் நல் மனிதர்களாய் நடந்துகொள்வோம். எம் பயணங்களை சீர்மைத்துவங்களோடு சீர்ப்படுத்தி மகிழ்ந்திருப்போம். வாழ்ந்திருப்போம்......!

**தேவை**

விற்பனையாளர், சிட்டை எழுதுனர்
வானில் சென்று பொருள்கள்
விநியோகிப்பவர் தேவை.
ஆண், பெண்.
பேப்பர்கவுஸ்
இல.300 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**மணமகள்கள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பங்களைச் சேர்ந்த 1978 டாக்டர், 1979 அரசதொழில், 1987 என்ஜினியர், சிங்கப்பூர் சூரி, செவ்.குற்றமற்ற, குற்றமுள்ள குறிப்புக்கள், சகல விவரங்களையும் இலகுவாகப் பார்க்க குறிப்புடன் Vibar இற்கு அனுப்பி வைக்கவும்.
Vibar :- 076 702 1622
T.P :- 077 211 6772

**மணப்பெண் தேவை**

கௌரவ கிறீஸ்தவ 38+ வயதுடைய சர்வதேச தரத்தில் மென்பொருள் தயாரிப்பாளரான மணமகனுக்கு 4 தொடக்கம் 12 வயது வித்தியாசத்திலான Dr, Software Eng BSc அல்லது இதற்கு ஈடான தகைமை கொண்ட மணப்பெண் தேவை.
மேலதிக விபரம்
www.seaaav.com/GRACE/
தொடர்பு: 077 242 0337

**அவசரம் தேவை**

O குருதி வகையைக் கொண்ட சிறுநீரகம் அவசரமாக தேவைப்படுகின்றது. உதவ விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும். (AJA/CS/447) (22.17)
077 856 3504, 077 451 4261

**பெயர்மாற்றம்**

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைச் சேர்ந்த **இரத்தினேஸ்வரன் புனிதமலர்** ஆகிய நான் இன்றிலிருந்து (31.05.2017) எனது பெயரை **இரத்தினேஸ்வரன் புனிதகலா** என்று மாற்றம் செய்வதோடு, சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.
- இரத்தினேஸ்வரன் புனிதகலா-

**வெற்றுக்காணிகள், தென்னந்தோப்பு விற்பனைக்கு**

ஏ9 வீதி, கைதடி, நுணாவில் பகுதியில் படைப்பு வளவு எனப்படும் 25 பரப்புக் காணியும், இக்காணியின் எதிர்ப்புறமாக 9 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. இக் காணி சக்கடத்தூர்வளவு என அழைக்கப் படும். மேலும் நுணாவில் - கல்வயல் வீதியிலுள்ள (காப்பற்வீதி) கற்குளி எனுமிடத்தில் நவசர் தோட்டம் எனப்படும் 52 பரப்புத் தென்னந் தோப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தென்னந்தோப்பு யுத்தத்தால் அழிந்து போயுள்ளது. 2 கிணறு, மா, பலா மரங்கள் உண்டு.
077 747 1050, 077 960 3001, 077 356 5345

**பெயர்மாற்றம்**

8ஆம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவை வசிப்பிடமாகக் கொண்ட **ஞானப்பிரகாசம் பக்திமலர் பேபி** ஆகிய எனது பெயரை இன்றுமுதல் **ஞானப்பிரகாசம் பற்றிமா** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் எனவும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.
-ஞானப்பிரகாசம் பற்றிமா -

**விஷேட பல் வைத்திய சேவை**

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

**CANADA , USA study & work visa**

Minimum Qualification O/L
- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

Swiss, France
செல்ல வழிகாட்டல்

Royal Visa Consultants & Education Service
No.128, Jampettah Street, Colombo - 13
Email: rvces_consultants@yahoo.com
Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துக்...

செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போது நாவற்குழியில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் தெரிவுமுறை மற்றும் நாவற்குழி விகாரை தொடர்பில் பேசப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதேச சபையின் முன் அனுமதி பெறப்படாமல் மட்டுவிலில் அமைக்கப்பட்ட பிள்ளையார் சிலை மற்றும் கொடிகாமம் பகுதியில் அனுமதி பெற்றதுக்கு மேலதிகமாக அமைக்கப்பட்ட கட்டடம் ஆகியவற்றுக்கு எதிராக சாவகச்சேரி பிரதேச சபை வழக்கு தாக்கல் செய்தது. எனினும் அதே சபையிடம் அனுமதி பெறப்படாமல் நாவற்குழியில் விகாரை அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டு பணிகள் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில் சாவகச்சேரி பிரதேச சபை அனுமதி பெறாத சட்டவிரோத கட்டடம் எனத் தெரிவித்து விகாரை அமைக்கும் பணியை நிறுத்துமாறு தடையுத்தரவை மட்டும் பிறப்பித்துள்ளது. விகாரைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை. பிள்ளையார் கோயிலுக்கு ஒரு சட்டம் விகாரைக்கு ஒரு சட்டமா? என்றார்.

"சாவகச்சேரி பிரதேச சபை அதிகாரிகள் உடனடியாக சட்டவிரோதமாக இடம்பெற்ற கட்டட வேலைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான மாவை சேனாதிராஜா அறிவுறுத்தினார். (வ-8)

## மூதூர்...

விசாரணைகளை முன்னெடுக்குமாறு திருமலை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெரியவெளி மல்லிகைத்தீவில் அறநெறி வகுப்புக்குச் சென்ற பாடசாலை மாணவிகள் மூன்று பேர் பாலியல் வதை செய்யப்பட்டார்கள். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளை விரைவில் கண்டறிந்து கைது செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தவேண்டும். இவ்வாறான சிறுமிகள் மீதான வன்புணர்வுச் சம்பவங்கள் கண்டிக்கத்தக்க விடயமாகும். இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறான சம்பவங்களின் குற்றவாளிகள் மீதான சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும். அத்துடன் குற்றம் நிரூபிக் கப்படும் குற்றவாளி மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார்.

"ஏற்கனவே சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். சிறப்பு குழுவொன்றை நியமித்து சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படும். இந்தக் குழுவின் மூலம் கிடைக்கப் பெற்றுள்ள சாட்சிகள் மற்றும் வாக்குமூலங்களுக்கு மேலதிகமான விசாரணைகள் முன்னெடுக்கப்படும்" என மாவட்ட பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (த-10-40)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
08 . 09 . 1945

மறைவு
31 . 05 . 2014

### திருமதி றெஜினா நீக்கிலாஸ்பிள்ளை

அம்மா என்ற மூன்றெழுத்துக்கு அர்த்தம் நீ
அழகு என்ற மூன்றெழுத்துக்கு வடிவம் நீ
அன்பு என்ற மூன்றெழுத்துக்கு அடித்தளம் நீ
பண்பு என்ற மூன்றெழுத்துக்கு மகுடம் நீ
பக்தி என்ற மூன்றெழுத்தில் வாழ்ந்தவள் நீ
உன் பண்புகளைச் சொல்ல வார்த்தைகளே போதாதம்மா
நீ எம்மை விட்டுப் பிரிந்து மூன்றாண்டுகள் சென்றதே
எத்தனை ஜென்மங்கள் போனாலும் உன் நினைவுகள்
எம்மை விட்டு மாறாதம்மா
உன் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

கணவர், சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### சரோஜினிதேவி (கிளி) செல்வரத்தினம்


ஓராண்டு கடந்தாலும்
உமது ஆடம்பரமில்லாத
அன்பான பேச்சும் செயல்களும்
இன்னமும் எங்கள்
எல்லோரினதும் மனங்களிலும்
அகலாது நிற்கின்றதே!
நீங்கள் இல்லாத எங்கள்
இல்லங்கள் வெறிச் சோடிக் கிடக்கின்றது
எங்கள் எண்ணங்கள் எதுவும்
இயங்காது நின்று விட்டது!
சொந்த பந்தங்களின் உணர்வுகள்
உறைந்து விட்டது
உங்களது நெறிமுறை தவறாத
வாழ்வின் பயனாக நிச்சயம்
உமது ஆத்மா இறைபதம் அடைந்திட
நாங்கள் தினமும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னை மடியில்
15.10.1945

ஆண்டவன் அடியில்
10.06.2016

குடும்பத்தினர்
31, கொண்டலடி லேன், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## மரணஅறிவித்தல்



### கந்தையா அப்புக்குட்டி (தலைவர்)
(சமாதான நீதிவான்)

இமையாணன் அறிவாலயம் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட க.அப்புக்குட்டி 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் இமையாணன் கிராமத்தின் முன்னோடியும் அகில இலங்கை கரப்பந்தாட்டச் சிறந்த வீரனும் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகரும், இமையாணன் அறிவாலயம் சனசமூக நிலையத்தின் முன்னாள் தலைவரும், காப்பாளரும் உடுப்பிட்டி ப.நோ.கூ.ச முன்னாள் தலைவரும், உடுப்பிட்டி கிராமசபை உறுப்பினரும் கிராமமுன்னேற்றச் சங்க ஆலோசகரும், இமையாணன் அ.த.க பாடசாலை நிறுவுனர்களில் ஒருவரும், கலைமகள் சனசமூக நிலையத்தின் நிறுவுனர்களில் ஒருவரும், அநீதி ஒழிப்பு ஒன்றியத் தலைவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் மதியம் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

அறிவாலயம்
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## அமரர் அதிபர் கந்தையா அருணாச்சலம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி

உயர்திரு கந்தையா அருணாச்சலம்
அவர்கள் 28.09.1929 இல் சைவசமயக் குடும்பத்தில் தோன்றி
சமயபக்தியிலும், கல்வியிலும், பொதுச்சேவையிலும் சிறந்து விளங்கி
சித்தர்கள் வாழ்ந்த சித்தன்கேணியில் வாழ்ந்து பல பட்டங்களைப் பெற்ற ஐயா.
ஆரம்பத்தில் அம்பலவாணர் சுவாமிகளால் நிறுவப்பட்ட வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில்
ஆசிரியராக கடமையாற்றி பாடசாலை வளர்ச்சிக்காக அதிபர் திரு.சிவகுருநாதபிள்ளையுடன் சேர்ந்து
பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர் ஐயா. (சிரிப்பு, அன்பு, பண்பு) என்னும் மூன்று பூக்களையும்
தூவி மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்களை கவர்ந்த வீரர் ஐயா பாடசாலையில் பிள்ளைகள்
எல்லோரையும் இணைத்து நல்வழிப்படுத்த வேண்டும் என்பதற்காக சாரணியத்தை தொடங்கி
சாரணர் ஆசிரியராக இருந்து பிள்ளைகளுக்குப் பல பயிற்சிகளைக் கொடுத்து அவர்களை வாழ
வைத்ததை மறவோம். அவரது திறமையை அறிந்த பட்டிருப்பு மக்களும் அந்த ஊர் பாராளுமன்ற
உறுப்பினர் திரு.இராசமாணிக்கம் அவர்களும் களுவாஞ்சிக்குடி மகாவித்தியாலயத்துக்கு
அதிபராக்கினார்கள். அவர்கள் அந்த மகாவித்தியாலயத்தையும் முன்னேற்றிவிட்டு மீண்டும்
வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரிக்கு அதிபராக மாற்றமாகி வந்தார். ஐயா அவர்கள் செய்யும்
தொழிலே தெய்வமாகவும் அத்தொழிலை பாடசாலைக்கும் பாடசாலை சமூகத்திற்கும்
தொண்டு செய்யும் கருவியாகவும் பாவித்தார்கள் அந்த நேரத்தில்
விக்டோறியாக் கல்லூரிக்கு மாற்றம் கிடைத்து அங்கே சென்று வடமாகாண அதிபர்கள்
சங்கத்தலைவராகி எல்லாப் பாடசாலைகளுக்கும் ஆலோசனை வழங்கினார்.
அப்படி இருக்கும் பொழுதே ஓய்வு பெற்றும் அவரது குணமும் செயல்திறனையும் அறிந்து
எமது கிராமத்திலும் வேறு இடங்களிலும் இ[illegible]வரை பொது சங்கங்களிலும் கழகங்களிலும்
தலைமைப் பதவியில் [illegible]சேர்த்துக்கொண்டார்கள்.
" மரங்கள் பழத்தை [illegible]ணவாக்குவதில்லை
கடல் முத்தை [illegible]அணிவதில்லை
சந்தனக்காடு சந்தன[illegible]த்தை அணிவதில்லை "
அவற்றைப் போல இவர் எந்தப் பதவியை எ[illegible]த்தாலும் தனது நன்மைக்காக எடுப்பதில்லை
அந்தப்பதவிகள் சாதாரண மக்களுக்கு நன்ம[illegible] அளிப்பதாகவே இருந்தது. அரிமாக்கழகத்தில்
இணைந்து பாடசாலையை விட்டு வெளியேறி[illegible] மாணவர்களுக்கு வட்டு தொண்டயம் என்னும்
பயிற்சியகத்தை ஆரம்பித்து நல்ல பயிற்சிகளை[illegible] கொடுத்து பல மாணவர்களை நல்ல நிலையில்
கொண்டு வந்து விட்டதுமன்றி எங்கள் கோயில்[illegible]த்திலும் அரிமா கழகத்தினரைக் கொண்டு நல்ல
கட்டடமும் கட்டித்தந்து உள்ளார். எங்கள் கோ[illegible] தலைவராக இருந்து கோயில்களில் நடக்கும்
பூஜைகள், திருவிழாக்கள், கும்பாபிஷேகங்கள் [illegible]ன்ற சமயச் சடங்குகளை திறம்பட நடத்தி மற்ற
தொண்டர்களுக்கு வழிகாட்டியாக திகழ்ந்தார். [illegible]யாதிப காரணமாக சரீர நிலை தளரவும் நாட்டுப்
பிரச்சினை காரணமாகவும் தன்னுடைய[illegible]ள்ளைகளுடன் ஆஸ்திரேலியா நாட்டுக்குச்
சென்று பிள்ளையாரின் எண்ணத்[illegible]ன் இருந்து கடைசிவரை தன்னால்
இயன்ற உதவிகளை எங்கள் சபைச[illegible] செய்து 01.05.2017 இல் இறைவனடி
சேர்ந்து விட்டார். அவர்களின் பாட்ட[illegible]ரின் ஊஞ்சல் பாட்டு வருடம் தோறும்
துறட்டிப்பனை முத்துமாரி அ[illegible]வின் கோயிலில் ஒலிக்கின்றது.
*வையத்துள் வாழ்வாங்கு வா[illegible] வானுறையும் தெய்வத்துள்*
சேர்ந்து விட்ட அன்னாரது ஆத்மா சாந்[illegible]டைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி [illegible] சாந்தி

செயலாளர்
க.ஸ்கந்தராசா

பரிபாலனசபை,
ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் கோயில், சித்தன்கேணி.

தலைவர்
பூ.சிவகுமாரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டும் 33 பேர் கடமைகளைப் பொறுப்பேற்கப் பின்னடிப்பு

## வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தகவல்

ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட 33 பட்டதாரிகள் தமது கடமைகளை இதுவரையில் பொறுப்பேற்கவில்லை என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாணத்தில் நிலவிய ஆசிரிய வெற்றிடங்களுக்கு, பட்டதாரிகளை நியமிப்பதற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.
பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, தகுதிகாண் பரீட்சை நடத்தப்பட்டது. அதில் சித்தியடைந்தவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டனர். 549 பேருக்கு நியமனம் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.
கடந்த மார்ச் மாதம் இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டது. 549 பட்டதாரிகளில், 516 பேர் மட்டுமே இதுவரை கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். 33 பேர் இதுவரையில் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை.
தமக்கான நியமனப் பாடசாலைகள் தூரத்தில் இருப்பதைக் காரணம் காட்டியே அவர்களில் பெரும்பாலானவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை என்று கூறப்படு கின்றது.
இவர்களுக்கான அரச நியமன சந்தர்ப்பம் இதன்மூலம் இழக்கப்படுகின்றது என்றும், கடமைகளைப் பொறுப்பேற்காத பட்டதாரிகளின் வெற்றிடத்துக்கு புதியவர்களை இணைத்துக் கொள்ளப்படுவர் என்று தெரியவருகின்றது. (ந-5,101)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்


### மதிலை...

ளால் உயிர் அச்சுறுத்தல்விடுக்கப்படுவதாக மல்லாகம் நீதிமன்றில் நேற்று முறையிடப்பட்டது.
"மதில் உடைத்த அனைவரையும் சிறப்பு அதிரடிப்படையினரின் உதவியுடன் கைது செய்து மன்றில் முற்படுத்த வேண்டும். சிறப்பு அதிரடிப் படையினரை நிறுத்தி சிறுப்பிட்டி மயானம் அமைந்துள்ள பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்" என்று யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்று கட்டளையிட்டது.
சிறுப்பிட்டி மயான விவகாரம் தொடர்பான வழக்கை சட்டத்தரணி வி.மணிவண்ணன் நீதிமன்றில் நேற்று நகர்தல் பத்திரம் சமர்ப்பித்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கோரினார். நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது.
"மயானம் அங்கு தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்று கூறுபவர்களுக்கு மயானத்தை அகற்றுமாறு கோருபவர்களால் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. இரவில் தடிகள் வாள்களுடன் சிலரின் நடமாட்டம் காணப்படுகிறது. அத்தகைய அச்சுறுத்தல் தொடர்பில் பொலிஸாருக்கோ அவசர தொலைபேசி இலக்கத்துக்கோ அறிவித்தும் பயன்கிடைக்கவில்லை.
'தற்போது உங்களுக்குப் பாதுகாப்புத் தரமுடியாது. உங்கள் பாதுகாப்பை நீங்களே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நாங்கள் அங்கு வந்தால் எம்மீதும் தாக்குதல் நடத்தப்படுகிறது' எனப் பொலிஸார் கூறுகின்றனர்" என்று பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வி.மணிவண்ணன் நீதிவான் மன்றில் விண்ணப்பம் செய்யதார்.
விண்ணப்பத்தைப் பரிசீலித்த நீதிவான், "மன்றின் முன்னைய கட்டளைக்கு அமைவாக சுற்று மதில் அமைக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். அமைக்கப்பட்ட மதிலை உடைத்த அத்தனை பேரும் கைது செய்யப்பட வேண்டும். சிறுப்பிட்டிப் பகுதியில் சிறப்பு அதிரடிப்படையினரைப் பாதுகாப்பில் ஈடுபடுத்த வேண்டும் ஆகிய ஒழுங்குகளை யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிறைவேற்ற வேண்டும்" என்று பணித்தார்.
இந்த வழக்கு எதிர்வரும் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதுதவிர, மதில் உடைத்த குற்றச்சாட்டில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட 4 பேரையும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் மன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டது.
கிந்துப்பிட்டி மயானத்துக்குச் சுற்று மதில் அமைக்க வேண்டும் என்று மல்லாகம் நீதிமன்றால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. சுற்று மதில் அமைக்கப்பட்டுவரும் நிலையிலேயே அது உடைக்கப்பட்டது. அதன்பின்னர் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றனர். 4 பேரைக் கைது செய்தனர். அதனால் பொலிஸாருக்கும் மயானத்தை அகற்ற வேண்டும் என்று கோரும் சிலருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டு வான் நோக்கிச் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றிருந்தது.
கிந்துப்பிட்டி மயானத்தில் நின்ற மரங்கள் சில தறிக்கப்பட்டன. அந்த மயானத்தின் அபிவிருத்திச் சபையைச் சேர்ந்தோரின் வாழைத்தோட்டங்களில் நின்றிருந்த சுமார் 800இற்கும் மேற்பட்ட வாழைகள் சிலரால் வெட்டிச் சரிக்கப்பட்டன. மயான விவகாரம் தொடர்பில் பிரதேச செயலர், பொலிஸ் உயர் அதிகாரிகள் கொண்ட கலந்துரையாடலும் இடம்பெற்றிருந்தது. (வ-4)

### புதுக்குடியிருப்பு...

தெரிவித்தனர்.
விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்தார். அவர் உடனடியாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார்.
உயிரிழந்தவரின் உடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (வ - 7)

## மரண அறிவித்தல்



தோற்றம்
28 – 10 – 1938

மறைவு
30 – 05 – 2017

### குணரட்ணம் ராஜமோகன்
(Sonny)

வட்டுக்கோட்டையையும், உடுவிலையும் சேர்ந்த கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.குணரட்ணம் ராஜமோகன் (Sonny) 30.05.2017 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி குணரட்ணம், குட்டிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், அருக்ஷன் (கேமன் தீவுகள்) அவர்களின் அன்பு தந்தையாரும், சதுரிகா அவர்களின் அன்பு மாமனாரும், ஏரன், நோவா,அமாயா ஆகியோரின் அன்பு பேரனும், மகிழ்தேவி (கனடா) அவர்களின் தம்பியும், காலஞ்சென்ற ஜெயசிங்கம், பாலசிங்கம், புஷ்பவனம், தர்மராஜா, சண்முகநாதன் ஆகியோரின் அன்பு தம்பியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஏ.எப் ரேமன்ட்ஸ் இல் 31.05.2017 புதன்கிழமை மற்றும் 01.06.2017 வியாழக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் சைவ சமயக்கிரியைகள் நடைபெற்று மாலை 4.00 மணியளவில் பொரளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **நாகராசா திலகன்**



மலர்வு
26.12.1978

உதிர்வு
31.05.2016

குடும்பத்தின் குல விளக்கே அன்பின் இருப்பிடமாய்
நற்பண்புகளுடன் எம்மை வழிநடத்தி
எமக்காகவே வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
எம்முயிர் உள்ள ஒவ்வொரு கணமும் உம் நினைவுடனும்
வழிகாட்டலுடனும் வாழ்வோம்.

**8ஆம் வட்டாரம்,**
**மந்துவில், புதுக்குடியிருப்பு.**

**குடும்பத்தினர்.**

(AXX-1483)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு அருளம்பலம்
(அருணாசலம்)



பூவுலகில் - 20.10.1928
விண்ணுலகில் - 26.05.2017

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் தற்போது இங்கிலாந்தில் வசித்து வந்தவருமான கார்த்திகேசு அருளம்பலம் (அருணாசலம்) 26.05.2017 வெள்ளிக்கிழமை இங்கிலாந்தில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் சிறுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு ஆச்சிமுத்து தம்பதியரின் பாசமிகு புதல்வரும் ஊரெழுவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முத்தையா கனகம்மா தம்பதியினரின் அருமை மருமகனும் ஊரெழு ஞானபூபதியின் அன்புக் கணவரும் பிரபாகரன் (Swiss), அனுஷா(UK), தனுஷா(UK), சுதாகரன்(UK), ஜீவாகரன்(UK).ரஜீகரன் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தை யும் சிறீராஜன், சுந்தரேசன், விஜிலதா, துஷாந்தா, லதா ஆகியோரின் அன்புள்ள மாமனும் பிரியா, திவ்வியா, திவ்வியாங்கா, நிர்யா, கர்ஜன், காருஜன், ஷோபிகா, சிந்துஜா, சந்தோஷ், அனுஜன், அருஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான இராஜரத்தினம், மாசிலா மணி, பவளமணி மற்றும் செல்வரத்தினம்(கனடா), அரசரத்தி னம் (அச்செழு), சரஸ்வதி(சிறுப்பிட்டி), திலகவதி(ராசு சிறுப்பிட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.06.2017 ஞாயிற்றுக்கிழமை இங்கிலாந்தின் நோர்விச் நகரத்தில் இந்து முறைப்படி நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**110, Middletons Ln,**
**Norwich NR6 5SR, UK.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**பிரபாகரன் (சுவிற்சர்லாந்து) - [illegible]**
**சுதாகரன் (இங்கிலாந்து) - 004407962551287**
**ஜீவாகரன் (இங்கிலாந்து) - [illegible]**
**ரஜீகரன் (இங்கிலாந்து) - 004407904020408**
**திலகவதி (சிறுப்பிட்டி இலங்கை) - 0212054841**

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் சற்குணசிங்கம்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Frank Furt ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சற்குணசிங்கம் 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாதேவியின் பாசமிகு கணவரும், காயத்திரி, சந்தோஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமாரின் அன்பு மாமனாரும், கமலாதேவி (நெதர்லாந்து), பாலசிங்கம் (கனடா), புஸ்பராணி, செல்வராணி (இலங்கை), ஜெயசிங்கம் (லண்டன்), ஶ்ரீகாந்தன், லீலாவதி, தனலட்சுமி (இலங்கை), சுதாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிவபாதம், அம்பிகாதேவி (இலங்கை), சிவனேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற சறோஜினிதேவி, மல்லிகாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாரு, சயென் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2017) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெற்று தகனக்கிரியைக்காக Frank Furt Haupt Friedhof, Eckenheimer LandstraBe 194, 60320 Frank Furtammain Germany இற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஞானவைரவர் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரசிகர்களுக்கு சிம்புவின் வேண்டுகோள்

சிம்பு தற்போது ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் `அன்பானவன் அசராதவன் அடங்காதவன்' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு பெரும்பாலும் முடிந்துவிட்ட நிலையில், ஒரு பாடல் மட்டும் படமாக்கப்படவேண்டி இருக்கிறது. அஸ்வின் தாத்தா, மதுர மைக்கேல் என முதன்முறையாக 4 பாத்திரங்களில் நடித்து வரும் சிம்புவுக்கு இணையாக, ஸ்ரேயா சரண், தமன்னா, சானா கான் உள்ளிட்ட 3 பேர் நடிக்கின்றனர். இரண்டு பாகங்களாக வெளிவர இருக்கும் இப்படத்தின் முதல் பாகம் ரம்ஜானை முன்னிட்டு வருகிற ஜுன் 23இல் வெளியாக இருக்கிறது. இரண்டாவது பாகம் கிறிஸ்துமஸ் விடுமுறையில் வெளியாகும்.
அதற்கு முன்னதாக படத்தின் முன்னோட்டத்தை அடுத்த மாதத் தொடக்கத்தில் வெளியிட படக்குழு முடிவு செய்துள்ளது. போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், சிம்பு தற்போது டப்பிங் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். யுவன் ஷங்கர் ராஜா இசையில் பாடல்கள் விரைவில் வெளியாக இருக்கிறது. சிம்புவின் அறிமுகப் பாடலை கவிஞர் வைரமுத்து எழுதியிருக்கிறார். இந்நிலையில் சமூக வலைதளங்களில் அவ்வப்போது தனது கருத்துக்களைத் தெரிவித்து வரும் சிம்பு, தனது ரசிகர்களுக்கு அவரது கீச்சகப் பக்கத்தில் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அது என்னவென்றால், ``எதிர்மறைக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காதீர்கள், மாறாக நல்ல கருத்துக்களைப் பதிவிடுங்கள், பகிருங்கள். அன்பை வெளிப்படுத்துங்கள், கடவுள் ஆசிர்வதிப்பார்" என்று தெரிவித்திருக்கிறார்.






## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | | 1 | | | |
| | 1 | 7 | | 6 | | 3 | 5 | |
| 6 | | | | | | | | 9 |
| | | 8 | 3 | | 6 | 2 | | |
| | | | 2 | | 5 | | | |
| | | 3 | 4 | | 9 | 6 | | |
| 3 | | | | | | | | 7 |
| | 4 | 5 | | 9 | | 8 | 2 | |
| | | | 1 | | 4 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 3 | 4 | 2 | 6 | 1 | 7 | 8 |
| 2 | 4 | 1 | 3 | 8 | 7 | 6 | 9 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 1 | 5 | 4 | 2 | 3 |
| 1 | 3 | 7 | 6 | 4 | 8 | 9 | 5 | 2 |
| 4 | 2 | 6 | 5 | 3 | 9 | 8 | 1 | 7 |
| 8 | 5 | 9 | 1 | 7 | 2 | 3 | 4 | 6 |
| 3 | 8 | 5 | 7 | 9 | 4 | 2 | 6 | 1 |
| 7 | 1 | 4 | 2 | 6 | 3 | 5 | 8 | 9 |
| 9 | 6 | 2 | 8 | 5 | 1 | 7 | 3 | 4 |

சுடோக்கு
ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**சின்ன வயசில் வரிசையாய்த் தான் போய்க்கிட்டிருந்தோம்...**




**வளர்ந்த பிறகுதான் குறுக்கு வழி தேட ஆரம்பித்தோம்...!**

சிற்பன் @SKtwtz
பெற்றோர் செய்த பிழையில் முளைத்தது அனாதை இல்லம்.
பிள்ளைகள் செய்யும் பாவத்தில் வளர்ந்தது முதியோர் இல்லம்.
20 241 231

**``தினமும் புலம்புவீங்களே இன்னிக்கு எப்படி காபி ஸ்ட்ராங்கா இருந்துச்சா?"**
**``சூப்பர்டி செல்லம்! எப்படி இவ்ளோ ஸ்ட்ராங்க்?"**



**அதுவா, ஒரு ஸ்பூன் சிமெண்ட் போட்டேன்!**

**கப்பல் மாதிரி வீடு...! அவ்ளோ பெரிசா?**





**இல்ல மழை பெஞ்சா, சுத்தித் தண்ணி நிக்கும்...**

நீ குடைபிடித்து நடந்து செல்வதைப் பார்த்து
கண்ணீருடன் சொன்னது மழை ...
இன்றைக்குக் கூட குளிக்கமாட்டேன்றாளே?

WhatsApp

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?




**மேடம்:** எதிர்கால வளர்ச்சிக்கான பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். ஆதாயம் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.


**இடபம்:** பேச்சில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரம் மந்தகதியில் நடக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெற்றோர் உடல்நலனில் அக்கறை தேவை.


**மிதுனம்:** சவால்களைத் திறமையுடன் எதிர்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு அதி கரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை வந்துசேரும்.


**கடகம்:** மனஉறுதியுடன் செயல்பட்டு வருவீர்கள். தொழில், வியாபார விடயமாக வெளியூர் செல்ல நேரிடும். பணவரவு அதிகரிக்கும். உறவினர் இல்ல சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.


**சிங்கம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். உடல்நலனில் அக்கறை தேவை.


**கன்னி:** நண்பரின் செயல்பாட்டால் சிரமத்துக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.


**துலாம்:** உற்சாக மனப்பான்மை உண்டா[illegible]டன் நிறைவேற்றுவீர்கள். தொழிலில உறபத்தி, விறபனை, வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும்.


**விருச்சிகம்:** உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும்.


**தனுசு:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் தடைகளைச் சரி செய்வது அவசியம். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.


**மகரம்:** லட்சிய நோக்கில் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். லாபம் சீராக இருக்கும். பணியாளர்களுக்குப் பணி மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.


**கும்பம்:** நண்பரின் ஆலோசனை, வளர்ச்சிக்குத் துணை நிற்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். ஆதாயம் பன்மடங்கு உயரும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்துசேரும்.


**மீனம்:** சுயநலத்துடன் சிலர் நெருங்கிப் பழகலாம், கவனம் தேவை. தொழிலில், நிலுவைப்பணிகளை நிறைவேற்றுவது நல்லது. லாபம் சுமார். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணல்...

இவ்வாறு வலியுறுத்தி யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அவசர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாவட்டத்தில் முக்கிய பிரச்சனையாக மணல் உள்ளிட்ட கனியவளங்களைப் பெற்றுக் கொள்வதில் உள்ள பிரச்சினை களுக்கு உடனடியாகத் தீர்வு கிடைக்க வேண்டும் என்று பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டது.

"மக்கள் பாவனையில் இருந்த காடுகளை வனவளத் திணைக்கள அதிகாரிகள் தமக்குச் சொந்தமான காணிகள் எனத் தெரிவித்து அபகரித்து வைத்திருக்கின்றனர். அவர்கள் எமது வளங்களை அபகரித்து வைத்திருந்தால் வடக்கு மாகாணத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்வது? முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவில் கனியவளங்களைக் கொண்ட பிரதேசங்களை வனவள அதிகாரிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அதனை நாம் மீட்டெடுத்தாலே மாகாணத்தின் கனியவளங்கள் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வைக் காணலாம்" என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட் தெரிவித்தார்.

"யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளில் மணல் உள்ளிட்ட கனிய வளங்களைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. யாழ்ப்பாணம் நாகர்கோவில் பகுதியில் மட்டும் மணலை எடுப்பதால் மாவட்டத்தின் கனியவளங்கள் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அதற்கான மாற்றீட்டு யோசனைகளை நாம் ஆராயவேண்டும். இது தொடர்பில் கனியவளத் திணைக்களக அதிகாரிகள் ஏதாவது திட்டங்கள் வைத்துள்ளீர்களா?" என்று நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான மாவைசேனாதிராசா கேட்டுக்கொண்டார்.

"யாழ்ப்பாண மாவட்டத்தில் மழை வீழ்ச்சி குறைந்துள்ளதால் தற்போதைய சூழ்நிலையில் ஆற்று மணலை எடுப்பதில் சிக்கல்நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு மாற்றீடாக வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற குளங்களை தூவாருவதன் ஊடாக கணிசமான மணலைப் பெற்றுக்கொள்ள முடியும். எமது மாகாணத்தில் சில குளங்கள் அவ்வாறு தூர்வாரப்படாமல் காணப்படுகின்றன. சில குளங்களை ஆழமாக்க வேண்டிய தேவை உள்ளது.

குளங்களில் இருக்கின்ற மணல் மற்றும் சேறுகளை அள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. இவ்வாறான செயற்பாட்டுக்குச் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் உதவியுடன் மேற்கொள்ளுவோமாக இருந்தால் மாவட்டத்தில் கனியவளங்களில் இருக்கின்ற சில பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும்" என்று கனியவளங்கள் திணைக்கள அதிகாரி பதிலளித்தார்.

திணைக்கள அதிகாரியின் யோசனையை பரிசீலிப்பதுடன் மாவட்டத்தின் கனியவளங்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண உடனடி நடவடிக்கையைக் கொழும்பு அரசு எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி அவசர பிரேரணை ஒன்றை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நிறைவேற்றியது. அத்துடன், கொழும்பு அரசு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவுள்ள மணலில் நாமும் பங்கு கேட்டு வாங்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார். (வ-8)

## பிரபாகரனோ...

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத் தில் நேற்று மதியம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள், புளொட், ஈரோஸ், இந்திய அமைதிப் படை, இலங்கை இராணுவம் ஆகியன அந்தக் காலத்தில் இங்கே இருந்தன. இந்தப் பகுதியிலிருந்த பிள்ளைகள் காணாமற்போயுள்ளனர். இந்த வேலையை அனைவரும் செய்துள்ளனர்.

ஒரு பகுதியினரிடம் மட்டும் கேட்க முடியாது. காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையை எடுத்துப் பாருங்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் பிடித்துச் சென்றதாகச் சிலர் சொல்கின்றனர். இந்திய அமைதிப் படை கொண்டு சென்றதாகச் சொல்லியிருக்கின்றனர். சிலர் வேறு அமைப்புக்கள் தங்களது பிள்ளைகளைக் கொண்டு சென்றதாகக் கூறியிருக்கின்றனர். அதே நேரம் அரசு பிடித்துச் சென்றதாகவும் கூறியுள்ளனர்.

இராணுவத்தில் இருந்தவர்களும் காணாமற்போயுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இப்போது இல்லை. கிட்டு இல்லை. சூசை இல்லை. யாரிடம் போய்க் கேட்க முடியும். கேட்கவும் முடியாது. ஒன்றும் செய்யவும் முடியாது.

இந்த அரசு இளையோரைக் கொண்டுபோய் விட்டு பொய் சொல்லவில்லை.. உண்மைதான் சொல்ல முடியும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கம்தான் அரசுக்கு இருக்கின்றது. இதனால்தான் காணாமற்போனோருக்கான சான்றிதழ் கொடுக்கின்றார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு, தமது பிள்ளைகள் எங்காவது இருப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கும். ஆனால் எங்கே இருக்கின்றார்கள் என்று யாருக்கும் சொல்ல முடியாது என்றார். (த-5-106)

## ரணிலைச்...

வுக்குக் கொண்டு வந்தனர்.

காணாமற்போனோரைத் தேடும் உறவுகள் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு, ஏ9 தேசிய நெடுஞ்சாலையை இடைமறித்து துண்டித்து சுமார் 6 மணி நேரம் பேரெழுச்சியுடன் போராட்டம் நடத்தினர். உறவுகளின் ஓலமும், கண்ணீரும் காண்போரையும் கரைய வைக்கும் வகையில் அமைந்திருந்தது.

### நீதிமன்ற உத்தரவு

காணாமற்போனோரைத் தேடும் உறவுகள், கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர் போராட்டத்தை ஆரம்பித்து நேற்றுடன் 100 ஆவது நாள் முடிவடைந்தது.

100 நாள்களாகத் தமக்குப் பதில் கிடைக்கவில்லை என்பதால், நேற்றைய தினம் பெரும் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வடக்குகிழக்கு மாகாணங்களின் ஏனைய மாவட்டங்களில், காணாமற்போனோரைத் தேடும் உறவுகளும் அணி அணியாகத் திரண்டு கிளிநொச்சிக்கு நேற்றுக் காலை வருகை தந்தனர். கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றில் ஆள்கள் கூட்டத்தால் நிரம்பியது. அரசியல்வாதிகளும், அருட்தந்தையர்களும் அங்கு வந்து சேர்ந்தனர்.

காணாமற்போனோரைத் தேடும் உறவுகளின் போராட்டத்துக்குத் தடை உத்தரவு பெறும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டிருந்த நிலையில் அது நேற்று முன்தினம் பிசுபிசுத்திருந்தது. இதனையடுத்து நேற்றுக் காலை போராட்டம் நடைபெறும் இடத்துக்கு அண்மையாகப் பொலிஸாரால் நீதிமன்ற அறிவித்தல் ஒட்டப்பட்டது. அதில், ஒன்று கூடுவதற்கும் ஆர்ப்பாட்டம் செய்வதற்கும் அரசமைப்பில் தங்களுக்கு உள்ள உரிமையை நீதிமன்றம் மதிக்கிறது. அதேவேளை, பொது ஒழுங்குக்கும் பொதுமக்களின் நலனுக்கும் பாதிப்பு ஏற்படாது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க அறிவுறுத்தப்படுகின்றீர்கள் என்று குறிப்பி டப்பட்டிருந்தது.

### இயற்கையால் வஞ்சிக்கப்பட்டோருக்கு அஞ்சலி

முற்பகல் 10.15 மணியளவில், தென்னிலங்கையில் இடரினால் உயிரிழந்த மக்கள், போரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்து, கிறிஸ்தவ மதப் பிரார்த்தனைகளுடன் போராட்டம் தொடங்கியது. முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக, ஏ9 தேசிய நெடுஞ்சாலையை ஊடறுத்து காணாமற்போனோரைத் தேடும் உறவுகள் வீதியில் அமர்ந்தனர். ஏ9 வீதியை முற்றாக மறித்து அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். பொலிஸார் மாற்று வீதியின் ஊடாகப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர். மக்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அரசியல்வாதிகளும், பல்கலைக்கழக மாணவர்களும் அணி திரண்டிருந்தனர். கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றச் சட்டத்தரணிகளும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துக் கலந்து கொண்டிருந்தனர். ஊடகவியலாளர் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொடவும் இதில் பங்குபற்றியிருந்தார்.

தமக்கு உறுதியான பதில் கிடைக்காத வரை வீதியிலிருந்து அகலப் போவதில்லை என்று உறுதியாகக் கூறி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

### தலைமை அமைச்சரின் செய்தியுடன் வருகை

பிற்பகல் 1.30 மணிக்கு அண்மையாக, கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் போராட்டம் நடைபெறும் இடத்துக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்து ஒலிபெருக்கி ஊடாக மக்களுக்கான அறிவிப்பை வெளியிட்டார். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 7 ஆம் திகதி சந்தித்துப் பேசத் தயாராக இருப்பதாகவும், தலைமை அமைச்சர் செயலகத்தில் இது தொடர்பில் தான் பேசியதாகவும் குறிப்பிட்டார்.

காணாமற்போனோரைத் தேடும் உறவுகள் மாவட்டச் செயலரின் பதிலுடன் உடன்படவில்லை. யாழ்ப்பாணத்தில் நடந்த பொங்கல் விழாவில் வைத்துத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, காணாமற்போனவர்கள் உயிரிழந்துள்ளார்கள் என்று கூறியிருந்தார். அப்படிக் கூறியவருடன் எப்படிக் கதைக்க முடியும் என்று பதில் கேள்வி எழுப்பி, தலைமை அமைச்சரின் சந்திப்புக்கான அழைப்பைப் புறக்கணித்தனர்.

### ஆளுநர் அரச தலைவர் பேச்சு

இதற்கிடையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயுடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள இடர் நிலைமை தணிந்த பின்னர், இரண்டு வாரங்களுக்குள் சந்திப்பதாகக் கூறியுள்ளார். சம்பூரில் வைத்து கூறியதற்கு அமைவாக, காணாமற் போனவர்கள் எங்காவது தடுத்து வைக்கப்பட்டுள்ளார்களா என்பதை ஆராய்வதற்கான குழுவை அடுத்த வாரம் நியமிப்பதாகவும் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண ஆளுநர் குரே இந்தத் தகவலை, தனது செயலாளர் இ.இளங்கோவன் ஊடாக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகத்துக்கு அறிவித்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால, சந்திப்புக்கு விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்ட காணாமற்போனோரைத் தேடும் உறவுகள், தமது வீதி மறியல் போராட்டத்தை மாலை 4 மணிக்கு முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

### கண்காணிப்பும் பொலிஸார் குவிப்பும்

தேசிய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சிவில் உடையில் போராட்டக் களத்துக்கு அண்மையாக அதிகளவில் களமிறக்கப்பட்டிருந்தனர். அத்துடன் பொலிஸாரும் அந்தப் பகுதியில் பெருமளவில் நிறுத்தப்பட்டிருந்தனர். (த-5-35) (மேலும் படங்கள் 9 ஆம் பக்கத்தில்)

## புகைக்க...

மாக மட்டும் பெற்றுக்கொள்ளும் 33 கோடி ரூபாவில் 92 வீதமான பணத்தை வருடாந்தம் பிரிட்டன், அமெரிக்க நாடுகள் சூறையாடிச் செல்கிறன. இதுபற்றி இலங்கைப் புகையிலைக் கம்பனியின் கடந்த வருட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சிகரட் பாவனையால் நோய்களுக்கு உட்பட்டவர்களுக்கு மருத்துவச் செலவாக அரசு வருடமொன்றுக்கு செலவிடும் தொகை 72 பில்லியன் ரூபா என்று சுகாதார அமைச்சர் ராஜித கூறியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் புகைப்பொருள் உற்பத்தி நிறுவனங்கள் வருடம் ஒன்றுக்கு வரியாக அரசுக்கு 269 பில்லியன் ரூபாவை வழங்குகின்றன. புகைப்பதால் நோய்களுக்கு உள்ளாகுபவர்களுக்கு மருத்துவச் செலவாக அரசுகள் ஆயிரம் பில்லியன் ரூபாவைச் செலவிடுகின்றன. சிகரட் புகைக்கும் இருவரில் ஒருவர் நேரடியாகச் சிகரட் பாவனையாலேயே உயிரிழக்கின்றார். இலங்கையில் மட்டும் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் 3 பேர் என நாளொன்றுக்கு 72 பேரையும், வருடாந்தம் 26 ஆயிரத்து 280 பேரையும் புகைப்பொருள் கம்பனிகள் கொலை செய்கின்றன என்று சுகாதார அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

சிகரட் புகைக்கும் நால்வரில் ஒருவருக்குச் சிகரட் பாவனையாலேயே பாலியல் பலவீனம் ஏற்படுகிறது. பிரிட்டனில் நடத்தப்பட்ட ஆய்வில் 30 தொடக்கம் 50 வயதினரிடையே ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் சிகரட் பாவனையின் காரணமாகப் பாலியல் பலவீனத்திற்கு உட்பட்டுள்ளனர் என்று ஆய்வுகள் நிரூபித்துள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

இதேபோன்று இலங்கையர்கள் சாராயம் குடிப்பதற்காக நாளொன்றுக்குச் செலவிடும் தொகை 197 மில்லியன் ரூபா (சுமார் 20 கோடி) என்று சாராய உற்பத்தி நிறுவனத்தின் கடந்த வருட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையர்கள் பியர் குடிப்பதற்காக நாளொன்றுக்குச் செலவிடும் தொகை 100 மில்லியன் ரூபா (10 கோடி ரூபா) என்று காசன் கம்பர்பேஜ் நிறுவனம் கடந்த வருட அறிக்கையில் கூறியுள்ளது.

மதுசாரத்தினால் இலங்கை அரசுக்கு 60 பில்லியன் ரூபா வரியாக கிடைக்கப்பெறுவதோடு மதுசாரப் பாவனையால் நோய்களுக்கு உள்ளானவர்களுக்கு மருத்துவச் செலவாக 212.6 பில்லியன் ரூபாவைச் செலவிடவேண்டியுள்ளது என்று மதுசாரம் மற்றும் புகையிலை தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் மருத்துவர் பாலித அபேகோன் கூறியுள்ளார்.

மதுசாரக் கம்பனிகளினால் வருடமொன்றுக்கு 23 ஆயிரம் இலங்கையர்கள் அதாவது நாளொன்றுக்கு 65 பேர் கொலை செய்யப்படுகின்றனர் என்று மற்றொரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின்படி உலகளாவிய ரீதியில் மதுசாரக் கம்பனிகள் வருடமொன்றுக்கு 390 இலட்சம் மக்களைக் கொன்று குவிக்கின்றன என்று மதுசாரம் மற்றும் புகையிலை தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் மருத்துவர் பாலித அபேகோன் கூறினார். (த-4)

## யாழ்ப்பாண...

கொண்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காகக் கொழும்பு அரசு நிதியை தருகின்றது. ஆயினும் தற்போதைய சூழ்நிலையில் மண்,கிரவல் போன்ற கனியவளங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் மக்களின் மீள் குடியேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்குக் கனியவளம் முக்கிய பங்கை வகிக்கின்றது.

கனியவளத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையால் அபிவிருத்திப் பணிகள் பெருமளவில் பாதிப்படைகின்றன. இதனால் எமது மாவட்டத்தின் அபிவிருத்திக்குக் கிடைத்த நிதியைச் செலவழிக்க முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே இங்கு வருகை தந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் கனியவளப் பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெறும் வகையில் தீர்மானம் எடுத்து மாவட்டத்தின் அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள சவாலை தீர்க்க வேண்டும்- என்றார். (த-8)

## துயிலும்...

ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லம், சாட்டி மாவீரர் துயிலும் இல்லம் மற்றும் நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபி போன்றவற்றை புனரமைப்புச் செய்யவேண்டும். அதன் பின்னர் அவற்றை குறித்த பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் பராமரிக்க வேண்டும். அத்துடன் நல்லூரில் உள்ள திலீபனின் நினைவுத் தூபியை யாழ்ப்பாணம் மாநகர சபை பராமரிக்கவேண்டும் என ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி நடைமுறைப்படுத்த வேண்டும்-என்றார்.

இதற்கு ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் இணைத் தலைவர்களில் இரண்டு பேர் குறித்த கூட்டத்துக்கு சமுகமளிக்கவில்லை. இந்த விடயம் முக்கிய விடயம் என்பதால் இதனை அடுத்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அனைவரும் கலந்தாலோசித்து நல்லதொரு முடிவை எடுப்போம் எனத் தெரிவித்தனர்.


இதன்படி நாடாளுமன்ற உறுப்பினர் சிறி தரனின் கோரிக்கை அடுத்த கூட்ட்டத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் மட்டுமே கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-8)

## முதலாம்...

வதற்கான விண்ணப்பப் படிவம் நாளை வியாழக்கிழமை வெளியிடப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதனுடன் சுற்றறிக்கையும் வெளியிடவுள்ளதாகவும் கல்வி அமைச்சு மேலும் கூறியுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரஸ்வதி அணி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், மே 31

நல்லூர் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் அரியாலை சரஸ்வதி இளைஞர் கழக அணி சம்பியனானது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. சரஸ்வதி இளைஞர் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. இளைஞர் கழக அணி மோதியது.

இரண்டு அணிகளும் தலா 7 புள்ளிகளைப் பெற்றிருந்த நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் சிறிது ஆதிக்கம் செலுத்திய சரஸ்வதி அணி முடிவில் 15:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## இளங்கதிரின் விளையாட்டு மைதானம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது

கரணவாய், மே 31

வல்வை இளங்கதிர் விளையாட்டுக் கழகத்துக்கென புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு மைதானம் அண்மையில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

விளையாட்டுக் கழகத் தலைவர் செ.ஆனந்தராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வல்வை விளையாட்டுக்கழக மூத்த உறுப்பினர் மு.தங்கவேல் விளையாட்டுக் கழகத்தின் பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத்தின் செயலர் அ.அருளானந்தசோதி வல்வை விளையாட்டுக் கழகத் தலைவர் மு.பிறேம்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-108)

## கலைமதி - நவஜீவன்ஸ் அரையிறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், மே 31

வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் நாளை வியாழக்கிழமை நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது. இந்த ஆட்டம் மாலை 4 மணிக்கு வல்வெட்டித்துறை றெயின்போ மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)



## கரப்பந்தில் சாதித்தது சரஸ்வதி

யாழ்ப்பாணம், மே 31

நல்லூர் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் அரியாலை சரஸ்வதி இளைஞர் கழகம் சம்பியனானது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மணியம் தோட்ட இளைஞர் கழக அணியை எதிர்த்து அரியாலை சரஸ்வதி இளைஞர் கழக அணி மோதியது. 2:1 என்ற செற் கணக்கில் சரஸ்வதி அணி வெற்றி பெற்றது. (ம-23)



## உயரம் பாய்தலில் கிளிநொச்சி மகுடம்

யாழ்ப்பாணம், மே 31

வடமாகாண தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு உயரம் பாய்தலில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த ஜெ.வனிசா தங்கப் பதக்கத்தைப் கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த சனி, ஞாயிறு என இரண்டு தினங்கள் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

பெண்கள் பிரிவு உயரம் பாய்தலில் கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜே.வனிசா 1.43 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சி.ஹரீனா 1.43 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் ஏ.நர்மதா 1.40 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

## 400 மீற்றர் தடைதாண்டல்; யாழ்ப்பாணம் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மே 31

வடமாகாண தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு 400 மீற்றர் சட்ட வேலி ஓட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த கே.கிரு சாந்தி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்தத் தொடர் நடைபெற்றது. பெண்கள் பிரிவு 400 மீற்றர் சட்ட வேலி ஓட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.கிரு சாந்தி 1 நிமிடம் 18 செக்கன்கள் 40 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து தங்கப் பதக்கத்தையும், மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மதுரா 1 நிமிடம் 19 செக்கன்கள் 50 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும், யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சி.[illegible] 1 நிமிடம் 20 செக்கன்கள் 10 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத் தையும் கைப்பற்றினர். (ம-422)



# சரஸ்வதி சம்பியன்

யாழ்ப்பாணம், மே 31

நல்லூர் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர், பெரு விளையாட்டு, உள்ளக விளையாட்டு ஆகியவற்றின் அடிப்படையில் ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் சரஸ்வதி அணி சம்பியனாது.

74 புள்ளிகளை சரஸ்வதி அணி பெற்றுக் கொண்டது. கே.ஸி.ஸி.ஸி. இளைஞர் கழகம் 68 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும், சங்கிலியன் இளைஞர் கழகம் 60 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தையும் தமதாக்கின. (ம-23)

## பொம்மர்ஸ் அணி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மே 31

வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் வதிரி பொம்மர்ஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது. வல்வெட்டித்துறை றெயின்போ மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பொம்மர்ஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம் பன்ஸ் அணி மோதியது. சாரங்கனின் உதவியுடன் பொம்மர்ஸ் அணி முதல் கோலைப் பதிவுசெய்தது.

வேறெந்த மாற்றங்களும் ஏற்படாத நிலையில் முதல் பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது பொம்மர்ஸ் அணி.

இரண்டாம் பாதியில் யங்கம் பன்ஸின் முதல் கோலைப் பதிவுசெய்தார் ரதன். இரு அணிகளும் மேலதிக கோல்கள் எதனையும் பதிவு செய்யாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது பொம்மர்ஸ். (ம-23)

## இந்தியாவை பாகிஸ்தான் நிச்சயம் தோற்கடிக்கும்
### யுனிஸ்கான் நம்பிக்கை

"மினி உலகக்கிண்ணத் தொடரின் லீக் ஆட்டத்தில் இந்தியாவை பாகிஸ்தான் நிச்சயம் தோற்கடிக்கும்" இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் யுனிஸ்கான்.

மினி உலகக்கிண்ணத் தொடரில் எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. இந்த ஆட்டம் பெரிய அளவில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் வெற்றிபெறும் என்றவாறாக நம்பிக்கை வெளிப்படுத்தினார் யுனிஸ்கான்.

"தற்போதைய பாகிஸ்தான் அணியால் இந்தியாவை வீழ்த்தக்கூடிய திறமை உள்ளது. கடந்த காலங்களில் மினி உலகக்கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் சிறப்பாக விளையாடியுள்ளது. மினி உலகக்கிண்ண ஆடுகளங்களில் 400 ஓட்டங்களைக் கூட [illegible] அதைப் பாகிஸ்தான் திறம்படச் செய்யும்" என யுனிஸ்கான் மேலும் தெரிவித்தார். (ம)

## 100 மீ. சட்டவேலியில் அனித்தா சாதனை

யாழ்ப்பாணம், மே 31

வடமாகாண தடகளத்தில் பெண்கள் பிரிவு 100 மீற்றர் தடைதாண்டலில் யாழ்ப்பாண மாவட்ட வீராங்கனை அனித்தா புதிய சாதனையைப் படைத்தார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்தத் தொடர் நடைபெற்றது. பெண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டலில் அனித்தா தனது சாதனையைத் தானே தகர்த்துத் தங்கம் வென்றார். கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.மரிய தயா நந்தினி 19.1 செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும், யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த சேர்ந்த சி.தீபிகா 19.4 செக்கன்களில் ஓடிமுடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரபேல் நடால் முன்னேற்றம்

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற பிரான்ஸ் தொடரில் இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றார்



ஸ்பெயின் வீரர் ரபேல் நடால்.

நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் நடாலை எதிர்த்து பிரான்ஸ் வீரர் பெனொய்ட் மோதினார்.

ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் முறையே 6:1, 6:4, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார் நடால். (ம)



# வவுனியா தமிழ் மத்திய ம.வி. பூப்பந்தில் கிண்ணம் வென்றது

கரணவாய் மே 31

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரில் 20 வயது ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் சம்பியனானது.

மன்னார்பொதுவிளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும் மன்னார் சென். சேவியர் கல்லூரியும் மோதின. 3 தனிநபர் ஆட்டங்களையும் 2 இரட்டையர் ஆட்டங்களையும் கொண்டதாக இறுதி அமைந்தது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய வீரன் துசன் 2:1 என்ற செற் கணக்கில் சென். சேவியர் வீரரான நிசந்தபாலனை வீழ்த்தினார்.

இரண்டாவது தனிநபர் ஆட்டத்தை சென். சேவியரின் திலக்சன் 2:1 என்ற செற்கணக்கில் தமிழ் மத்திய மகா வித்தியாலய வீரன் ஜோன்சனை வீழ்த்த செற் 1:1 என்று சமநிலையானது.

மூன்றாவது செற்றில் வவுனியாவின் சுலக்சன் 2:0 என்று சென். சேவியர் அணியின் வீரரான கிருசோத்தமனை வீழ்த்த 2:1 என தமிழ் மத்திய மகா வித்தியாலயம் முன்னிலை பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற முதலாவது இரட்டையர் ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் துசன் மற்றும் ஜோன்சன் இணை சென். சேவியரின் நிசந்தபாலன் மற்றும் திலக்சன் இணையை 2:0 என்ற செற்கணக்கில் வீழ்த்த 3:1 என்ற செற் கணக்கில் வெற்றியைத் தமதாக்கி சம்பியனாகியது வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம். மூன்றாமிடத்தை கிளிநொச்சி மகா வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

(ம-108)

# இன்றைய மோதல்கள்

கரணவாய், மே 31

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# ஜோகோவிக் அசத்தலாட்டம்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் சேர்பிய வீரர் ஜொகோவிக்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் 50ஆவது இடத்தில் உள்ளவரான ஜோகோவிக்கை எதிர்த்து தரப்படுத்தலில் முதல் 50 இடங்களுக்



குள் இல்லாத மார்சல் மோதினார்.

முதல் மூன்று செற்களையும் முறையே 6:3, 6:4, 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார் ஜோகோவிக்.

புதிய பயிற்சியாளர் ஆந்த்ரே அகாசியுடன் இணைந்த பிறகு ஜோகோவிக் பெற்ற முதல் வெற்றி இதுவாகும். நடப்பு வருடத்தில் எந்தவொரு முக்கிய தொடரையும் ஜோகோவிக் இதுவரை கைப்பற்றவில்லை. இதனால் பிரான்ஸ் தொடரைக் கைப்பற்றுவாரா என்பது தொடரில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. (ம)

# தங்கக் காலணியை வென்றார் மெஸ்ஸி



ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லிகா தொடரில். அதிக கோல்களைப் பதிவு செய்ததன் அடிப்படையில் தங்கக் காலணியைக் கைப்பற்றினார் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் லயனல் மெஸ்ஸி.

37 கோல்களைப் பதிவுசெய்து 77 புள்ளிகளுடன் இந்த விருதை மெஸ்ஸி வென்றார். இது மெஸ்ஸியின் 4ஆவது தங்கக் காலணி விருதாகும். ரொனால்டோ 4 தடவைகள் இந்த விருதைக் கைப்பற்றியி ருந்தமையே சாதனையாக இருந்தது. இதை மெஸ்ஸி சமப்படுத்தினார். (ம)

மினி உலகக் கிண்ணம்

1 நாள் மட்டுமே



## தலைமையே தலைவிதி

இங்கிலாந்தில் நாளை ஆரம்பமாகிறது மினி உலகக்கிண்ணத் தொடர். இந்தத் தொடரில் இலங்கை அணியின் தலைவிதியை தீர்மானிக்க வல்லவராக அந்த அணியின் தலைவர் மத்தியூஸ் உள்ளார். இந்தத் தொடரில் அணித்தலைவரை அதிகம் நம்பியிருக்கும் அணியாகவும் இலங்கையே உள்ளது.

இங்கிலாந்து ஆடுகளங்களில் வேகப்பந்துவீச்சு மேற்கொள்ளக்கூடியவரும், துடுப்பெடுத்தாட வல்லவருமே அணிக்குத் தேவை. இத்தகைய திறமை படைத்தவரே மத்தியூஸ். இந்த அடிப்படையிலேயே அவர் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒருவராக உள்ளார்.

அசல குணரத்னவும் மத்தியூஸைப் போன்ற திறமை படைத்தவரென்பதால் அவர் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இடம்பிடிப்பார். வேகப்பந்தைப் பொறுத்தவரை குலசேகர, மலிங்க என்ற கூட்டணி சிறப்பாகச் செயற்படும். துடுப்பாட்டத்தில் சந்திமல், தரங்க, குசல் மென்டிஸ், கப்புக்கெதர பலமாக உள்ளனர். இலங்கை அணிக்கு இருக்கும் முக்கிய பிரச்சினை அன்னிய மண்ணில் விளையாடிப் பழக்கமில்லாதமையே. இது சரிசெய்யப்படும் பட்சத்தில் இலங்கை சிறந்த பெறுபேறை வெளிப்படுத்தும். இலங்கை அணி விவரம் மத்தியூஸ் (தலைவர்), சந்திமல், நுவன் பிரதீப், கப்புகெதர, லக்மல், குசல் மென்டிஸ், திசர பெரேரா, சன்டகன், தரங்க, டிக்வெல்ல, அசல குணரத்ன, மலிங்க, குசல் பெரேரா, பிரசன்னா.




# மெதடிஸ்த பெண்கள் சம்பியன்




கரணவாய், மே 31

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பூப்பந்தாட்டத்தில் 17 வயது பெண்களுக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி நடப்பு வருட மாகாணச் சம்பியனாகியது.

மன்னார் பொது விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதின. மூன்று தனிநபர் ஆட்டங்களையும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த பிரசாந்தி, ராகவி மற்றும் நதுசிகா ஆகியோர் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த சரண்யா, சியானுஜா மற்றும் தமிழ்ப்பிரியா ஆகியோரை முறையே 2:0, 2:0, 2:1 என்ற செற்கணக்கில் வெற்றிகொள்ள மெதடிஸ்த பெண்கள் அணி 3:0 என்ற அடிப்படையில் மாகாணச் சம்பியனானது. மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சுன்னாகம் மயிலணி வித்தியாலத்தை 3:0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தை தனதாக்கியது.

(ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரசிகர்கள் கண்ணீர் மல்க விடைபெற்றுச் சென்றார் பிரான்சிஸ்கோ டொட்ரி




இத்தாலியின் கால்பந்தாட்ட ஜாம்பவானான பிரான்சிஸ்கோ டொட்ரி, கண்ணீருடன் பன்னாட்டு கால்பந்தாட்ட அரங்கில் இருந்து விடைபெற்றுச் சென்றார். தனது வாழ்நாளில் உரோமா கழகத்துக்காக மட்டும் விளையாடிய டொட்ரி நேற்றுமுன்தினம் தனது இறுதியாட்டத்தில் விளையாடி வெற்றியுடன் சென்றார். ஜெனோவுக்கெதிரான குறித்த ஆட்டத்தில் 3:2 என்ற கோல் கணக்கில் உரோமா அணி வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தின் 54ஆவது நிமிடத்தில், மாற்றுவீரராகக் களமிறங்கிய டொட்ரி, கிட்டத்தட்ட 40 நிமிடங்கள் தனது இறுதியாட்டத்தில் பங்கெடுத்தார். உரோமாவுக்காக் அவர் இறுதியாக விளையாடிய ஆட்டத்தை நினைவுபடுத்தும் முகமாக இடம்பெற்ற பரிசளிப்பில் கண்ணீர் மல்கினார். பரிசளிப்பின் போது, டொட்ரியின் ஜெர்சி இலக்கமான 10 என்ற இலக்கம் பதிக்கப்பட்ட நினைவுச் சின்னம் அவருக்கு வழங்கப்பட்டது. தனது 16ஆவது வயதில் உரோமாவுக்காக தனது அறிமுகத்தை மேற்கொண்டார். தற்போது 40 வயதாகும் டொட்ரி உரோமாவுக்காக 786 ஆட்டங்களில் விளையாடி, 307 கோல்களைப் பதிவுசெய்துள்ளார். உரோமா அணியின் சார்பாக அதிக ஆட்டங்களில் விளையாடியவர், அதிக கோல்களைப் பெற்றவர் போன்ற அடைவுகள் டொட்ரியிடமே உள்ளன. இன்னும் சில மாதங்களில் அவர் உரோமா அணியை பயிற்றுவிக்கவுள்ளார் என்றும் சில தகவல்கள் வெளிவந்துள்ளன. (ம)

திருமணம், பூப்புனித நீராட்டு, பிறந்தநாள் விழா
Video Editing
பயிற்சி முடிவில் 100% வேலைத் திறனிற்கு உத்தரவாதம்
தொலைக்காட்சியில் பணிபுரியும் ஆசிரியரால் கற்பிக்கப்படும்
10 Days 20 Hours
Adobe Premiere CC, Edius 7, Adobe After Effect, Video Plug-ings, Adorage filter, Gold Make-up, New Blue Skin Touch-up, Video Color Tune-up, Looks, Song Editing Technic, Blu-ray Burning
புதிய பிரிவுகள் ஆரம்பம் 03rd June 2017
பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன
விபரங்களிற்கு: MCS IT Campus-Jaffna 0773903123

இன்று முதல் ஸ்ரான்லி வீதியில்....
பிரம்மாண்ட திறப்பு விழா
ASHOK LEYLAND | TATA
எல்லா வகை வாகன உதிரிப்பாகங்களும் ஒரே கூரையின் கீழ்
NST
NST Motor STORES
Time : 11.15-12.15 p.m
Date : 01.06.2017
NST Motor Stores
177B Stanly Road
Jaffna
Tel : 021 221 6887
Koyo. | TATA | ASHOK LEYLAND

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 30.05.2017 | வெற்றிவாரம் 2139 | வர்ணம் நீலம்
கடகம் 04 07 27 42
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி ரூ 2, 786, 628/=
2017.06.02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

IELTS (Academic / General)
புதிய பிரிவுகள் ஆரம்பம் - 06.06.2017
யாழ்.மண்ணில் IELTS கற்கைநெறி வழிகாட்டலில் கடந்த 7 வருடங்களுக்கு மேல் முன்னிலை வகிக்கும் கல்லூரியில் நீங்களும் இணைந்துகொள்ளலாம்.
உங்கள் அதி உயர் 'Band' இற்கு நாங்கள் உத்தரவாதம்
ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கற்றல் ஒழுங்குகள்.
IELTS மாதிரி வினாத்தாள்களில் உயர் பெறுபேறு அடையும்வரை கற்றல் வசதிகள்.
மாணவர்கள் நேர வசதிக்கு ஏற்ப வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்படும்.
Listening, Reading, Writing, Speaking என்பன தனிப்பட்ட ரீதியில் கற்பிக்கப்படும்.
ஒவ்வொரு வகுப்பிலும் கூடியது 8-10 மாணவர்வரை மட்டுமே உள்வாங்கப்படுவர்.
மேலதிக விவரங்கள் மற்றும் பதிவுகளுக்கு - 076 419 0327
Address :- London metropolitan college
No.136, Palaly Road, Parameswara Junction Jaffna.
(தினேஷ் பேக்கரி கட்டடத் தொகுதி மேல்மாடி)
Ph Number :- 021 753 8395

## சேவை நலன் பாராட்டு



Congratulations

எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வி ஆசிரியையாக சிறப்புறக்கடமையாற்றி இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும் பாடசாலை அபிவிருத்தியில் பெரும் பங்காற்றிய

Congratulations

**திருமதி**
**தர்மறஞ்சினி நாகராஜன்**

ஆசிரியை அவர்கள் ஓய்வுக்காலத்தில் நோய்நொடியின்றி சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர்கழகம்**
**யா/நீர்வேலி சி.சி.த.க**
**பாடசாலை**

## மரண அறிவித்தல்கள்

### செல்வி மேரிலூட்ஸ் ஞானப்பிரகாசம்

(ஓய்வுநிலை ஊழியர், அரச முதியோர் இல்லம், கைதடி)



பிறப்பு 21.02.1956 இறப்பு 30.05.2017

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மேரிலூட்ஸ் ஞானப்பிரகாசம் நேற்று (30.05.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் மேரி மாகிறேட் தம்பதியரின் அன்புஇரண்டாவதுமகளும்ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (01.06.2017) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் நாவற்குழி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனித அந்தோனியார் கோயிலடி, கேரதீவு வீதி, நாவற்குழி.
தகவல்: குடும்பத்தினர். 0772211356, 0777680230

### செல்லையா துரைராசா



சித்திவிநாயகர் கோயிலடி, நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் துரை வீதி கோண்டாவிலை வசிப்பிட மாகவும் கொண்ட செல்லையா துரைராசா (29.05.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினேஸ்வரி (மணி) யின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லையா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் - யோகம்மா தம்பதியரின் அன்புமருமகனும் குமாரசுவாமி காலஞ்சென்ற சிவலிங்கநாதன் மற்றும் ராசம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ் சென்ற கங்கா மற்றும் கோமகன், கோவேந்தன், கோகுலன், கோகுல வர்மன், கோகுல வர்த்தனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகிர்தா, துஷியந்தி, சிரோமி, மீனலோஜினி ஆகியோரின் மாமனாரும் பேரெமினி, வேழினி, கரிஷ், அலர்க்கா, அக்சயா, ஆகீசன் ஆகியோரின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2017) புதன்கிழமை பி.ப. 11 மணியளவில் K.K.S.வீதி கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S. வீதி, கோண்டாவில்.
தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா கணபதிப்பிள்ளை

(பாட்டா ஐயா)



நெடுந்தீவு 14 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.39, உதயநகர் கிழக்கை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கணபதிப்பிள்ளை (பாட்டா ஐயா) 29.05.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (31.05.2017) அவரின் உதய நகர் கிழக்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணிக்கு திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### பிலிப் துரைரட்ணம்

பத்தாவத்தை, இளவாலையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பிலிப் துரைரட்ணம் நேற்று (30.05.2017) செவ்வாய்க்கிழமை இறைவடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி எலியாஸ் - சிசிலியா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி லூர்துநாயகி துரைசாமி, மேரிதிரேசா ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற செல்வி இராஜேஸ்வரி துரைசாமி மற்றும் அன்ரனிராஜா, புஸ்பரட்ணம், அருட்சகோதரி Bernice (கார்மேல் சபை), நீதிராஜா, நேசராஜா, அருட்சகோதரி புவனா (திருக்குடும்ப கன்னியர் சபை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் பத்தாவத்தையிலுள்ள அவரது இல்லதிலிருந்து இன்று (31.05.2017) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு சேந்தாங்குளம் புனித ஆரோக்கிய நாதர் தேவாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு 4.30 மணிக்கு இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் சேந்தாங்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(ஏ.வி.எஸ்) (0064)

தகவல்
மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.